கல்கி

KALKI 12.11.1967

40 காசு





பருத்தியில் பல அற்புதங்கள்

பாப்ளின்கள்
ஷர்ட்டிங்குகள்: ஸ்ட்ரைப், டாப்பி, செக், பைஜாமா
வேஷ்கள்: ப்ளாடினம், ராஜா ஸ்பெஷல்
மெர்ஸிரைஸ்ட் லான்: 5531
சூட்டிங்குகள்: காபர்டீன்
ப்ரின்டுகள்: ப்ரின்டெட் லான்கள், வாயில்கள், பாப்ளின்கள்
செசவுசெய்த கலர் புட்டாக்கள்:
லெனோ மற்றும் புட்டாக்களில்
2x2 ஃபேன்ஸி ஃபுல் வாயில்கள்

Arvind Quality FABRICS

SANFORIZED

TEBILIZED* and
TEBILIZED Double Tested
*REGISTERED USERS

அரவிந்த் மில்ஸ் லிமிடெட்
அகமதாபாத்

ஏகபோக விற்பனை ஏஜென்டுகள்:
மெஸர்ஸ் அஜித்பாய் ஜயந்திலால் சோமாபாய் படேல் & கோ. 5, கிடங்குத் தெரு, மதராஸ்.

தீபாவளி முதல்

சாந்தி
(டீலக்ஸ் ஏர்கண்டிஷன்ட்)
பிராட்வே
சயானி மற்றும்
தென்னாடெங்கும்.



கே. சி. பிலிம்ஸ்...

ஊட்டி வரை உறவு

ஈஸ்ட்மென்கலர்

ஸ்ரீதர்

தயாரிப்பு
கோவை செழியன் B.A

ஸ்பென்ஸர் 'டீ' தான்
சந்தேகமில்லை!

ஸ்பென்ஸர் 'டீ'யின் சுவையும்,
மணமும் தனிப்பட்டவை.
தரத்தை விரும்புவோர்
அனைவரும் கேட்டு வாங்குவது
ஸ்பென்ஸர் தேயிலையைத்தான்.

ஸ்பென்ஸர் 'கிரீன்லேபல்'
'ரெட் பாண்ட்' மற்றும்
'பீகோ டஸ்ட்' ஆகியவை
நீலகிரியின் உயர் மிகு
சாரல்களில் பயிராகும்
தேயிலை ரகங்கள்.



உங்கள் தேவைக்கேற்ப
100, 250 மற்றும் 500
கிராம் கார்டன்களில்
கிடைக்கின்றன.

ஸ்பென்ஸர் அண்டு கோ.,
லிமிடெட்
சென்னை மற்றும் கிளைகள்





FDSST853



டாக்டர்: இப்படி மனக் கவலை உங்களுக்குக் கூடாது.. இப்படித் தான்! போன வாரம் உங்க பிரெண்டர், தான் கொடுக்க வேண்டிய 2000 ரூபாயைப் பற்றிக் கவலைப் பட்டார்... 'கொடுத்தவன்னா கவலைப்படணும்? நீங்க ஏன் கவலைப்படுறீர், நிம்மதியா வெளியூருக்குப் போய்க் கொஞ்ச நாள் இருங்கள்' என்றேன். மனுஷன் சந்தோஷமாப் போயிட்டார்.

வந்தவர்: நான் தானே ஐயா, அவருக்குப் பணம் கொடுத்தேன்?

கல்கி பொருளடக்கம்

பிலவங்க, ஐப்பசி 26 - நவம்பர் 12

நேருஜியும் ராஜாஜியும்	5
ராஜாஜியின் கருத்துக்கள்	11
சினிமா	14
கனடா நாட்டுத் திரைப்பட...	15
அறிவையே நாடும் அற்புத...	17
கல்லுக்குள் ஈரம்	22
பல்சுவைப் பக்கம்	28
எங்கும் 'சு.க' என்பதே பேச்சு	30
மணக் கோலம்	33
அபவாதம்	42
யாரோ இவர் யாரோ?	51
நேரு தலையில் புரு!	61
மல்லிகைச் சரம்	62
குட்டிக் கதைகள்	72
பிள்ளை தானம்	74
வட்ட மேஜை	80

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


நாங்கள் பாங்குகளைச் சர்க்கார் உடைமை யாக்க வில்லை.
உலக பாங்கு
மிஸ்டர் கோஸிஜின்! பிரச்னை ஏதேனும் உள்ளதா?
அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளுக்கு இந்திராவின் தீர்வுகள்.
P.K



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 ★ இதழ் 15

நேருஜியும் ராஜாஜியும்

பேரன்புக்குரிய நேரு அவர்கள் ஜீவியவந்தராக இருந்திருந்தால் இம் மாதம் பதினைந்காம் தேதி அவர் எழுபத்தொன்பதாம் பிராயத்தைத் தொடங்கியிருப்பார். பிறப்பும் வயதும் உடைய அவரது சரீரம் மறைந்துவிட்டது. ஆயினும், அன்பு நினைவு மறையவில்லை. அவரது பிறந்த தினத்தையொட்டி, பச்சைக் கர்ப்பூரத்துடன் குங்குமப் பூவைக் கலப்பது போல் அவரது நினைவோடு நமது தனிப் பெருந் தலைவர் ராஜாஜியின் தொடர்பையும் கலந்து நினைக்கிறோம். இவ்விரு மகாபுருஷர்களிடையே இலங்கிய நட்பு இலக்கியச் சிறப்புப் பொருந்தியது. கொள்கையில் வேற்றுமையிருப்பினும் அன்பில் ஒன்றியிருந்த அவர்களது தூய நட்பின் நினைப்பு வெறுப்பும் மாற்சரியமும் நிறைந்த மனங்களுக்கெல்லாம் மருந்தாகும். சொந்தப் பாசங்களை வெளி உலகுக்குக் காட்டாமல் இதயத்தோடு வைத்துக் கொள்பவர் ராஜாஜி என்பதை நாமறிவோம். அவரே இந்த இதிகாசத்துக்குரிய தோழமையை நினைவு கூர்வதை வரவேற்கிறார்.

''தில்லியில் நானும் ஜவாஹர்லால் நேரு அவர்களும் ஒத்துழைத்தது எம்முறையில் முடிவு பெற்றது என்பது சில இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் தெரியாது. அங்கே நான் வேண்டாதவனாகி விட்டபடியாலேயே அங்கிருந்து கிளம்பி வந்து விட்டேன் என்றும் சில விவரம் தெரியா இளைஞர்கள் எண்ணுகிறார்கள். தில்லியிலிருந்து ஒரு முறை பதவி விட்டு நான் வந்த பிறகும் மீண்டும் இரு முறை வேறு பதவிகளை ஏற்க அங்கு நான் செல்ல வேண்டியிருந்தது. என்னுடைய ஓய்வுக்கு ஸ்ரீ நேருவிடமிருந்து மும்முறை 'தள்ளி வைப்பு' ஆன பிறகே, 1951 டிசம்பரில், ''இனி என் தேக நிலை 'தள்ளி வைப்பை'த் தாங்காது'' என்று சொல்லி விடை பெற்றேன்.'' — இவ்வாறு கூறுகிறார் ராஜாஜி.

பதினேழாண்டுகளுக்குமுன் அவர் கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து விலகித் தமிழகம் புறப்படுமுன் நேரு அவர்கள் ஆற்றிய பிரிவுபசார உரையும், அதற்கு ராஜாஜி பகர்ந்த விடையும் நெஞ்சை நெகிழ்விப்பனவாகும். இவ்விரு பெருந் தலைவர்களின் பரஸ்பர அன்புக்கு இந்த உரைகளே சின்னம் எனலாம். அவற்றை இங்கு வாசகர்கள் முன்பு வைக்கிறோம்.

ஃ ஃ ஃ

1950ம் வருடம் ஜனவரி 24ந் தேதி இரவு (அதாவது இந்தியக் குடியரசு உருவாவதற்கு இரண்டு நாட்கள் முன்பு) கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து விலகும் ராஜாஜிக்கு அளிக்கப்பட்ட விருந்தில் இவ்வுரைகள் நிகழ்த்தப்பட்டன. அப்போது பிரதமர் நேருஜி ராஜாஜியை விளித்துப் பேசியதிலிருந்து சில பகுதிகள் :

''இன்னும் ஒரு நாள் சென்றபிறகு இந்திய அன்னை ஒரு புதுக் கோலம் பூணுவாள். அவளது நீண்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கும். இந்த மகத்தான மாறுதல் எவ்வித சிரமமும் இன்றி இரு சாராரின் இணக்கத்தின் மீது ஏற்பட்டிருப்பது இந்தியர்களின் பாக்கியம் எனலாம். (டொமினியன் அந்தஸ்தில் பாரதம் சுதந்திரம் பெற்றதிலிருந்து) கடந்த இரண்டரை ஆண்டுகளாக இம்மாறுதல் சிறுகச் சிறுகத் தடையுறுமல் நிகழ்ந்து வந்திருக்கிறது. இம்மாறுதல் தங்குதடையின்றி ஒருசீராக நடைபெறுவதற்குப் பலர் உதவி புரிந்த போதிலும், கடந்த சுமார் இருபது மாதங்களாகப் பாரத நாட்டின் தலைமைப் பதவியிலிருந்த தாங்கள் செய்த உதவி மிகப் பெரியது எனலாம். கடைசி கவர்னர் ஜெனரலாகத் தாங்கள் அரங்குக்கு வந்தீர்கள். கடந்த சுமார் இருபது மாதங்களில் தாங்கள் வகித்த இப்பதவி முறை இன்னும் ஒன்றரை நாட்களில் முடிவடையும்.

வாரன் ஹேஸ்டிங்ஸுடன் கவர்னர் ஜெனரல் பதவி இந்தியாவில் 177 ஆண்டுகளுக்குமுன் தொடங்கியது என எண்ணுகிறேன். ஒரே பதவி வகித்தவர்களின் வரிசையில் வாரன் ஹேஸ்டிங்ஸையும் தங்களையும் சேர்த்து நினைப்பதே விசித்திரமாயிருக்கிறது. ஆனால் இந்த விசித்திரமே நம் நாட்டில் நடைபெற்ற மாறுதலை விளக்குகிறது.

"(பிரிட்டிஷ் ஆட்சியின்) பின்னணிக்கு முற்றிலும் மாறுபட்ட சூழலோடு தாங்கள் அரங்கில் பிரவேசித்தீர்கள். இப்பதவியின் வழக்கங்களும், ராஜபோக ஆடம்பரங்களும், படாடோபங்களும் தங்களுக்கு முற்றிலும் புதிதானவை. விந்தையாக நீங்கள் ஒன்று செய்து விட்டீர்கள். 'அரண்மனைகூட ஒருவருக்குக் குடிலாகிவிடலாம்; குடிலும் அவருக்கு அரண்மனையாகி விடக்கூடும்' என்று மக்கள் உணருமாறு செய்து விட்டீர்கள். அரண்மனையா, குடிலா என்பது தங்களிடம் இம்மியளவு மாறுபாட்டையும் உண்டாக்கவில்லை. வைஸராய் மாளிகையில் வசித்தாலும் சரி, சென்னை ராஜ்யத்தில் சேலம் மாவட்டத்தில் ஒரு குக்கிராமத்தில் வசித்தாலும் சரி, தங்களுடைய வாழ்முறையிலும் சிந்தனைப் போக்கிலும் வாசஸ்தானம் எந்த மாறுபாட்டையும் செய்யவில்லை.

"கடந்த மூப்பதாண்டுகளில் நான் பல சந்தர்ப்பங்களில் தங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறேன். இதில் நாம் பரஸ்பர நேசத்தில் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறோம் என்பதை மரியாதையுடன் தெரிவித்துக் கொள்ள முற்படுகிறேன். எனினும், குறிப்பாகக் கடந்த இருபது மாதங்களில் விதி நம்மைப் பல நிலைகளில் நெருங்கச் செய்திருக்கிறது. இந்த இருபது மாதங்களில் தாங்கள் சட்டபூர்வமான கவர்னர் ஜெனரல் என்பது ஒருபுறமிருக்க, தங்களையே நான் மிக மிகச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது.

"தாங்கள் கவர்னர் ஜெனரல் என்பதால் தான் தங்களிடம் நான் வந்தேனோ, அல்லது தாங்கள் நன்கறிமுகமான தோழர், முதிர்ந்த ஞானம் வாய்ந்தவர் என்பதால் வந்தேனோ என்று சொல்லத் தெரியவில்லை. மனத்திலும் உள் மனத்திலும் அடிக்கடி கலக்கம் கண்டதாலேயே தங்களிடம் வந்தேன். தங்களது நல்லுரையை நாடினேன். எப்போதுமே அது எனக்கு மிகுந்த உதவி புரிந்ததையும் கண்டேன்.

"எனவே, தாங்கள் இங்கிருந்து புறப்படும் சமயம் நெருங்கும்போது என்னுள் ஓரளவு சூனிய உணர்ச்சி — ஏதோ ஓர் இழப்பு — ஏதோ ஒரு துயரம் — ஏற்படுகிறது. எனக்கு மிகவும் தேவைப்படும் போது தங்களது நல்லுரை கிடைக்காமற் போய் விடலாம் என்ற ஓர் அச்சமும் ஏற்படுகிறது.

"நம்மில் பலர் மகாத்மா காந்தியின் பெயரை மொழிகிறோம். சில சமயங்களில் நம்மில் சிலர் அப்பெயரை நமக்குச் சௌகரியமாக உபயோகிக்கிறோம். அவர் நின்று நிலை நிறுத்திய ஆதாரமான, அடிப்படையான விஷயங்களை மறந்து, அவரது எண்ணற்ற செயல்களில் சில சிறிய அம்சங்களை மட்டும் எடுத்துக் கொண்டு அவற்றுக்கு அழுத்தம் தருகிறோம். ஆனால் தாங்களோ அந்த ஆதாரமான, அடிப்படையான அம்சங்களையே வலியுறுத்தி வாழ்வதைக் கண்டு வந்தேன்.

"இந்திய மக்களிடம் ஆழ்ந்த அன்பு படைத்தவர் தாங்கள். எனினும் உணர்ச்சி வேகத்தில் ஜனரஞ்சகமாக அடித்துச் செல்லப்படுவதற்குத் தாங்கள் ஒரு போதும் அநுமதித்ததில்லை. இதை அனைவரும் அறிவோம். மனத்தையும் ஆன்மாவையும் அடக்கி ஆளத் தெரிந்தவர் தாங்கள். இதனால்தான் ஆதியிலிருந்தே, மகாத்மா காந்தியே ஒரு யோசனை தெரிவித்தாலும்கூட அதனை உணர்ச்சியால் மட்டும் ஏற்பதைத் தடுத்து நின்றீர்கள். குறிப்பிட்ட ஒரு பிரச்னையில் தங்கள் கருத்து சரியா, தப்பா என்பது விஷயமல்ல. எதையும் உணர்ச்சி அடிப்படையில் மட்டும் செய்யாத பாங்கு தங்களது மனத்தின் — ஆன்மாவின் — உண்மையான தரத்தைக் காட்டியது என்பதே குறிப்பிட வேண்டியது.

"எனவேதான், தாங்கள் இந்த உயர்பதவியில் இருந்த போதும் இப்பதவிக்கே ஒரு சிறப்பை ஏற்படுத்தித் தந்தீர்கள். இந்தச் சிறப்பு தெற்றெனப் பளிச்சிட்டதற்குக் காரணம், அந்த உயர்சிறப்போடு இணைந்த தங்களது பரிபூரண எளிமையும் வெள்ளை உள்ளமுமேயாம். ஆன்மாவின் மகத்துவத்துக்கும் வெளி உலகத்தின் பகட்டுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆயின், தெரிந்த விஷயமாயினும் இதை நாங்கள் புரிந்து கொண்டுவிடவில்லை. தங்களாலோ இதை வெளிப்படவே காட்ட முடிந்தது. அதே போல், கௌரவம் என்பதும் மனத்தின் போக்குகளுக்குச் சம்பந்தப்பட்டதல்ல என்று காட்டினீர்கள்.

"நமது தேசிய இயக்கத்தின் 'பழம்' காவலர்கள் என்று சொல்லத்தக்க சிலர் எஞ்சியிருக்கிறோம். அவர்களது எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. நம்மில் சிலராவது இருக்குமளவும், ஒருவரை ஒருவர் எதிர்பார்க்கிறோம். இன்னும் இரண்டு மூன்று நாட்களில் தங்களிடமிருந்து விடைபெற்றாலும், இது உண்மைப் பிரிவல்ல. நிரந்தரமாகக் கடைசியில் எல்லாவற்றையும் விட்டுப் பிரிந்து போகிறோமே அதுதான் பிரிவு; அதுவரையில் பிரிவது என்பதில்லை. இப்போது தாங்கள் பிரிந்தாலும் தேவை ஏற்படும் போது, எங்களது அன்புமட்டுமின்றி நாட்டின் அவசியமும் தங்களை வேறு பணிகளுக்கு அழைக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன். தாங்கள் இத்துணை நீண்ட காலமாக எந்த நாட்டுக்காக வாழ்ந்து தொண்டு செய்திருக்கிறீர்களோ, அத்தேசத்தின் தேவை தங்களை அழைக்கும். இத்தகைய தேவை எப்போதும் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கும். 'எப்படியும் தாங்கள் இருக்கிறீர்கள்; எங்களுக்குத் தாங்கள் தேவைப்படும்போதெல்லாம் திரும்பி வருவீர்கள்' என்ற உணர்வில் — நம்பிக்கையில் — என் மனமும் ஓரளவு ஆறுதல் பெறுகிறது. சாதாரணமாக, தாங்கள் போவதில் நான் எப்படியெல்லாம் வருந்து

வேனே அவ்வாறு இப்போது வருந்தாமல் இருக்க இவ்வெண்ணமே உதவுகிறது.''

மனத்தைத் தொடும் இவ்வுரைக்குப் பதிலளித்து ராஜாஜி ஆற்றிய உரையில் எவ்வளவு பொருள் செறிந்துள்ளது, எவ்வளவு ஈரம் கசிந்துள்ளது என்பதைப் பாருங்கள்:

''அன்புக்கும் பாராட்டுக்கும் மொழி தந்து இவ்வளவு நேரம் பேசப்பட்டபோது ஓர் உண்மை என்னை அழுத்தம் திருத்தமாக ஆட்கொண்டது. ஒன்றை நீத்துவிட்டுப் புறப்படுவதுதான் வாழ்க்கையின் தலைசிறந்த ஆனந்தம் என்ற உண்மை இன்று வலுவாகப் புலனாயிற்று. நாம் மிகுந்த மகிழ்ச்சி பெறுவது ஒரு பொருளை அடைவதால் அல்ல; அதை விட்டுவிடுவதால்தான். ஸ்ரீ பிரதமர் அவர்கள் வெளியிட்ட உணர்ச்சியைவிடப் பெரிதாக வேறொரு வெகுமதி எனக்கு எப்படிக் கிடைக்க முடியும்? இன்று பிற்பகல் மந்திரி சபையும் பிரதமரும் அனுப்பி வைத்த கடிதத்தைவிடப் பெரும் சொத்து எனக்கு வேறு வேண்டுமா? எனவே, அன்பார்ந்த ஸ்ரீ பிரதமரவர்களே, நான் மகத்தான மன மகிழ்ச்சியுடன் விடைபெறுகிறேன். உங்களில் சிலரைப் பிரிவதில் தனிமை என்ற ஏக்க உணர்ச்சியை அடைவதுதான் என்னைச் சங்கடப்படுத்தும் ஒரே விஷயம். நான் போகும் போதே இங்கு இருக்கவும் கூடாதா என்று ஆசைப்படுகிறேன். என் உணர்ச்சிக்கு இதுவே சரியான வார்த்தை. ஆனால் இது சாத்தியமல்ல. எனவே நான் மகிழ்ச்சியுடன், பெரும் தன்னம்பிக்கையுடன் போகிறேன்.

''ஸ்ரீ பிரதமரவர்கள் இந்தியாவின் புது யுகம் பற்றிச் சொன்னார். நம்முன் மகத்தான எதிர்காலம் உள்ளது. இந்த நாடு மிகவும் விசாலமானது. இதில் எத்தனையோ சிரமங்கள். இருந்தாலும் இது வெகு நல்லவர்களின், சுயநலக் கலப்பற்றவர்களின், ஒரே நோக்கம் கொண்டவர்களின் கையிலுள்ளது. நம் நாட்டுக்குக் கிடைத்துள்ள தலைமையை விடச் சிறந்த ஒன்றை எந்த நாடும் கோர முடியாது. ஸ்ரீ பிரதமரவர்கள் ஒரு சின்னம் என்பது மட்டுமல்ல; தொந்தரவு மிக்க உலகச் சூழ்நிலையில் வெகு அவசரமாகச் சுதந்திர வாழ்வில் திணிக்கப்பட்ட நம் மக்களுக்குத் தேவையான ஒரு மகத்தான பாரம்பரியச் செல்வத்தைத் தம்முள் பெற்றிருப்பவர் ஸ்ரீ பிரதமர். இது ஓர் உன்னதமான சொத்து. விலைமதிப்பற்ற உடைமை. அவரும் அவரது சகாக்களும், குறிப்பாக அவரது முதல் சகாவான துணைப் பிரதமர் ஸ்ரீ பட்டேல் அவர்களும்,இந்தியாவை எல்லா விதத்திலும் கொழிக்கச் செய்யும் உடைமைகளாவர். நமது எதிர் காலத்தைப் பற்றி என் மனத்தில் எவ்விதக் கவலையும் இல்லை. நமது மக்கள் அனைவராலும் ஸ்ரீ பிரதமரவர்கள் நேசிக்கப்படுவது போல், எந்த நாடும் எந்தத் தலைவரையும் நேசித்ததில்லை. நமது சகல மக்களுக்கும் அன்பானவர் அவர். நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை உள்ள ஆணும் பெண்ணும்—குழந்தைகளும் கூட — அவருக்காக எதையுமே விட்டுக் கொடுக்கத் தயார். பெரும் சர்வாதிகாரிகள் தான் எல்லோரிடமிருந்தும் மரியாதை பெற முடியும் என்றில்லை. நமது பிரதமரைப்போல் மென்மையான இதயமும் தாரான மனமும் ஜனநாயகப் பண்பும் நிறைந்த ஒருவர், சர்வாதிகாரிகள் கனவு காணக்கூடிய அத்தனை மரியாதையையும் எல்லா மக்களிடமிருந்தும் பெற முடியும்.

''நமது துணைப்பிரதமரைப்போல் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் எவரும் இந்நாட்டில் இல்லை என்று திண்ணமாகக் கூறுவேன். செய்ய வேண்டியது என்ன, செய்ய வேண்டாதது என்ன என்பதில் அவர் கூறுகிற முடிவை அனைவரும் நம்பிக்கையுடன் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இவ்விருவரும் நம் நாட்டுக்கு வழி காட்டுவார்கள். நாட்டைநோக்கி வரக்கூடிய பெரும் புயல்களை எதிர்ப்பதில் இவ்விருவரும் திடமாக உள்ள வரையில் எவர் வந்தாலும் சரி, எவர் போனாலும் சரி, அதற்காகக் கண்ணீர் விடவேண்டியதில்லை. எனவே, ஸ்ரீ பிரதமரவர்களே, நான் பூரண மன அமைதியோடு போகிறேன்.

''இந்த இருபது மாதங்களில் நான் வகித்த பதவியில் பெற்ற வெற்றி பற்றி ஸ்ரீ பிரதமர் கூறினார்.... நான் வங்காளத்திலிருந்தபோது அவரும் மவுன்ட்பேட்டன் பிரபுவும் சர்தார் வல்லப பாய் அவர்களும் 'சூழ்ச்சி' செய்தே என்னை இங்கு கொண்டு வந்து தள்ளினர்.... நான் எவ்வளவோ வாதாடினேன். ஆனால் நான் இப்பொறுப்பை எடுத்துக்கொண்டேயாகவேண்டும் என்றும், இப் பதவிக்கு நான் தகுந்தவனே என்றும், எதனாலோ ஸ்ரீ பிரதமர் அவர்கள் முடிவுகட்டி விட்டார். நானும் வந்தேன். நான் மிக நன்றாகப் பணி செய்ததாக அவர் சொல்கிறார். இதன் இரகசியம் என்ன? நான் ஓர் எளிய மனிதன், எளிய வழியில் செல்கிறவன் என்று நம்பிக்கொண்டிருப்பதற்கு அதிகமாக எனக்கே எதுவும் தெரியவில்லை. நான் யாரையும் வெறுப்பதில்லை. யாரிடமும் எனக்குப் பட்சபாதமில்லை. இதனால்தான் நான் நல்ல வழியில் செல்ல முடிந்திருக்கிறது. இங்கு எல்லாப் புறங்களிலிருந்தும் என்னைச் சூழ்ந்திருந்த அன்பும், நான் கவர்னர் ஜெனரல் பதவி ஏற்ற நாளிலிருந்து பிரதமரும் அவரது சகாக்களும் என்னிடம் காட்டிய பரிவுமே என்னைத் தவறு செய்யாமல் பரிபூரணமாக ரட்சித்தன. குழந்தைப் பருவத்திலிருந்து என் எழுபதாண்டு வாழ்வில் நான் தெரிந்து கொண்ட ரகசியம்: வெற்றிக்கு உதவும் மகத்தான கருவி அன்பே என்பதுதான். அந்த ஆயுதத்தை உபயோகிக்கும் விதத்தை மட்டும் அறிந்து விட்டோமாயின், எந்தச் சிரமத்தைக் கடப்பதும் எளிது; எந்தத் தடையைத் தாண்டுவதும் எளிது. இந்த வெற்றிப் பாதையை இந்தியா பின்பற்றும் என நம்புகிறேன்.

''தொலைவில் சென்றுவிட்டாலும் நான் சக்திவாய்ந்த, விவேகமான ஆலோசனைகள் தருவேன் என்று ஸ்ரீ பிரதமரும் வேறு சிலரும் எண்ணுகிறார்கள். ஆனால் நான் இம்மாதிரி முயற்சியே செய்யமாட்டேன் என்று அறுதியிட்டுக் கூறுகிறேன். எங்கோ தொலைவி

லிருந்து கொண்டு யோசனை சொல்வது சாத்தியமே அல்ல. இம்மாதிரி யோசனை தருவதும் சரி, அதைப் பெறுவதும் சரி, விவேகமாகாது. எந்த ஒரு பிரச்னையிலும் விடாமல் தொடர்பு கொண்டாலன்றி அதுபற்றி யோசனை தருவதும் அத்தகைய யோசனையை ஏற்பதும் தவறாகும். பொதுவாக இந்தியாவில் நாம் எப்படி இயங்க வேண்டும் என்பது குறித்துப் பிரதமர் செய்யும் மதிப்பீடுகளுக்கு யாரும் குறுக்கே நிற்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். பரந்த மனப்பான்மையாலும், அன்பாலும், தயையாலுமே இந்தியா உலகத்தில் வெற்றி பெற வேண்டும். எந்த வெற்றியை நான் குறிப்பிடுகிறேன் என்றும் நீங்கள் ஊகிக்க முடியும். நான் கனவு காணும் வெற்றி ஆக்கிரமிப்பால் ஏற்படுவதல்ல. இது ஆன்மாவின் வெற்றி. மகாத்மா காந்தி எந்தப் போதனைகளை நமக்குப் போதிக்கத் துடித்தாரோ அவற்றை நாம் உருக்குலையாமல் காப்பாற்றினால், அண்டை நாடுகள் தொலை நாடுகள் யாவற்றையுமே இவ்வாறு வெல்லலாம். காந்தியடிகள் போதிய அளவு நம்மீது தம் கொள்கைகளைப் பதிவு செய்யு முன்னரே நம்மிடமிருந்து எடுத்துக் கொள்ளப் பட்டார். உயிர் பிரியும் விநாடியில் அவர் மனத்தில் 'என் நாட்டுக்கான பணியை நான் முடிக்கு முன்னரே பிரிகிறேன்' என்ற எண்ணம் பளிச்சிட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அவர் காட்டிய பொன்னான மார்க்கம் நம் மனத்தில் என்றும் நிற்கும் என்று நம்புகிறேன், பிரார்த்திக்கிறேன்.

''நேரு அவர்கள் மன வளர்ச்சி பெற்றுவிட்டார்கள். இன்னமும் தினந்தோறும் வளர்ந்து வருகிறார்கள். முன்னைப்போதையும் விட, காந்திஜியின் உபதேசத்தை உலகெங்கும் பரப்பி, அதனை நிலைநிறுத்த அவர் இப்போது சிறப்பான தகுதி பெற்றிருக்கிறார் என்பதற்கு இச்சந்தர்ப்பத்தில் உலகறியச் சான்று கூறுகிறேன்.

''இந்த (காந்திய) தீபத்தை நம் மக்கள் காத்து வந்தால் அதிலிருந்தே மந்திர ஜாலம் போல் எல்லா நலன்களையும் பெறலாம். புதிய விளக்குகளுக்கு ஆசைப்பட்டு இப்பழைய விளக்கை விற்றுவிடும் சபலத்துக்கு ஆளாக மாட்டார்களென நம்புகிறேன். அராபிய இரவுக் கதை உங்களுக்கே தெரிந்ததுதானே?''

ஃ ஃ ஃ

இப்பேச்சில் ராஜாஜி அன்று பிற்பகல் மந்திரி சபையிடமிருந்து வந்த கடிதம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் அல்லவா? அது ராஜாஜியின் மதிப்பிட முடியாத சேவைக்கு நன்றி தெரிவித்து மந்திரி சபை நிறைவேற்றிய தீர்மானமேயாகும். இனியும் ராஜாஜியின் ஞானம், அநுபவம் இவற்றின் பயன் நாட்டுக்குக் கிட்டும் என்ற நம்பிக்கையை அது தெரிவித்தது. இத் தீர்மானத்தின் கீழே நேரு அவர்கள், ''இது வெறும் சம்பிரதாய அறிக்கை அல்ல. தங்களிடம் மந்திரி சபை கொண்டுள்ள அன்புக்கும் நன்றிக்கும், பலவீனமான வார்த்தைகளில் தந்த உருவமே இது'' என்று எழுதியிருந்தார்.

இதற்குப் பதிலாக ராஜாஜி, ''இப்படிப்பட்ட ஒரு விலை மதிப்புள்ள வெகுமதியைப் பெற இவ்வாழ்வில் கொடுத்து வைத்ததே என்பதில் ஆழ்ந்த நன்றிகொள்கிறேன்'' என்று எழுதினார்.

ஃ ஃ ஃ

இவ்வளவும் ராஜாஜி பதவி துறந்த போது. அவர் கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றதை முன்னிட்டு 1948 ஜூலை 24ல் சென்னை சட்ட சபையில் அவரது உருவப் படத்தைத் திறந்து வைத்து நேருஜி ஆற்றிய சொற்பொழிவில் சில பகுதிகளை இனி பார்ப்போம்.

''ராஜாஜிக்கும் எனக்குமிடையே இருபத்தெட்டு ஆண்டுகளாக இருந்து வந்துள்ள நெருக்கமான தொடர்பு, அவர் கவர்னர் ஜெனரல் பதவி ஏற்பதால், புதிதாக ஒரு விதத்தில் தொடருகிறது. இதில் எனக்குத் தனியானதொரு திருப்தி. இந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் நாங்கள் அரசியலில் ஓரளவு மாறுபட வேண்டிய சந்தர்ப்பங்கள் பல எழுந்தன. நாங்கள் ஒரே நோக்கோடு பார்க்காதிருந்தது உண்டு. சில முக்கியமான விஷயங்களில் எங்கள் வழிகள் மாறுபட்டிருப்பதை உணர்ந்தோம். தனி மனிதர்களுக்கிடையே கருத்து மாறுபாடு இருப்பது தவிர்க்க முடியாதது. ஆயின், இறுதி இலட்சியத்திலும் அதை அடையும் உபாயத்திலும் ஒற்றுமை இருக்குமாயின் இந்த மாறுபாடுகளுக்கு மதிப்பு இல்லை. தங்கள் நோக்கம் நேர்மையாக உள்ளது என்ற நம்பிக்கை உள்ளவர்களிடையே உள்ள வித்தியாசங்களுக்கு விசேஷ மதிப்பு இல்லை. அவர்கள் மாறுபட்டாலும் அதனால் யாரும் புண்படுவதில்லை. ஜனநாயகம் என்பதே குறிப்பிட்ட ஒரு கருத்துத்தான் இருக்கலாம் என்று கட்டுப்படுத்தாமல், கருத்து மாறுபாடுகளுக்கு இடம் தந்து, அவற்றினூடே காரியத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதுதான்.

''ஒரு தனி மனிதரிடம் நான் முதற்கண் நாடவேண்டியது அவரது கொள்கையையோ, மதத்தையோ, அரசியலையோ, பொருளாதாரத்தையோ அல்ல — இவை முக்கியமாயினும், இவற்றுக்கெல்லாம் முன்பாக அவரது நேர்மையையே பார்க்க வேண்டும் என்று வலுவாக உணர்ந்து வருகிறேன். ஒருவரிடம் நேர்மையின் முழுமையில்லாவிடில், அவரிடம் உயர்ந்த அரசியல், பொருளாதார இலட்சியங்கள் இருப்பினும் பயனில்லை... தேசிய, சர்வ தேசிய விவகாரங்களில் நேர்மையை மட்டும் பார்ப்பதற்கில்லை என்பது வாஸ்தவமே. ஆயினும் நேர்மையின் பூரணத்வம்தான் கொள்கைகள் உருவாவதற்கான ஆதாரம். அதேபோதில் நேர்மை வேறு, கொள்கை வேறு.

''இதனை நான் வலியுறுத்துவதற்குக் காரணம் யாதெனில், ராஜாஜி உறுதியான கருத்

துக்களும், உறுதியான நம்பிக்கைகளும் வாய்ந்த ஒருவர். அவற்றை நேர்மையுடன் பின்பற்றி ஒழுகுபவர். ஆரம்ப காலத்தில் அவர் மகாத்மா காந்தியின் செல்வாக்குக்கு ஆட்பட்டதை நீங்கள் அறிவீர்கள். பல பிரச்னைகளில் மகாத்மாஜியின் வழியையே அவர் அடிப்படையாக ஏற்ருர். எனினும் அவர் மகாத்மாஜி உள்பட எவரது வார்த்தையையும் சிந்தனை செய்யாமல் ஏற்றதென்பதே இடையாது. மகாத்மாஜியுடனும் ராஜாஜி வாதம் புரிவார். எனிதில் விட்டுக்கொடுத்து விடமாட்டார். இறுதியில் குறிப்பிட்ட சூழ்நிலையில் மகாத்மாஜியின் முடிவுகளே சிறந்தவை என்று கருதிய பின்தான் அதற்கு இணங்குவார். மகாத்மாஜி போன்ற ஒரு வியக்தியிடம் அடிபணியாதிருப்பது மிகவும் கடினம். எங்களுடைய புத்தி யெல்லாம் மகாத்மாஜியின் முன்னிலையில் சாதக பாதகங்களைத் திறனாய்வு செய்ய முடியாதிருந்தன. எங்களுக்கு அவரிடம் அவ்வளவு நம்பிக்கை. ராஜாஜியும் மகாத்மாஜியிடம் மகோன்னதமான நம்பிக்கை வைத்திருந்தார். என்ருலும் அது தமது அறிவைத் தளர்த்துவதற்கு அநுமதியாமலும் இருந்தார். எது எப்படி நடந்தாலும் ராஜாஜி தாமாகவே ஒரு முடிவுக்கு வருவார். யாரிடமாவது அவர் விட்டுக்கொடுத்தாரெனில் அதுவும் அவர் புத்தி பூர்வமாக, நன்குணர்ந்து, வாதித்த பின்பே செய்த முடிவாக இருக்கும். எனவே எங்களிடமிருந்து சில சமயங்களில் மாறுபட்டபோதும் சரி, பல சமயங்களில் ஒத்துப் போனபோதும் சரி, எங்கள் முன் வந்த எந்தப் பிரச்னையிலும் அவரது அசாதாரணமான தீட்சண்யம் வாய்ந்த பகுத்தறிவு மிளிர்ந்தது. தாம் இணங்கினுலும் இணங்காவிட்டாலும் எந்தப் பிரச்னையையும் முற்றிலும் விவாதிக்க வேண்டுமென அவர் விரும்புவார்.

''எந்தச் சிக்கலான பிரச்னையையும் ஆலோசிக்க வேண்டுமாயின் நான் ராஜாஜியை நாடுவதுபோல் இந்நாட்டில் நாடக்கூடியவர்கள் மிகவும் அபூர்வமே என்று கூற விரும்புகிறேன். விவாதித்த பின் அவருடன் நான் இணங்குவேனு, மாட்டேனு என்பது தெரியாது. இருந்தாலும் அவரோடு கலந்தாலோசிப்பதால் எனக்கு நன்மை ஏற்படும், பெரும்பாலும் அவரது கருத்துக்கு நான் இணங்கவே செய்வேன் என்ற திட நம்பிக்கை எனக்கு உண்டு. கூர்ந்த அறிவும், மகோன்னதமான நேர்மையும், ஆன்ம தியாகமும் செறிந்த ஒருவரது இயல்பு இதுவே. இது தேசத்துக்கே விலை மதிக்க வொண்ணு உடைமையாகும்...

''இந்தியாவில் உலகாயத உடைமைகளையும், பெரிய பட்டம் பதவிகளையும் பெற்றவர்களுக்கு அதிக மதிப்பும் கௌரவமும் இல்லை. அன்றும் இன்றும் இந்தியா மதிப்பது ஞானத்தையும் கல்வியையும்தான். அதோடு சேவா மனப்பான்மையை விசேஷமாக மதிப்பது இந்தியா. உடைமை, பட்டங்கள் இவற்றுக்கு நேர் எதிர்த் திசையில் சென்ற மகாத்மா காந்தி போன்றவரையே நாம் பெரிதும் கௌரவிக்கிருேம். இதேபோல் ராஜாஜியையும் அவரது தனித்தன்மை வாய்ந்த ஆன்மச் சிறப்புக்காகவும், தொண்டுக்காகவும், தியாகத்துக்காகவும் கௌரவிக்கிருேம். இந்திய அறிவின் உச்ச நிலைக்கு உருவம் தாங்குபவர் ராஜாஜி.

''இன்று ராஜாஜியை இந்திய ராஜ்யத்தின் உச்சஸ்தான பதவியில் பார்க்கிருேம். உடை, இருக்கை, உணவு, மற்றும் எல்லாவற்றிலும் மிக மிக எளிய வாழ்வு வாழும் ராஜாஜி ஒரு சாம்ராஜ்யத்தின் அதிகாரத்துக்கும் ஜாஜ்வல்யத்துக்கும் சின்னமான ஸ்தானத்தில் அமருவது நமது தேசம் எப்படி உருவாகிறது என்பதற்கே ஒரு உருவமாகும். இந்தியர்களுக்குள்ளேயே மிக எளிய வாழ்முறையை மேற்கொண்ட ராஜாஜி, இது காறும் அதற்கு நேர் எதிரிடையா யிருந்த ஒரு ஸ்தானத்தில் மகத்தான கௌரவத்துடனும் அமர்கிருர்.''

இப்பழைய பேச்சுக்களை நினைவு கூரும் ராஜாஜி எழுதுகிருர்:

''நேருவின் பண்பு நிறைந்த வார்த்தைகளைப் படிக்கும்போது என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்: இப்படிப்பட்டவரிடம் அவரது கொள்கைக்காகச் சச்சரவிட்டிருக்கவேண்டியது சரிதானு? இதற்கு விடை, மகாத்மா காந்தி அவர்கள் ஸ்ரீ ஜவாஹர்லால்ஜிக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன் எழுதிய கடிதத்தில் கிடைக்கிறது. அக்கடிதத்தில் காந்திஜி எழுதுகிருர்:

> உங்களுக்கும் (நேருஜிக்கும்) எனக்கும் விஷயங்களை நோக்கும் கோணத்தில் வித்தியாசங்கள் உள்ளன என்பதை நான் காணத் தொடங்கிய போதிலும், இந்த வித்தியாசங்கள் எவ்வளவு பயங்கரமாகப் பெருகியுள்ளன என்பதை அறியாமலிருந்தேன்... நம்மிடை உள்ள மாறுபாடுகள் எவ்வளவு பெரியவை, எவ்வளவு தீவிரமானவை என்பதைப் பார்க்குமிடத்து நாம் இருவரும் சந்திக்க முடியும் என்றே தோன்றவில்லை. உங்களைப் போன்ற ஒரு சகாவை — தீரமும் விசுவாசமும் திறமையும் நேர்மையும் உள்ள சகாவை — இழப்பதில் எனக்கு ஏற்படும் துயரத்தை நான் ஒளிக்கவில்லை. ஆனுல் ஓர் இலட்சியத்துக்காக உழைக்கும்போது ஒன்ருகப் பணிபுரியும் சகாவையும் தியாகம் செய்யத்தான் வேண்டியுள்ளது. மற்ற எல்லா விஷயங்களுக்கும் மேலாக இலட்சியத்தைக் கருத வேண்டும். ஆனுலும் நாம் ஒன்ருகப் பணியாற்றுவது முறிந்து போனுலும் அது நமது சொந்த நட்பை ஒருவிதத்திலும் பாதிக்காது. நாம் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாகி நீண்ட காலமாகிறது. எவ்வளவு தீவிரமான அரசியல் மாறுபாடுகள் ஏற்பட்டாலும் நாம் அப்படியே நீடிப்போம்.''

ஒருவரது கொள்கை, மதம், அரசியல் இவற்றுக்கெல்லாம் மேலாக அவரது நேர்மையை முக்கியமாகக் கருதுவதாக நேருஜி சொல்லியிருக்கிருரல்லவா? அதற்கேற்பவே கொள்கைகளுக்கெல்லாம் மேம்பட்ட நேர்மையின் உருவான நேருஜிக்கு நாமும் நினைவு அஞ்சலி செலுத்துகிருேம்.

வேஷம் கலைகிறது!

கள்ளிக்கோட்டையில் கூடிய இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு செய்துள்ள தீர்மானங்களும் முடிவுகளும் நாட்டின் அமைதியிலும் ஜனநாயக ஆட்சி முறையிலும் நம்பிக்கை கொண்டிருக்கும் மக்கள் அனைவருக்கும் கவலை தரக்கூடியதாக இருக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சி நடத்தும் தொழிலாளர் கிளர்ச்சிகள், விவசாயக் கிளர்ச்சிகள் ஆகியவற்றுக்கு அடிபணிந்தே அக்கட்சியின் நடவடிக்கைகள் இயங்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் கூட்டுச் சர்க்கார் அமைந்துள்ள கேரளத்திலே கூடி இப்படி முடிவெடுத்திருக்கிறார்கள் என்றால் இவர்கள் எத்தகைய பயங்கரவாதிகள் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். 'கம்யூனிஸ்ட் மந்திரிகளைக் கொண்ட ராஜ்யங்களில் ஏதாகிலும் கிளர்ச்சிகள் நடக்கும்போது அந்த மந்திரிகள் போலீஸ் உதவி கொண்டு கிளர்ச்சியை அடக்கினால் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அவர்கள் துரோகம் செய்தவர்கள் ஆவார்கள்; அதற்கு மாறாகக் கிளர்ச்சியும், கேரோவும் கொள்ளையும் நடத்தும் கூட்டத்தினருக்கு அவர்கள் உதவ வேண்டும்' என்பதுதான் கம்யூனிஸ்ட் மத்தியக் குழு எடுத்துள்ள முடிவின் பொருள். இதற்கு மேலும் பாஷ்யம் செய்வதுபோல் பொதுக் காரியதரிசி திரு பி. சுந்தரய்யா ''நாங்கள் பார்லிமெண்டரி ஆட்சிமுறையை ஒரு முதலாளித்துவ முறையாகத்தான் கருதி வந்திருக்கிறோம்'' என்கிறார்.

'அப்படியிருக்கையில் ஜனநாயகக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து நீங்களும் ஜனநாயகக் கட்சி போல் வேஷம் போட்டு சட்டசபைகளுக்கும் மக்கள் சபைக்கும் ஏன் போட்டியிட்டீர்கள்?' இப்படி யாராகிலும் கேட்பார்கள் என்றே கொஞ்சம்கூடக் கூச்சமின்றி, தாங்கள் இதுகாறும் மூடிக் காப்பாற்றி வந்த கபட எண்ணத்தை விண்டு உரைத்திருக்கிறார் திரு சுந்தரய்யா.

''கம்யூனிஸ்ட் கட்சி இந்த ஸ்தாபனங்களை (மக்கள் சபை — சட்ட சபை ஆகியவற்றை) மக்கள் புரட்சியைக் கிளறிவிடக் கூடிய சாதனங்களாகத்தான் எப்பொழுதுமே கருதி வந்திருக்கிறது'' என்கிறார்.

'கம்யூனிஸ்ட்கள் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டவர்கள்போல் வேஷம்தான் போடுகிறார்கள். அதில் ஏமாறாதீர்கள். அவர்கள் லட்சியமெல்லாம் நாட்டில் எங்கும் பரவலாகக் குழப்பமும் கிளர்ச்சியும் உண்டாக்குவதுதான்' என்று ஆதியிலிருந்தே சுதந்திரக் கட்சி எச்சரிக்கை செய்து வந்திருக்கிறது. அது இன்று நூற்றுக்கு நூறு உண்மையாகத் தெரிகிறது.

பேரறிவாளர் பிரிவு

ராஜகுரு கோடிகன்யா தானம் ஸ்ரீ தாத தேசிகன் வம்சம் என்பது ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தில் பிரக்கியாதி பெற்ற ஆசாரிய புருஷ பரம்பரை. இப்பரம்பரையில் தோன்றிய ஸ்ரீ தாத தேசிக தாதாசாரிய ஸ்வாமிகளின் மறைவு வேத நெறிக்கு ஒரு பெரும் நஷ்டமாகும்.



வேத அத்யயனம், சாஸ்திரம், மீமாம்ஸை, கல்ப சூத்ரங்கள், வேத பாஷ்யம், ஸ்ரீ வைஷ்ணவ சமய நூல்கள் எல்லாவற்றிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்த இப்பெரியார், தமது பாரம்பரியமான அக்னிஹோத்ரத்தை நாளும் நடாத்தி வந்தவர். ஹோம யாகம் என்ற மகா யக்ஞத்தை அநுஷ்டித்தவர். தாம் கற்ற வித்தைகளை ஸ்மார்த்த, மத்வ, வைஷ்ணவ பேதம் பாராது மூன்று மதத்தினருக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தவர் இவர். ஆசாரம், அநுஷ்டானம், சீலம், வைராக்கியம் யாவும் பொருந்திய ''கிருஹ முனி''யாக வாழ்ந்தார்.

இவரது மேதையைப் பாராட்டிப் பாரத ஜனாதிபதி 1962ஆம் வருடத்தில் பிருது அளித்துக் கௌரவித்தார்.

அவர் விட்டுச் செல்லும் வித்யாதனத்தை அவரைப் போலவே பரிபாலிப்பதற்கு அவரது புதல்வர் ஸ்ரீ அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர் இருப்பதுதான் இன்று ஆஸ்திகர்களுக்கு ஓர் ஆறுதலாகும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

ஸ்ரீ ஏ. கே. சந்தா அவர்களுக்கு நிர்வாக விஷயத்தில் ஆலோசனை சொல்ல எவ்வளவு தகுதி உண்டு என்பதை 1946—47ல் மத்திய மந்திரி சபையில் நான் இருந்த போது நன்கு உணர்ந்திருக்கிறேன். ஏ. டி. ஷ்ராஃப் நினைவுச் சொற்பொழிவில் அவர் சுச்சிதமாக விஷயத்தைச் சொல்லியிருக்கிறார் :

''இப்போதுள்ள சர்க்கார் தொழிலகங்களில் நிறமையுடனும் சிக்கனத்துடனும் நிர்வாகம் ஏற்படுத்துவது எப்படி என்பதில்தான் மேலும் கவனமும் சிந்தனையும் செலுத்த வேண்டுமேயன்றி, சர்க்கார் உடைமையாக்கக்கூடிய துறைகளை எப்படி விஸ்தரிப்பது என்பதில் அல்ல.''

ஃஃஃ

எல்லாப் பணத்தையும் திரட்ட வேண்டும், சேமிப்பைப் பெருக்க வேண்டும் என்பதே நிதிமந்திரியின் தாரக மந்திரமாக உள்ளது. இன்ஷூரன்ஸ் பிரீமியம் தொகையைக் குறைப்பது பற்றி அவர் எண்ணமிடுகிறார். இதற்குக் காரணம் பாலிஸி எடுப்பவர்களிடம் அவருக்குக் கருணை ஏற்பட்டு விட்டதா ? அல்லது இந்தியர்களின் சராசரி ஆயுள் உயர்ந்திருப்பதாகப் புள்ளி விவரம் கூறுவது காரணமா ? இரண்டுமே காரணமல்ல என்று அஞ்சுகிறேன். பிரீமியத்தைக் குறைத்துக் காட்டி, ஏழைகளுக்குச் சபலம் உண்டாக்கி அவர்களிடமுள்ள எல்லாப் பணத்தையும் திரட்டிக் கொள்ளும் ஆசைதான் காரணமென எண்ணுகிறேன். நேரடி வரிகள், வரிகளின் பளுவையும் தாங்கும் விலைகள், மற்ற பலவிதமான தண்டல்களினால் நிதிமந்திரியின் பண தாகம் அடங்கவில்லை. நாசிக் அச்சகம் பளபளப்பான புது நோட்டுக்களை அச்சடித்தபடி உள்ளது. என்றாலும், சர்க்கார் செலவுக்கு இவையும் போதவில்லை. ''சர்க்கார் ரூபாய் நோட்டு அச்சடித்து விநியோகித்தால் அதை ராஜாஜி ஏன் ஆட்சேபிக்கிறார்? ஏழைகளுக்கு அரசாங்கம் பணம் வழங்க விரும்பினால் ராஜாஜி ஏன் எதிர்க்கிறார்?'' என்று முன்பொரு முறை திரு காமராஜ் கேட்டார். (இப்போது காங்கிரஸுக்குள் ஏற்பட்டுள்ள மாறுபாடுகளின் நெரிசலில் அவருக்கு அது ஒரு வேளை மறந்து போயிருக்கலாம்!) இதைப் பொருளாதார அறிவின்மை என்றார் ஏ. டி. ஷ்ராஃப். பணத்துக்குப் பொருட்களை வாங்கும் சக்தி குறைந்து விட்டது. பஞ்சப்படி, போனஸ் எல்லாம் தந்தாலும் பணத்தின் மதிப்பு மேலும் குறைந்து, ஏழைகளின் வாழ்க்கைப் பளு அதிகமே ஆகிறது. இந்நிலையில் சேமிப்பைப் பற்றிப் பேசவே தேவையில்லை. காங்கிரஸின் திட்டம் ஏழைகளின் இன்னலைப் பெருக்கவே செய்யும். அது செயலாகாமல் ஆண்டவன் தடுப்பானாக! மரத்தின் உச்சியில் உட்கார்ந்திருக்கும் நிதிமந்திரி, அதன் வேரில் உள்ள நீரை எல்லாம் உறிஞ்சி, அது வறண்டு, பட்டுப் போவதற்கு முயற்சி செய்கிறார் !

ஃஃஃ

''மற்ற நாடுகள் நமக்குக் கடன் வழங்கும் போது, ராஜாஜி ஏன் நாம் கடன் வாங்குவதை ஆட்சேபிக்கிறார்?'' என்று இதே காமராஜ் தமது கூட்டத்திடம் முன்பு கேட்பதுண்டு. காங்கிரஸ் தந்த 'அறிவொளி'யில் நம் மக்கள் இக்கடன்கள் யாவும் நன்கொடை என்றும், இதைத் திருப்பித் தர வேண்டியதில்லை என்றும் நினைத்து வந்தனர். இவ்வாண்டு பட்ஜெட் அந்நியக் கடன்களுக்காகவும் வட்டிக்காகவும் ஒரு பெரும் தொகை ஒதுக்கியுள்ளது. இப்போதெல்லாம் காமராஜ் முன்பு கேட்ட கேள்வியை எழுப்புவதில்லை !

அண்ணாமலை தீபம்

இவ்வருஷம் கார்த்திகை மாதம் முதல் தேதியும், 28ந் தேதியும், கார்த்திகை நட்சத்திரம் வருவதால் எந்த கிருத்திகை நட்சத்திரத்தில் திருவண்ணாமலை கார்த்திகை தீபம் நடைபெறும் எனப் பல பக்தர்கள் குழம்பி யிருக்கிறார்கள். பிலவங்க வருஷம் கார்த்திகை மாதம் 28ந் தேதி (14-12-67)ல் தான் திரு அண்ணாமலை ஸ்ரீ அருணாசலேசுவரர் ஆலயத்தில் கார்த்திகை தீபம் நடைபெறும் என்று தேவஸ்தான நிர்வாகிகள் அறிவிக்கிறார்கள்.

பச்சையிடை ஒரு பாவை

எங்கும் பசுமை—எல்லாம் பசுமை. பசுமை படர்ந்த வயலில் அதிகாலை நேரத்தில் அழகே உருவான இவ்வாரணங்கு அமர்ந்து என்னத்தை அப்படிக் கண்கொட்டாமற் பார்க்கிறாள்? சந்தேகம் என்ன? அந்தப் பசுமையைத்தான்.

அந்த இளைஞன் விழுங்கிவிடுவதுபோலப் பார்க்கிறானே, அது யாரை? இது தெரியாதா? அழகாக அமர்ந்து கொண்டு அந்தப் பிரதேசத்தையே அழகாக்கிக் கொண்டிருக்கும் அந்த அழகியைத்தான். அமைதியான இந்தச் சூழ்நிலையில்,

''பச்சைக் குழந்தை யடி — கண்ணில்
பாவையடி சந்திர மதி !
இச்சைக் கினிய மது — என்றன்
இருவிழிக்குத் தேநிலவு ''

என்ற பாரதியின் கவிதை அந்த வாலிபனின் செவிகளில் மெல்லிசையாக ஒலிக்கிறதோ?



கலியுக வரதன்!

தமிழழகன்

வண்ண மயில்கொளும் வாகனனும்; – குற
வள்ளி மயல்கொளும் மோகனனும்!
எண்ணங் கவர்ந்திடும் என்னவனும்; – தமிழ்
என்னில் உருகிடுந் தென்னவனும்!

வெற்றி தருஞ்சுடர் வேலவனும்; – மறை
வித்துக்கும் வித்தெனும் மூலவனும்!
பற்றிடும் அன்பர்க்குப் பாவனனும்; – வரும்
பகையும்வெல் லப்பெறும் காவலனும்!

தேவியாம் சக்தி திருமகனும்; – மாயன்
தேடிக் களித்த மருமகனும்!
பாவி யசுரர் பகையினனும்; – செக்கர்
பனியிதழ் பூத்த நகையினனும்!


ஆறுபடைவீட் டறுமுகனும்; – மற்றும்
அன்பர்க் கருளும் வரமுகனும்!
சேறு படுஞ்சாந்துச் சிங்காரனும்; – எழிற்
சேவற் கொடிக்கோர் அலங்காரனும்!

பாலும் பழமுங் குளிப்பவனும்; – சுவைப்
பஞ்சா மிருதங் களிப்பவனும்!
வேலும் மயிலும் வியப்பவனும்; – இன்னும்
வித்தைகள் கோடி பயப்பவனும்

சிக்கலில் தீர்க்கம் உறைபவனும்; - மனச்
சிக்கலுந் தீர்க்க நிறைபவனும்!
துய்க்கவுந் தோன்றாத் துணையினனும்; - கடல்
துன்பமும் மீளப் புணையினனும்!

அழகு பழநித்தண் டாயுதனும்; - தூக்கி
ஆடிடுங் காவடிச் சோபிதனும்!
பழகு தமிழ்ச்சந்தப் பாவலனும்; - குரு
பரனென மேவரு நாவலனும்!

பெருமா மரத்தைப் பிளந்தவனும்; - சூரன்
பேருரஞ் சாய்த்தே எழுந்தவனும்!
வரமாய்ச்சஷ் டிக்கே அருள்பவனும்; - 'கலி
வரதன்!' என் பார்க்கே பொருள் அவனும்!



கந்தர் ஷஷ்டி நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.

பஞ்சாமிர்தம்



''தென் ஜில்லாக்களில் பேய் மழை. ரயில் வண்டிகள் எழும்பூருக்கு வருவதில் தாமதம்.''

— செய்தி

என்ன ஆச்சரியம்! வண்டிகள் தாமதமின்றி வந்தால் அல்லவா பலத்த மழை பெய்ய வேண்டும் !

ஃ ஃ ஃ

''கல்லூரியில் பிரின்ஸிபால் அநுமதியின்றி நுழைந்த போலீஸார் மீது கோழி முட்டை வீச்சு !'' — கேரளச் செய்தி

''போலீஸார் செய்தது தவருனல், மார்க்குகளாகக் கோழி முட்டைகளை அள்ளி வீசியிருக்கலாமே!'' என்கிருன் ஒரு வாண்டு.

ஃ ஃ ஃ

''ஸ்டிரைக் காரணமாக நின்றுவிட்ட பஸ்கள் ராணுவத்தின் உதவி கொண்டு ஓட்டப்பட்டன.'' — பெங்களூர் செய்தி

''பஸ்ஸை ஓட்டுபவரைவிட, அதில் இடம் பிடிப்பவரை அல்லவா ராணுவ வீரர் என வேண்டும் ?'' என்கிருர் ஒரு பஸ்பிரயாணி.

ஃ ஃ ஃ

''கண், கால் நோயாளிகள் ஆஸ்பத்திரிக்குப் போய் வரச் சென்னை பஸ்களில் இலவசமாகப் பிரயாணம் செய்யலாம்!''

—அமைச்சர் திரு கருணாநிதி

கண்கால் தெரியாமல் வேகமாகச் செல்லும் பஸ்களுக்குச் சலுகை கிடையாது என்பதையும் அவர் சற்றே அறிவித்து விடட்டும்!

ஃ ஃ ஃ

''கணக்கிடும் இயந்திரங்களை வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில் ஐந்நூறு ரயில்வே ஊழியர்கள் அடையாள உண்ணாவிரதம்.'' — செய்தி

''இப்போதெல்லாம் வளர்ந்து வரும் உண்ணாவிரதங்களைக் கணக்கிட எந்த இயந்திரத்தினுலாவது முடியுமா ?'' என்று வினவுகிருர் ஒரு நிபுணர்.

ஃ ஃ ஃ

''ஹௌரா பாலத்தின் உச்சி மீது ஏறிக் கொண்டு இருபத்து நான்கு மணி நேரமாக இறங்கி வர மறுத்த வாலிபனைப் போலீஸார் தாஜா செய்து இறங்கி வரச் செய்தனர் !''

—கல்கத்தா செய்தி

இது ஒரு சாதனை என்றுல், பண்டங்களின் விலைவாசிகள் இறங்கி வரச் செய்வதிலும் அதைப் போலீஸார் நிரூபித்துக் காட்டுவார்களா ?

ஃ ஃ ஃ

''சர்க்கார் துறையும், தனியார் துறையும் சேர்ந்து வாழ முடியாது.''

— யூனியன் மந்திரி பக்ருதீன்.

வாழ்ந்தது போங்கள் !

ஃ ஃ ஃ

''ஆண்டுதோறும் இப்போது அரை லட்சம் டன் பிஸ்கட்தான் நாட்டில் உற்பத்தியாகி வருகிறது. இன்னும் மூன்று ஆண்டுகளில் இது இரட்டிப்பாக்கப்படும்.'' — ஓர் அதிகாரி

''இப்போதே இரண்டு கைகளுக்கும் இரண்டாகக் கொடுத்து விட்டால் பிறகு கேட்கவில்லை'' என்கிருன் இதைக் கேட்டு விட்டு ஒரு பையன்.

காமகோடியின் கருணை மொழி



ஒரு நதிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்துக்குப் பல கண்கள் இருக்கின்றன. பால வளைவுக்கு அடியில் ஒரு கண்ணுக்கு அருகே நிற்கும் ஒருவனுக்கு மற்றக் கண்களும் வளைவுகளும், தனக்கருகேயுள்ள கண்ணையும் வளைவையும்விடச் சிறியனவாகவே தோன்றும். இதே போல பக்தன் ஒருவனுக்கு, தன் இஷ்ட தெய்வத்திடம் வைத்திருக்கும் பற்றுக் காரணமாக மற்றத் தெய்வங்களெல்லாம் தன் இஷ்ட தெய்வத்தைவிடத் தாழ்வாகவே தோன்றும். தன் இஷ்ட தெய்வமே உயர்வாகத் தோன்றும். ஆனுல் எல்லா தெய்வங்களுமே ஒவ்வொரு வகையில், மூலமான ஒரே பிரம்மத்தின் தோற்றங்கள் என்பதே உண்மை. பாலத்தின் கண்களெல்லாம் ஒரே மாதிரியாக, ஒரே அளவில் கட்டப்பட்டவைதாமே ?



இரு மலர்கள்

ஒருவன் மனப்பூர்வமாக விரும்பியது ஒருத்தியை. ஆனால் மணந்தது வேறொருத்தியை. இதுதான் திரைக் கதையின் அஸ்திவாரம். கிலமான இந்த அஸ்திவாரத்தை வைத்துக் கொண்டு பெரிய மாளிகையையே எழுப்ப முயன்றிருக்கிறார்கள்.

ஒன்றை மனமார விரும்புவது, பிறகு அது கிட்டாமற் போகும்போது உள்ளம் உடைந்து, உடம்பு நலிந்து, கண்ணீர் உகுத்து விம்மி வெடிப்பது; பின்னர் வேறொன்றை அடைந்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வாழுவது; கடைசியில் கிட்டாமற் போனதை மீண்டும் சந்திப்பது, பழைய ஞாபகங்களால் துடிப்பது — இவைகளெல்லாம் நடிகர் திலகத்துக்குக் கைவந்த கலைகள். உமாவை நினைத்து வேதனைப்படும் கட்டத்தில் துயரத்தின் துடிப்பு, வேதனையின் வெடிப்பு, இவையெல்லாம் சேர்ந்த சிறந்த நடிப்பு ஆகியவற்றை சிவாஜியிடம் கண்டு அநுபவிக்க முடிகிறது.

காதலிக்கும் நேரத்தை விடக் காதல் தோல்வியில்தான் உமாவின் பாத்திரம் அற்புதமாகக் கலை கட்டுகிறது. உமாவை நேருக்கு நேர் சந்தித்துத் தனக்குத் துரோகம் செய்து விட்டதாகச் சுந்தர் கொடூரமாகக் குற்றம் சாட்டும்போது வாய் பேசாமல் பத்மினி குமுறிக் குமுறி அழுதே பதிலளிப்பது பிரமாதம்.

கே. ஆர். விஜயா தன் சின்னஞ் சிறு பருவத்து நினைவுகளை ஒரு குழந்தை போலக் கூறுகிறார். பிறகு பொறுப்புள்ள மனைவியாக மாறுகிறார். இரண்டு கட்டங்களிலும் சிறப்பாய் நடித்திருக்கிறார்.

காதல் காட்சிகளில் அவ்வளவு நெருக்கமும், இறுக்கமும் தேவைதானா என்பதைப் படாதிபதிகள் சிந்திக்க வேண்டும். வர வர, படத்துக்குப் படம் இவை அதிகமாகி வருகின்றனவே.

சுந்தரின் தந்தையாக வரும் நாகையாவின் நடிப்பு அருமையாக இருக்கிறது.

''மன்னிக்க வேண்டுகிறேன்'' என்ற பாடலும், ''கடவுள் தந்த இரு மலர்கள்'' என்ற பாடலும் நன்றாக இருக்கின்றன.

திரைக்கதையைக் கனிசமாகக் குறைத்துச் சில பாடல்களையும் குறைத்துச் சுவையாக்கியிருந்தால் ''இரு மலர்கள்'' நறுமணம் கமழும் மலரா யிருந்திருக்கும்.

ஊட்டி வரை உறவு

'காதலிக்க நேரமில்லை' என்ற புதுமைக் கதையை உருவாக்கிய அதே பேனா அதே பாணியில் மற்றொரு கதையை உருவாக்கியுள்ளது — அதுதான் ஊட்டிவரை உறவு! நகைச்சுவையையே பிரதானமாகக் கொண்ட கதை. கண்ணுக்கு விருந்தான வண்ணப் படம். படத்தில் கவர்ச்சி வேண்டும் என்பதற்காகவோ, அல்லது லட்சியப் படங்களாகச் சில எடுத்து வருவதில் கையைச் சுட்டுக் கொண்டதற்கு ஈடு கட்ட வேண்டுமென்பதற்காகவோ ஸ்ரீதர் அவர்கள் காதல் காட்சிகளிலும், நடன நிகழ்ச்சிகளிலும், கொஞ்சம் 'ஓவராக'வே கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். அந்த வலிப்பு நடனமும், விரசமான முறையில் உடலைக் குலுக்குவதும் நம் தமிழ்ப் படத்துக்கு எந்த விதமான பெருமையையும் தந்து விடாது. 'டைரக்டர் ஸ்ரீதர் இந்த அளவுக்குக் கீழே இறங்கி இருக்க வேண்டாம்' என்றுதான் நினைக்கச் செய்கிறது. அதே சமயத்தில் ஸ்ரீதரின் நகைச்சுவை வசனங்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

நடிப்பிலே பாலையாவுக்குத்தான் முதலிடம் தர வேண்டும். ரொம்ப இயற்கையாக, அற்புதமாக நடித்திருக்கிறார். அடுத்து வருபவர் வி. கே. ராமசாமி. இவ்விருவருமே கதையில் வியாபித்திருப்பதால் நடிகர் திலகத்துக்குத் தம் திறமைகளைக் காட்டுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் தம் பாத்திரத்தின் தன்மையுணர்ந்து குறையின்றிச் செய்திருக்கிறார். நடிகர் திலகத்தின் முத்திரை அங்கங்கே 'பளிச்' 'பளிச்' என்று விழுந்து விடுகிறது. நம்மை உணர்ச்சி வயப்பட வைக்கும் கட்டங்கள் படக் கதையில் இல்லை. ஆகவே சிவாஜி கணேசனும் அதிகம் சிரமப்படவில்லை! நாகேஷ், விஜயா வழக்கம்போல். இரண்டு பாடல்கள் மனத்தில் பதியும்படி இருக்கின்றன. 'ஊட்டி வரை உறவு' ஓர் ஒப்பற்ற படமில்லாவிட்டாலும் சிரித்து மகிழ்வதற்கு ஏற்றதொரு நல்ல நகைச்சுவைப் படம். 'உறவு' மன நிறைவைத் தருகிறது.



கனடா நாட்டுத் திரைப்பட விழா

□ அந்தகாரம் — திரையில்தான். ஒருவர் வருகிறார். தம் கையிலுள்ள ஏதோ ஒன்றை வீசுகிறார். பின் அவர் மறைந்து போகிறார். வீசப்பட்ட சின்னஞ்சிறிய பொருள் ஒரு சதுரம். நம் கவனத்தை ஈர்க்கும் வகையில் இனிமையான பின்னணி இசை ஒலிக்கிறது. புள்ளி போன்ற அந்தச் சதுரம் விந்தைகள் புரிய ஆரம்பிக்கிறது. சிறிய சதுரம் சற்றுப் பெரிதாகிறது: இரண்டாகிறது. பிறகு நான்காகிறது. ஒவ்வொன்றும் பலவாகப் பலப்பல வடிவமெடுத்து வண்ணங்களை வாரிக் கொட்டுகின்றன. நம் சிந்தையைக் கவரும் வண்ணம் அது பல உருவாகிப் பல்கிப் பெருகி....அப்பப்பா! எத்தனை அற்புத வடிவங்களை உண்டாக்குகிறது! சங்கீதத்துக்கு ஏற்ப அதன் மாற்றங்களா, அதன் மாற்றங்களுக்கு ஏற்ப ஒலியா என்பதை விண்டு சொல்ல முடியாது. விசுவரூபமெடுத்து ஓடியாடிய அந்தச் சிறு சதுரம் உச்ச கட்டத்துக்கு வந்ததும் மறுபடியும் வேகம் குறைந்து குறைந்து பழைய நுண்ணிய வெண் புள்ளியாகிறது. அதை விட்டெறிந்தவர் தோன்றி அதை எடுத்துக் கொண்டு போகிறார். இது ஒரு திரை விசித்திரம். காமிராவின் அற்புதமான ஆற்றலை விளக்கும் அதிசயம். இந்தத் துண்டுப் படத்தின் பெயர் 'மொஸாய்க்'. ஐந்து நிமிஷங்கள்தான் இதன் ஓட்ட நேரம்: நடிகர்கள் யாரும் கிடையாது.

□ வெறும் பொட்டல்......பாலைவனமில்லா விட்டாலும் வறண்ட பிரதேசம். அதை வளமாக்கித் தங்கள் வாழ்வையும் வளப்படுத்திக் கொள்ளக் கிளம்புகின்றனர் ஒரு தம்பதி — இரண்டு குழந்தைகளுடன். வழியிலேயே மனத் தளர்ச்சி யூட்டும் நிகழ்ச்சிகள். இருந்தாலும் துணிவுடன் உழைப்பை நம்பி முன்னேறுகின்றனர். பொட்டல் பிரதேசத்தில் — தன்னந்தனியான சூழலில் — வாழ்க்கை ஆரம்பிக்கின்றனர். வானத்தை நம்பி வாழும் வாழ்க்கை. உழைப்பையே மூல தனமாகக் கொண்ட வாழ்க்கை. வளங் காணுகின்றனர் — எத்தனையோ வேதனைகளுக்குப் பிறகு. பண்ணையாகிறது பொட்டல்காடு. குழந்தைகளுக்குக் குழந்தைகள் பிறக்கின்றன. அப்போது வானம் பொய்க்கிறது. பஞ்சம், பயங்கரமான பஞ்சம் உண்டாகிறது. எல்லாரும் உயிர்வாழ வேற்றிடங்களுக்குச் செல்லுகின்றனர். ஆனால் இவர்களோ? மன உறுதி யுடன் தங்களை வாழ்வித்த, வாழ்விக்கப் போகும் மண்ணையும் விண்ணையும் பார்த்துக் கொண்டே துன்பங்களைச் சகித்தபடி மழைக்காகக் காத்திருக்கிறார் குடும்பத் தலைவர். அவர் உயிர் பிரியும் வரை அந்த மழை வரவில்லை. பூமி செழிக்க, பஞ்சம் பறக்கப் பிறகு வருகிறது அந்த மழை. மண்ணை நம்பினவர்களுக்கு வாழ்வில்லாமல் போகாது என்பதை விளக்கும் சிறந்த படம் 'ட்ரை லாண்டர்ஸ்' என்பது. கவர்ச்சி யில்லை. கட்டுக்கோப்பான கற்பனைக் கதையில்லை. ஆனால் உயிர்த் துடிப்பிருக்கிறது. வாழ்வின் வேதனையையும் மலர்ச்சியையும் உள்ளபடி காட்டி உள்ளத்தைத் தொடும் சிறப்பிருக்கிறது.

□ ஆயிரத்தைந்நூறு மைல் தூரத்தை சைக்கிளில் கடக்க ஒரு பந்தயம் நடக்கிறதே தெரியுமா உங்களுக்கு ? பதின் மூன்று நாட்டைச் சேர்ந்த அறுபது சைக்கிள்வாலாக்கள் ஆயிரத்தைந்நூறு மைல் தூரத்தை — வழியில் குண்டு குழி, மேடு பள்ளம், திருப்பங்கள், வளைவுகள், காடு கழனி, என்று எத்தனை தடைகள் உண்டோ, அத்தனையையும் சமாளித்துப் பன்னிரண்டு நாட்கள் சைக்கிளை இயக்கிப் பந்தயத்திலே வெற்றி கொள்வது என்றால் அது எத்தகைய மகத்தான சாதனை! அதைவிடப் பிரமாதமானது காமிராவும் பின்னணி இசை யுமே இந்தப் படத்தை ஓடவைத்திருக்கும் விந்தைதான். இது ஒரு வண்ணத் துண்டுப் படம். சைக்கிள்காரர்கள் போகும் பாதையெல்லாம் அவர்கள் காணும் காட்சிகளை யெல்லாம் நம்மையும் காணச் செய்து படம் ஓடும் பதினாறு நிமிஷங்களை யும் பறக்கச் செய்துவிடுகிறார்கள்.

□ அமெரிக்க, பிரிட்டிஷ் படங்களையே பார்த்துக் கொண் டிருக்கும் நமக்கு வேறு நாட்டுத் திரைப் படங்களின் வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ளுவதற்கு வாய்ப்பாகவே அயல் நாட்டுத் திரைப்பட விழாக்களை அடிக்கடி நடத்துகிறார்கள். சென்ற மாதம் கனடா நாட்டுத் திரைப்பட விழாவை 'ரஸனு' என்ற கலை நுணுக்க ஈடுபாட்டு ஸ்தாபனத்தினர் ஐந்து நாட்கள் நகரத்தில் நடத்தி அந்நாட்டின் நான்கு முழுநீளப் படங்களை யும் பதினான்கு துண்டுப் படங்களையும் திரையிட்டு ரசிகர்களை மகிழ்வித்தார்கள். ஒவ்வொன்றுமே பட விழாக்களில் பல பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்றவை. திரைப் படக்கலையின் மாறுபட்ட கோணங்களைக் காணும் வாய்ப்புக்



கிடைத்தது. கனடா நாட்டின் வாழ்வு, வளம், பண்பாடு, மனோபாவம் ஆகிய வற்றை விளக்கும் படங்களாக இருந்தன. வெறும் பொழுதுபோக்கும் படங்களாக மட் டும் இல்லாமல் சிந்தனைக்கு விருந்தாகவும் திரைப்படக் கலையின் சிறப்புக்குச் சான்றாக வும் விளங்கின. அவற்றில் இரண்டு துண்டுப் படங்களையும் ஒரு முழுநீளப் படத்தையும் பற்றிய விளக்கமே ஆரம்பத்தில் நீங்கள் படித்தவை. இம்மாதிரி பட விழாக்கள் பல்வேறு நாட்டினரின் உயிர்த் துடிப்பான வாழ்க்கையையும் கலை வளர்ச்சியையும் அறிந்து கொள்ள உதவியாக இருக்கின்றன.

அறிவையே நாடும் அற்புத விஞ்ஞானி

வி. பானு

பெங்களூருக்கு அருகில் ஹெப்பால் பகுதியிலுள்ள ராமன் ஆராய்ச்சி நிலையத்துக்கு அன்று விடுமுறை. அன்றுதான் மாலை ஐந்து மணிக்கு எனக்குப் பேட்டி அளிக்க ஒப்புக்கொண்டிருந்தார் அவர். விடுமுறை என்பதை ஒருகால் அவர் மறந்துவிட்டிருப்பாரோ? எனக்குள் ஒரு கணம் சந்தேகம். எழுந்தாலும், குறித்த காலத்துக்குள் அவர் ஆராய்ச்சி நிலையத்தை அடைந்து வண்டியிலிருந்து இறங்கி மாடியை நோக்கினேன். என்ன ஆச்சரியம்! 4.58 மணிக்கே, அவராகவே ஆபீக் அறையைத் திறந்து, சூட்டணிந்து, தமது புகழ்பெற்ற தலைப்பாகையுடன் எனக்குப் பேட்டி அளிக்கத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தார்! அவருடைய கால நேர உணர்ச்சிக்கும், ஒழுங்கு முறைக்கும், எளிமைக்கும், மனிதப் பண்புக்கும் இச்சிறு சம்பவமே ஓர் எடுத்துக்காட்டாக எனக்குத் தோன்றியது. அவர்தான் உலகப் புகழ்பெற்ற, பாரதத்துக்கும் உலகுக்கும் தமிழகம் தந்துள்ள விஞ்ஞான ஜோதி டாக்டர் சந்திரசேகர வெங்கடராமன். அதாவது டாக்டர் ஸி. வி. ராமன்.

அமைதி நிலவும் அழகான பகுதிகள் ஹெப்பாலில் மிக உண்டு. இவற்றில் உயர்ந்தது ராமன் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம். நிலையத்தை அடையுமுன் செடிகளும் மரங்களும் அடர்ந்த சாலையினூடே சிறிது தூரம் செல்ல வேண்டும். எங்கு பார்த்தாலும் செழித்துத் தளிர்த்த மரங்களும், பூத்துக் குலுங்கும் செடிகளும், புல்வெளியும் கண்ணுக்கும் மனத்துக்கும் பசுமையைப் பொழிகின்றன. 'ஒரு ரிஷியின் ஆசிரமத்துக்குச் செல்லுகிறோம்' என்ற உணர்ச்சி தன்னையறியாது ஏற்படுகிறது.

அவர் மேஜை எதிரில் கம்பீரமாக உட்கார்ந்திருப்பதைப் பார்க்கும்போது அவரை வியக்காமல் இருக்க முடியவில்லை. நவம்பர் 7ம் தேதியன்று தமது எண்பதாவது ஆண்டைத் தொடங்குகிறார் என்றாலும், அவருடைய நுட்பமான பார்வையும், மனத்தின் சுறுசுறுப்பும், அபார சக்தியும் இளமை ஒளிவீசவே செய்தன. அவரது பூரண தேஜஸ் முகத்தில் பிரகாசித்தது. மேஜை மீது அடுக்கடுக்காகப் புத்தகங்கள் நிறையக் கிடந்தன. தாமாக எழுதியிருந்தகையெழுத்துப் பிரதிகள் சிலவும் இருந்ததைப் பார்த்தேன். பருவக் காற்றுகள், பேய்க் காற்றுகள் பற்றியெல்லாம் அவர் இப்போதெல்லாம் ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார். இவை பற்றிய கட்டுரைகள்தாம் இக்காகிதங்கள். வானிலை பற்றி அவர் எழுதிக் கொண்டிருக்கும் வியாசத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். ''இந்தியாவின் கடந்த ஆயிரம் ஆண்டு சரித்திரமே இந்திய வானிலைப் படத்தில்தான் அடங்கியிருக்கிறது. இந்தியாவின் பூகோள அமைப்புத்தானே பருவ மழைகளையும், இதர வானிலை நிகழ்ச்சிகளையும் தோற்றுவிக்கக் காரணமாயிருக்கிறது?'' என்று டாக்டர் ராமன் உற்சாகத்துடன் சொல்லி, மேலும் விளக்கத் தொடங்கி விட்டார். பூமண்டலத்தைச் சுற்றி ஒட்டியாணம் பூட்டினாற்போல் நூறு மைல் அகலம், இரண்டு மைல் கனமுள்ள காற்று வெள்ளம் மணிக்கு இருநூறு அல்லது முந்நூறு மைல் வேகத்தில் சதா வீசிக் கொண்டிருக்கிறது! இந்தக் காற்று வெள்ளத்துக்கு ''ஜெட் ஸ்டீரீம்'' (பேய்க் காற்றுக் கால்வாய்) என்று பெயர். சுமார் 20, 25 ஆண்டுகளாகத்தான் இதைப் பற்றி நமக்குத் தெரியும். சமீபத்தில் வான வியல் தத்துவம் பற்றி அதற்கு முன்னுரை போல் இரண்டு அபூர்வமான சொற்பொழிவுகள் நிகழ்த்தினார் ஸர் ராமன். இங்கே இவர் ஆராய்ச்சிக் கூடத்தில் 'ஜெட் ஸ்ட்ரீம்' என்ற பேய்க் காற்றைப் பற்றித் தாமே புதுப் புது விஷயங்களை அறிந்து கொண்டு மற்றவர்களுக்கும் விளக்கம் தர முயன்று கொண்டிருக்கிறார். எனினும், அவருடைய விஞ்ஞான ஆராய்ச்சியில் இது ஒரு பிரதான அம்சமே அல்ல. ''என்னுடைய விஞ்ஞானத்தில் இது ஒரு புழக்கடைத் தோட்டம் போல'' என்கிறார் வெகு அலட்சியமாக.

அவர் மேஜை மீது சிதறிக் கிடந்த புத்தகங்களைக் கண்ணோட்டமாகப் பார்த்தேன். அவருடைய அனுமதியுடன் ''ராமன் ஒளிக் கதிர்கள் — தத்துவமும் நடைமுறையும்'' என்று சமீபத்தில் நியூயார்க் ப்னீனம் ப்ரஸ் பிரசுரித்துள்ள ஸர் ராமனுடைய புகழ் பெற்ற புத்தகத்தைக் கையில் எடுத்தேன். ஒளி பற்றியும், வர்ணங்கள் பற்றியும் டாக்டர் ராமன் எப்போதுமே மிகுந்த அக்கறையுடன் ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார் என்பது நமக்கெல்லாம் தெரிந்ததே.



கடலின் நீர், குறிப்பாக, மத்திய தரைக் கடலின் நீர் நீல நிறமாக ஏன் தோன்றுகிறது என்பதிலிருந்து எழுந்தது அவருடைய ஆராய்ச்சிகள். சுத்தத் தண்ணீரில் சூரிய ஒளி ஊடுருவிச் செல்லும்போது ஏற்படும் ஒளிச் சிதறலினால் வர்ண விசித்திரங்கள் தோன்றுகின்றனவா ? அல்லது ஒளிக்கே வர்ணங்கள் சுயமாக உண்டா? பலப் பல பரிசோதனைகள் நடத்தினார். பல ஆண்டு காலம் தொடர்ந்து ஆராய்ந்தார். என்ன முடிவு? விஞ்ஞானி ஏ. எச். காம்ப்டன் என்பவர் ஏற்கனவே எக்ஸ்ரே கதிர்களின் ஒளிச் சிதறல்களைப் பற்றி, "காம்ப்டன் எஃபெக்ட்" என்ற கண்டுபிடிப்புக்காக நோபல் பரிசு பெற்றிருக்கிறார். இப்போது டாக்டர் ராமன் காம்ப்டன் கண்டுபிடிப்பையே வேறு விதமாக, முற்றிலும் மாறுபட்ட முறையில் விளக்கம் செய்து ருசுப்பித்தார்.

இதெல்லாம் பழமைச் சம்பவங்கள். எனினும், இவை பசுமையாக நினைவுக்கு வந்தன. ஆரம்ப காலத்தில் சூரிய ஒளிக் கதிர்களையே வைத்து ஒளிச் சிதறல்களைப் பற்றி ஆராய்ந்தார். பின்னர் சூரிய வெளிச்சத்தை வர்ண வடிகட்டிகள் (Filters) மூலம் பாய்ச்சிப் பரிசோதனைகள் நடத்தினார். பிறகு மெர்க்குரி ஆவி விளக்குகள் மூலமும் மற்றும் இதர பல பொருள்கள் மூலமும் ஆராய்ச்சிகள் நடத்திப் புதுவிதமான ஒளிக் கற்றைகள் தோன்றுவதைக் கண்டுபிடித்தார். இவைகளே "ராமன் கதிர்கள்" என்றும், இக்கதிர்களின் நிற மாலையை, "ராமன் ஸ்பெக்ட்ரம்" என்றும் சொல்கிறார்கள். எந்த எந்தப் பொருள்கள்மூலம் ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றனவோ அதனதன் "ராமன் ஸ்பெக்ட்ரம்" பிரபலமடைந்துவிட்டன. இதற்காகத்தான் 1928ம் ஆண்டில் ராமனுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து உலகத்தின் பல மூலைகளிலிருந்து, பல விஞ்ஞானிகளால் ராமன் கண்டுபிடிப்பின் முக்கியத்துவம் பற்றிப் பல கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்தன.

ஆனால் டாக்டர் ராமனின் ஒளிநிற மாலைக் கண்டுபிடிப்பு பிற்காலத்தில் மவுசு குன்றிய நிலையை அடைந்துவிட்டது. யாருமே அதைப் பற்றி அதிகம் பேசுவதில்லை. பழங்கஞ்சியாகி விட்டதோ என்று எண்ணத்தோன்றியது. அதனால்தான் மறு பதிப்பாக இப்புத்தகம் இப்போது நியூயார்க் நகரத்தில் வெளியிட்டிருப்பதைக் காண எனக்கு உற்சாகம் பொங்கியது. என்னுடைய எண்ணத்தைப் புரிந்து கொண்ட டாக்டர் ராமன் சொன்னார்: "இதில் ஒன்றும் வியப்படையத் தேவையே இல்லை.... விஞ்ஞானத்தில் இது சகஜமே. இன்று பிரமிக்கத்தக்க விசித்திரமாக உள்ளது, நாளைக்கு மிகச் சாதாரண மாமூல் என்று ஆகிவிடும். ஆனால் இவை புதுமைப் பொலிவுடன் மறுபடியும் அவ்வப்போது காட்சி அளிக்கவும் ஆரம்பிக்கும்" என்றார் டாக்டர் ராமன். "இப்போது 'லாஸர்' (Laser) என்ற சக்தி வாய்ந்த ஒளிக் கற்றை கண்டு பிடிக்கப்பட்ட பின்னர், என்னுடைய பழைய கண்டுபிடிப்புக்குப் புது வேகம் வந்துவிட்டது" என்றார்.

"ஒரு லாஸரின் விலை எவ்வளவு இருக்கும்?" என்று கேட்டேன்.

"அதிகமில்லை. 10,000 டாலர்கள். (ஏறக்குறைய ஒரு லட்சம் ரூபாய்) இருக்கும். அமெரிக்காவுக்கு இது ஒரு பெரிய தொகையா ?" என்று ஹாஸ்யத்துடன் சொன்னார்.

டாக்டர் ராமனுடைய விஞ்ஞான ஈடுபாடுகள் விரிவானவை. நம்முடைய கண்ணின் உட்பகுதியான "ரெடினா" (Retina) எப்படியெல்லாம் வெவ்வேறு நிலைகளில் செயல்படுகிறது என்பதை, மற்றவர்களின் உதவியின்றி நாமே பார்த்துத் தெரிந்து கொள்ளுவதற்கு ஓர் அற்புத முறையை டாக்டர் ராமன் கண்டுபிடித்திருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்துள்ள விஷயம். இவ்வாறு அவர் கண்டுபிடித்துள்ள பல அபூர்வ விஷயங்கள் ரெடினாவின் அமைப்பு, அதன் செய்முறை, ஒளியும், வர்ணங்களும் அதில் தோன்றும் விதங்கள் — ஆகிய புதுமைகளை விளக்க மிகவும் உதவியாக உள்ளன.

டாக்டர் ராமன் விஞ்ஞானத்துக்குப் புரிந்துள்ள சாதனைகளைக் கணக்கிட்டுச் சொல்லுவதே முடியாத காரியம். எந்தெந்தத் துறைகளில் அவருடைய விஞ்ஞான நோக்கு செல்கிறது என்பது ஆச்சரியத்துக்குரியது. உதாரணமாக, புஷ்பங்கள் பற்றி அவர் மிக ருசிகரமான ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார். இந்தத் துறையில் அவருடைய கவனம் சென்றதே ஒரு குட்டிக் கதை. ஒரு சமயம் பம்பாய்க்கு ஒரு விசேஷச் சொற்பொழிவு நிகழ்த்த ராமன் சென்றிருந்தார். சாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல ஜவுளி ஆலைத் தொழிலதிபர்கள் கூட்டத்தில் காணப்பட்டார்கள். இதைப் பார்த்த டாக்டர் ராமன், வர்ணங்கள் பற்றிப் பொதுவாகப் பேசிவிட்டு, அழகிய ஒரு பூந்தோட்டத்தில் சிறிய "கை–நிறமானி" (pocket-spectroscope) யுடன் உலவிப் புஷ்பங்களின் வர்ணங்களைக் கூர்ந்து பார்த்தால் விஞ்ஞானிகள் சொல்லுவதை விடப் பல அபூர்வ விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்று விளையாட்டாகவே சொன்னார். பின்னர் இதைப் பற்றிச் சிந்தித்தபோது மற்றவர்களுக்குச் சொல்லிய ஆலோசனையைத் தாமே கடைப்பிடிக்கவில்லையே என்று தம்மையே குறைகூறிக் கொண்டார். உடனே "நானே என் கை-நிறமானியை எடுத்துக் கொண்டு தோட்டத்தில் ஆராய்ச்சிக்காகப் புறப்பட்டேன்" என்று குறிப்பிட்டு, எவ்வாறு புஷ்பங்களை வெறும் மலர்களாக அன்றி வர்ண மாலைகளாக விஞ்ஞான ரீதியில் விவரிக்கலாம் என்று சொன்னார். இவ்வாறு ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கையில் சில புதுமைகள் கண்டாராம். நீல வர்ணப் புஷ்பங்கள் சில நீல நிறத்துக்கு இருக்க வேண்டிய நிற மாலையைத் தோற்றுவிக்கவில்லையாம். ஏன் என்று தீவிரமாக ராமன் இன்னும் ஆராய்ந்து வருகிறார்.

"புஷ்பங்களின் வர்ணங்கள் இயற்கையானவை, கலபமாக வகைப்படுத்தக் கூடியவை; கணக்கற்ற விதங்களில் உள்ளவை;

புடவைகளைக் காட்டிலும் அதிகக் கவர்ச்சியுள்ளவை'' என்கிறார் டாக்டர் ராமன். தமது தோட்டத்தில் புஷ்பங்களைத் தவிர, பல கனி வர்க்கங்களையும் பயிராக்குகிறார். காப்பித் தோட்டம் கூடப் போட்டுப் பார்த்திருக்கிறார். யூகலிப்டஸ் மரங்களும், இதர பல விருக்ஷங்களும் கூடத் தமது தோட்டத்தில் வளர்க்கிறார்.

ராமன் ஆராய்ச்சி நிலையத்தைச் சுற்றி ஐந்து சிறிய வனங்களையே உண்டாக்கியிருக்கிறார். இதை ஏன் அவர் வளர்க்கிறார்? அவர் வேடிக்கையாகச் சொல்லுவதைக் கேளுங்கள். ''இந்துக்கள் வாழ்க்கை முறையில் மூன்றாவது ஆசிரமமாக வானப்பிரஸ்தாசிரமம் அவசியம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை மேற்கொள்ள வேண்டுமானால் வனம் செல்ல வேண்டும். அப்படிச் செல்வதற்குப் பதிலாக வனத்தையே நான் இருக்கும் இடத்துக்கு வரவழைத்து விட்டேன். தெரிகிறதா?'' இந்த வனத்திலுள்ள செடிகொடி முதலியவற்றைக் குறிப்பிடும் போது, ''இங்கே ஒரு சிறு கோரைப் புல்கூட எனக்குத் தெரியாமல் என்னுடைய உத்தரவு இல்லாமல் வளர்ந்ததில்லை...... பெங்களூரின் அழகு இப்பொழுதெல்லாம் மிகவும் மாறிவிட்டது. எல்லோரும் மரங்களை வெட்டித் தள்ளுகிறார்கள். மற்றவர்கள் செய்யும் குற்றங்களுக்குப் பரிகாரமாக நான் பிராயச்சித்தம் செய்கிறேன். மற்றவர்கள் மரங்களை வெட்டித் தள்ளுகிறார்கள்; நான் மரங்களை நடுகிறேன்'' என்றார்.

பண்டைக் காலத்திய இயற்கைத் தத்துவ ஞானிகள் பற்றிப் படிக்கிறோம். கேள்விப்படுகிறோம். டாக்டர் ராமன் இக்காலத்திய இயற்கைத் தத்துவ ஞானி. இவ்வகையில் புகழ்பெற்ற ஐன்ஸ்டீனுக்கு ஒப்பானவர் ஸர் ராமன். ஒரே துறையில் விசேஷ ஆராய்ச்சிகள் நடத்தி, மற்றத் துறைகளில் ஒன்றும் தெரியாது இருக்கும் வாழ் முறையில் ராமனுக்குப் பிடிப்பு இல்லை. அப்படி இருந்தால் வாழ்க்கையின் விசேஷ லாபத்தை அடைய முடியாது என்பது அவருடைய கருத்து. அறிவியலின் எந்தத் துறையுமே அவருக்குப் புறம்பானதல்ல. அவற்றில் அவர் புகாத சந்து பொந்துகளும் இல்லை.

அவருடைய இளமையின் ரகசியம் என்னவென்று கேட்டதற்கு அவர் சொல்லும் பதில்: ''நான் அமித உணவு உட்கொள்வதில்லை. மிதமான ஆகாரம்தான். தினம் சுமார் பத்து மணி நேரம் தூங்குகிறேன், ஏறக்குறைய சிறு குழந்தைகளைப் போலவே. சில சமயம் கவலைகள் எனக்கு வேதனை தருகின்றன. அப்போதெல்லாம் முடிந்த வரையில் அவற்றைச் சமாளிக்க முயலுவேன். இல்லாவிட்டால் விட்டு விடுவேன். மனத்தை வீணாகக் குழப்பிக் கொள்வதில்லை.''

அவருடைய ஆராய்ச்சி நிலையத்தைப்பற்றி விளம்பரத்தை அவர் விரும்புவதில்லை. ''இது என்னுடைய அமைதியான இடம். எனக்குப் பிடித்தமான வேலையை இங்கே செய்து இன்பம் காண்கிறேன். யாருடைய தலையீடும் இல்லாதிருக்க, உங்களைப் போல் பேட்டிக்கு வருபவர்களின் தலையீடு கூட இல்லாதிருக்கவே விரும்புகிறேன்'' என்றார். இத்



ஒரு டாக்டர் வீட்டில் குழாய் ரிப்பேர்க்காரர் வேலை செய்துவிட்டு 25 ரூபாய் கூலி கேட்டார்.

''நானே இருபது ரூபாய்தானே, பீஸ் கேட்கிறேன். தெரியுமா?'' என்றார் டாக்டர்.

''அது சரி. ஆனால் நான் என் வேலைக்கு இரண்டு வருஷங்கள் உத்தரவாதம் கொடுக்கிறேனே!'' என்றார் குழாய் ரிப்பேர்க்காரர்.

ஆதாரம்: 'ரோடேரியன்'
தகவல்: 'மன்னன்'

தகைய மனப்பான்மையின் உயர்வுதான் என்னே! மலை உச்சியில் அல்லது அடர்ந்த வனத்தில் ஆத்மானு சந்தானம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் ஞானியைப் போல் அறிவையே நாடும் அற்புத விஞ்ஞானியாக விளங்குகிறார் டாக்டர் ராமன், அவருடைய ஹெப்பாள் ஆசிரமத்தில்.

நோபல் பரிசு விஞ்ஞான உலகம் அளிக்கும் மிக உயர்ந்த பரிசு. டாக்டர் ராமனுடைய விஞ்ஞான மேதைக்கும், விஞ்ஞானத்துக்கு அவர் சாசுவதமான கண்டுபிடிப்பாக அளித்துள்ள சாதனைக்கும் உலக விஞ்ஞானிகள் அளிக்கும் கௌரவம் இது. அவருடைய அறையில் ஓர் அலமாரியில் அவருக்குக் கிடைத்த பதக்கங்களும் பரிசுகளும் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கின்றன. 1928ல் இத்தாலி விஞ்ஞானக் கழகம் அளித்த ''மட்டூஸ்ஸி'' பதக்கம்; 1930ல் இங்கிலாந்து ராயல் சொஸைட்டி அளித்த ''ஹ்யூஸ்'' (Hughes) பதக்கம்; 1930ல் நோபல் பரிசு; 1942ல் அமெரிக்காவின் ஃப்ராங்க்லின் பதக்கம்; பிரான்ஸ் நாட்டின் பதக்கம்; 1956ல் கிடைத்த லெனின் பதக்கம், மற்றும் பல அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஸர் ராமன் மிகவும் பெருமையுடன் போற்றுவது எது தெரியுமா? 1904ம் ஆண்டில் பௌதிகவியலில் மாநிலத்தில் முதல் வகுப்பில் முதன்மையாகத் தேறிய மாணவன் என்பதற்காகப் பல்கலைக் கழகம் அளித்த தங்கப் பதக்கம்தான். பிற்கால விஞ்ஞான வளர்ச்சியின் ஆரம்பத்தை 1904லேயே காண்பிப்பதற்கு இந்தத் தங்கப் பதக்கம் தானே சான்று கூறுகிறது!

தமது எண்பதாவது வயதை நவம்பர் 7ந் தேதி அன்று தொடங்கிய ஸர் ராமனுக்குப் பல்லாண்டு கூறி வாழ்த்துகிறோம்.

(தமிழாக்கம்: எம். எஸ். சிவஸ்வாமி)

கல்லுக்குள் ஈரம்

ர.சு.நல்லபெருமாள்

வெள்ளிவிழா இரண்டாவது பரிசு நாவல்



அத்தியாயம் 44

யாரைத்தான் நம்புவது?

“நீங்கள் இப்போது போர்க் களத்தில் இல்லையே. அப்படி உண்மையிலேயே ஒரு போர் தொடங்குமானால் நானே உங்களுக்குத் திலகமிட்டுப் போர்முனைக்கு அனுப்பி வைப்பேன்'' என்றாள் திரிவேணி உணர்ச்சிப் பெருக்குடன்.

''போர்க் களத்தில் எதிர் எதிராக நின்று சண்டை யிடுவது மட்டும்தான் போரா? நாம் நடத்துவது சுதந்திரப் போர். எதிரி போர்க் களத்தில் இல்லை. நாடு முழுவதும் பரவியிருக்கிறான். அவனை விரட்ட எத்தனையோ உபாயங்களைக் கையாள வேண்டி யிருக்கிறது. உங்கள் கூட்டத்தாரைப் போல் சத்தியாக்கிரகம் என்ற ஒரே ஆயுதத்தால் மட்டும் போரிட்டுக் கொண்டிருக்கும்சமயம் இல்லை இது. இந்தச் சமயத்தில் எதற்கும் தயாராக இருக்க வேண்டும். எதுவும் நடக்கலாம்'' என்றான் ரங்கமணி.

''என்ன சொன்னாலும் நீங்கள் கேட்கப்போவதில்லை'' என்று பெருமூச்சுவிட்டாள் திரிவேணி. யதேச்சையாக அவன் கரத்தைப் பார்த்தவள், ''உங்கள் பச்சைக் கல் மோதிரம் எங்கே?'' என்றாள்.

'' சொந்தக்காரரிடமே போய் விட்டது.''

''ஓ.... அது உங்கள் மோதிரம் இல்லையா?''

''அது என் விரலுக்கு ஏற்றதாயுமில்லை; அதை அதன் சொந்தக்காரரிடமே கொடுத்துவிட்டேன்.''

''ஏன், உங்கள் விரலுக்கு அது நன்றாக இருந்ததே.''

''இருந்திருக்கலாம். ஆனால் விரலுக்குப் பொருத்தமா யில்லை, கொடுத்து விட்டேன்'' என்றான் ரங்கமணி. அவன்குரல் கம்மியது.

பேசிக் கொண்டிருக்கும்போதே ஒரு தோசையை இலையில் போட்டாள் திரிவேணி.

''ஐயய்யோ! இது என்ன? எனக்குத் தொந்தி விழ வேண்டும் என்று முடிவுசெய்து விட்டாயா?''

''இதை மட்டும் சாப்பிட்டு விடுங்கள்''என்று கூறிக் கொண்டே

சாம்பாரைத் தோசையின் மீது ஊற்றினாள்.

ரங்கமணியின் வயிறு நிரம்பித் திக்குமுக்காடியது போல் அவன் உள்ளமும் நிரம்பித் திணறியது.

ரங்கமணி பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டபோது திரிவேணி வாசல் வரையில் வந்து வழியனுப்பினாள்.

''சீக்கிரம் திரும்பி விடுங்கள்'' என்றாள் திரிவேணி.

''சீக்கிரம் வந்து விடுவேன். நீ எதிர்பாராத பரிசும் உனக்குக் கொண்டு வருவேன்'' என்றான் ரங்கமணி உற்சாகத்துடன்.

''என்ன அது?'' மிகுந்த ஆவலோடு கேட்டு விட்டு அவனை விழுங்குவதுபோல் பார்த்தாள்.

''அது ஒரு பரிசு. உனக்குப் பிடிக்காவிட்டால் கூட ஏற்றுக் கொள்ள வேண்டும். என்ன?''

''எனக்குப் பிடிக்கா விட்டால் என்ன? உங்களுக்குப் பிடிக்கும் அல்லவா? நான் கட்டாயம் ஏற்றுக் கொள்வேன்'' என்றாள் திரிவேணி.

ரங்கமணி தனக்குள் சிரித்துக் கொண்டே நடையை விட்டு இறங்கித் தெருவில் நடந்தான்.

'அறுநூறு வெள்ளைக்காரர்களின் உயிர்தான் நான் உனக்கு அளிக்கப் போகும் பரிசு. உனக்கு மட்டுமா, என் தந்தை எதிர்பார்க்கும் ஒரே பரிசும் அதுதான்...' என்று அவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

பல நாட்களுக்குப் பிறகு அன்று தான் திரிவேணியின் உள்ளத்தில் உற்சாகம் பிறந்திருந்தது. கிளிக்கண்ணியை வாய் விட்டுப் பாடிக் கொண்டே வீட்டுக்குள் சென்றாள்.

ரங்கமணியைச் சுயேச்சை அச்சகத்தில் விட்டு விட்டு வீடு திரும்பிய சிவானந்தம் உற்சாகத்துடன் சீட்டி அடித்துக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான். கமலவாசகி முன் அறையில் சோபாவில் சாய்ந்த வண்ணம் எதையோ நினைத்துக் கொண்டு முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிவானந்தம், வீட்டுக்குள் நுழைந்ததுகூடத் தெரியாமல் சிந்தனையில் மூழ்கிக் கிடந்தாள். அறைக்குள் வந்த சிவானந்தம், வாசல் பக்கத்தில் சிறிது நேரம் நின்றான். கமலவாசகி திரும்பியே பார்க்கவில்லை. மெதுவாக ஓசைப்படாமல் அவள் சாய்ந்திருந்த சோபாவுக்குப் பின்னால் போய் நின்று கொண்டு தன் கையை அவளைச் சுற்றி நீட்டி விரலில் இருந்த பச்சைக் கல் மோதிரத்தை அவளுடைய கண்களுக்கு எதிராகக் காண்பித்தான்.



மோதிரத்தைக் கண்டதும் ஏற்பட்ட அதிர்ச்சியால் கமலவாசகியின் கண்கள் இருண்டன. உலகமே தலைகீழாகச் சுழல்வது போல் தோன்றியது. உடல் நடுங்கியது. ஒரு கணம் அவள் இருதயமே நின்றுவிட்டது போலிருந்தது. பதற்றத்துடன் திரும்பினாள் சிவானந்தம் சிரித்துக் கொண்டு நின்றான்.

''என்ன...? இது... ஏது...? எப்படி இது...?'' அவள் வாய் குழறியது. மேலே பேச முடியாமல் பேயறைந்தவளைப் போல் அந்த மோதிரத்தையே வெறிக்கப் பார்த்தாள். அவளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த சிவானந்தம் நல்ல வேளையாக அவள் முகத்தைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் பயந்தே போயிருப்பான். அவளுடைய முகம் அப்படி விகாரமாக இருந்தது.

''எப்படி மோதிரம்?''—பின்னால் நின்று கொண்டே கேட்டான் சிவானந்தம். அவளால்பதில் ஏதும் கூற முடியவில்லை. உடல் வியர்த்துக் கொட்டியது. அந்தக் கணத்துக்குள் என்னவெல்லாமோ அவள் மனத்தில் தோன்றி அவளை ஆட்டி வைத்து விட்டன.

''என் நண்பர் பரிசாகக் கொடுத்தார்'' என்று உற்சாகமாகக் கூறிக் கொண்டே முன் பக்கமாக வந்து அவள் பக்கத்தில் ஒட்டினாற்போல் உட்கார்ந்தான் சிவானந்தம்.

''என்ன கமலா! இப்படி வியர்க்கிறது?... ஏன்...?'' என்று பதற்றத்துடன் கேட்டான்.

''ஒன்றுமில்லை. இலேசாகத் தலை சுற்றியது'' என்றாள் கமலவாசகி. குரல் கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல் கேட்டது. அவள் பார்வை, மோதிரத்தின் மீதே இருந்தது.

''சூடாகக் காப்பி குடியேன். கொண்டு வரச் சொல்லட்டுமா?'' என்று பரிவோடு கேட்டான் சிவானந்தம்.

''வேண்டாம். சரியாகி விட்டது.'' கமலவாசகி, சேலைத் தலைப்பினால் முகத்தில் அரும்பி யிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். அவள் கைகள் இலேசாக நடுங்கின. சிவானந்தம் மோதிரத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தான்.

''நான் வேண்டாம் என்று தடுத்தும் ரங்கமணி இதை என் விரலில் போட்டு விட்டார். அவருக்குத்தான் என்மீது எவ்வளவு அபிமானம்!''

'ரங்கமணி ஏதாவது சொல்லியிருப்பானோ, பழைய கதையெல்லாம் சிவானந்தத்துக்குத் தெரிந்து விட்டதோ?' என்ற பயப் பிராந்தியில் நிலைகுலைந்து விட்ட கமலவாசகி, கொஞ்சம் கொஞ்சமாகச் சுய உணர்வை அடைந்தாள். சிவானந்தத்தை உற்றுப் பார்த்தாள். அவன் முகம் எப்போதும் போல் மலர்ச்சியோடுதான் இருந்தது. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். அதில் அவள் உள்ளத்தில் கவ்வியிருந்த பயமெல்லாம் வெளியேறி விட்டது.

சிவானந்தம் மோதிரத்தைக் கழற்றி அவளிடம் நீட்டினான். மோதிரத்தை வாங்கியபோது அவள் உடல் சிலிர்த்தது. கடந்த காலத்தின் எதிரொலி அவள் இதயத்தில் அலறியது. மோதிரத்தைப் புரட்டிப் பார்த்தாள். அதிலிருந்த சில அடையாளங்கள் அப்படியே இருந்தன. அதையே சிறிது நேரம் வெறிக்கப் பார்த்தாள். பிறகு மோதிரத்தைச் சிவானந்தத்திடம் கொடுத்தாள்.

''வந்ததிலிருந்து நான்தான் பேசிக் கொண்டிருக்கிறேனே தவிர, நீ மோதிரத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்ல வில்லையே!'' என்றான் சிவானந்தம்.

கமலவாசகி சிரமப்பட்டுச் சிரித்தாள். ''சொல்ல என்ன இருக்கிறது?'' என்று மெதுவாக முனகினாள்.

''மோதிரம் நன்றாக இருக்கிறதா, இல்லையா?''

கமலவாசகி பதிலுக்குத் தலையை அசைத்தாள்.

''உனக்கு உடம்பு இன்னும் சரியாக வில்லை. சற்று இளைப்பாறு'' என்று சொல்லி விட்டு எழுந்து தன் அறையை நோக்கி நடந்தான் சிவானந்தம்.

கமலவாசகிக்கு அப்போது தனிமை தேவைப் பட்டது. மோதிரத்தைக் கண்ட அதிர்ச்சியிலிருந்து அவள் விடுபடவில்லை. பழைய நினைவுகள் உள்ளத்தில் குடைந்து கொண்டிருந்தன.

''இந்த மரகதக் கல் மங்கினாலும் மங்கலாம், உன் நினைவு மங்குமா' என்றாரே, மரகதக் கல் மங்கவில்லை. நினைவிலிருந்து நான்தான் மங்கிவிட்டேன்.... திரிவேணி மங்காமல் இருக்கிறாளே...'

திரிவேணியின் நினைவால் உள்ளமெல்லாம் கசந்தது. உள்ளத்தில் புரண்ட எண்ணங்களோடு வெகுநேரம் நிலைமறந்து சோபாவிலேயே சாய்ந்து கிடந்தாள்.

ஃ ஃ ஃ

1942ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பித்த புரட்சி இந்திய வரலாற்றில் தனிச் சிறப்புப் பெற்றுவிட்டது. விடுதலை இயக்கத் தலைவர்கள் அனைவரும் சிறைப்பட்டுவிட்ட பின், மக்கள் தாங்களாகவே பொங்கி எழுந்த விசித்திரம் அது. நாடு முழுவதும் இமயம் முதல் குமரி வரை புரட்சி,

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி! பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் க்ரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்!

நீங்கள் பற்பொடியை விரும்பினால் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம்.
ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பரிசுத்தந்தரும், வாயில் நறுமணம்கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல்துலக்குங்கள்

...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் க்ரீமையே வாங்குகிறார்கள்.

காட்டுத் தீப்போல் பற்றிப் பரவி விட்டது. மக்கள் போர்க் கோலம் பூண்ட அதிசயம் அப்போது நிகழ்ந்தது.

மகாத்மா காந்தியின் அஹிம்ஸா போதனையை உதறித் தூர எறிந்து விட்டு மக்கள் வெறி கொண்டு செய்த காரியங்கள், தினமும் விதம்விதமான வர்ணனைகளுடன் செய்திப் பத்திரிகைகளில் வெளியாகிக் கொண்டிருந்தன. அதைக் கண்டு திரிவேணி மனம் பதறினாள். திருநெல்வேலியைச் சுற்றிலும் நிகழ்ந்த நாச வேலைகளை அறிந்து மனம் நொந்தாள். ஆற்று மணல் கூட்டத்தில் தான் வெறி கொண்டு பேசியதை நினைத்து நினைத்து மனம் புழுங்கினாள். தானே அப்படி வெறி கொண்டு மனம் தடுமாறியபோது, மற்றவர்களைக் குறை சொல்லி என்ன பயன் என்று மனத்தைச் சமாதானப் படுத்த முயன்றாள். இருந்தாலும் நிலைமை அளவு மீறி விடுமோ என்ற பயம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

ஒரு வாரமாகியும் ரங்கமணி திரும்பி வரவில்லை என்ற கவலைதான் அவளை அலைக்கழித்தது. சர்தார் கூடக் கடந்த ஒரு வாரமாகச் சரியாக வீட்டுக்கு வருவதில்லை. ஏதோ ஒரு பயங்கரச் சதி நடக்கிறது என்று திரிவேணியின் உள் உணர்வு கூறிக் கொண்டே யிருந்தது. ஒன்றிரண்டு முறை ரங்கமணியைப் பற்றி சர்தாரிடம் விசாரித்துப் பார்த்தாள். அவரிடமிருந்து உருப்படியான பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. ஏதோ ஒரு பயங்கரம் நிகழப் போகிறது என்ற உணர்வால் நிலைகொள்ளாமல் தவித்தாள் திரிவேணி.

ஒரு நாள் இரவு குமாரை அச்சகத்துக்கு அனுப்பிப் பார்த்து வரச் சொன்னாள். குமார் எட்டு மணிக்குத் திரும்பி வந்தான்.

''அக்கா! அங்கே ரங்கமணி அண்ணா இல்லை'' என்றான்.

''உள்ளே போய்ப் பார்த்தாயா? யாரிடம் கேட்டாய்?''

''உள்ளுக்குப் போகவில்லை.''

''பின்னே?''

''வாசற் கதவு உள்பக்கமாகப் பூட்டியிருந்தது. கதவு இடுக்கு வழியாகப் பார்த்தேன். எல்லா அறைகளும் இருட்டா யிருந்தன. உள்ளே ஒரே ஒரு அறையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பின்பக்கம் சென்று தென் பக்கத்துச் சன்னல் கதவின் இடுக்கு வழியாகப் பார்த்தேன். உள்ளே நம்முடைய ஐயாவும், இன்னும் நாலைந்து பேர்களும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். ஏதோ இரகசியம் போலிருக்கிறது. ரொம்ப மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ரங்கமணி அங்கில்லை'' என்றான் குமார்.

இதைக் கேட்டுத் திரிவேணி மனம் குழம்பினாள். அவள் சந்தேகித்தது உண்மையாகி விட்டது. அச்சாபீசுக்குள் ஏதோ சதி நடக்கிறது என்று திடமாக நம்பினாள். திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவளாய்ச் சமையல்காரக் கிழவியிடம் வீட்டைப் பூட்டிக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, குமாரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு சைக்கிளில் புறப்பட்டு விட்டாள். இருவரும் அச்சகத்தை நோக்கி விரைந்தார்கள். பௌர்ணமி கழிந்த மறு நாள் ஆதலால், சந்திரன் அப்போதுதான் கீழ் வானில் தோன்றி யிருந்தது. மழை மேகம் மூடியிருந்ததால் நிலவொளி மங்கலாக இருந்தது.

அச்சகத்துக்குப் பக்கத்தில் இருந்த அரச மரத்தடியில் சைக்கிள்களை நிறுத்தி விட்டுக் குமாரை அங்கேயே இருக்க வைத்துவிட்டுத் திரிவேணி மட்டும் அச்சகத்தை நோக்கிச் சென்றாள். அச்சகத்தின் பின்பக்கமாகச் சென்று தென்பக்கத்துக்கு வந்து சன்னல் கதவின் இடுக்கு வழியாக உள்ளே பார்த்தாள்.

உள்ளே ஒரு விசாலமான அறையில் ஒரு பெரிய மேஜையின் முன்னால் சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை உட்கார்ந்திருந்தார். சுற்றி மற்றவர்கள் இருந்தார்கள். ரங்கமணியைக் காணவில்லை. இரிவேணி மிகுந்த சிரமத்துடன் கண்களை இடுக்கிக் கொண்டு கதவின் இடுக்கு வழியாகப் பார்த்தாள்.

மேஜையின் மீது படம் வரையப் பட்ட ஒரு பெரிய தாள் இருந்தது. படத்தின் அமைப்பிலிருந்து அது ஓர் ஆற்றுப் பாலத்தின் படம் என்பதைத் தெரிந்து கொண்டாள். உள்ளே அவர்கள் பேசியது நன்றாகக் காதில் விழவில்லை. ஆகவே கதவிடுக்கில் காதை வைத்துக் கேட்டாள் திரிவேணி.

''ரங்கமணியைச் சந்தேகித்தாயே, பார்த்தாயா எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதித்திருக்கிறான்! அவனும் மீனாட்சியும் ஒரு வாரமாக அங்கேயே இருந்து பூர்வாங்க வேலைகள் அனைத்தையும் முடித்து நமக்குக் குறிப்புப் படமும் அனுப்பி விட்டார்கள்'' என்றார் சர்தார்.

''நாம் எப்போது அங்கு போக வேண்டும்?'' என்று ஒருவன் கேட்டான்.

''நாளை இரவு சாப்பாட்டுக்குப் பிறகு புறப்பட வேண்டும். ஆளுக்கொரு கைத்துப்பாக்கி எடுத்துக் கொள்ளுங்கள். முத்து இங்கேயே இருக்கட்டும். அச்சகத்தை அவன்தான்

பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றார் சர்தார் சொக்கலிங்கம்.

திடீரென்று பக்கத்து முடுக்கிலிருந்த ஒரு சொறி பிடித்த நாய் திரிவேணியைப் பார்த்து விட்டுக் குரைக்கத் தொடங்கியது. திரிவேணி பரபரப்புடன் அந்த இடத்தை விட்டு விலகி, மரத்தடிக்கு வந்து விட்டாள். அந்த நாய் குரைத்துக் கொண்டே அவளைத் தொடர்ந்தது. குமார் ஒரு கல்லை எடுத்து வீசவே, நாய் சற்றுத் தள்ளிப் போய் நின்றுகொண்டு ஊளையிட்டது.

இருவரும் அவசரமாகச் சைக்கிளில் ஏறிக் கொண்டு சிந்துபூந்துறைக்கு விரைந்தார்கள். திரிவேணியின் மனத்தில் பயமும், கவலையும் சூழ்ந்துகொண்டன. அன்று இரவு சர்தார், வீட்டுக்கு வரவில்லை. மறு நாள் காலையில் சர்தார் வந்ததும் ரங்கமணியைப் பற்றி விசாரித்தாள். இன்னும் இரண்டு நாட்களில் வந்து விடுவான் என்று மட்டும் சொன்னார். வேறு விவரம் எதுவும் அவரிடமிருந்து கிடைக்க வில்லை. சர்தார் காலையில் சாப்பிட்டு விட்டுச் சென்றவர், மத்தியானம் இரண்டு மணிவரை வீட்டுக்குத் திரும்பாததால் அச்சகத்துக்குப் போன் செய்தாள் திரிவேணி. அச்சகத்திலிருந்து முத்து பேசினான். அச்சகத்தில் அவன் மட்டுந்தான் இருப்பதாயும், சர்தார் எங்கு போயிருக்கிறார் என்று தெரியாதென்றும் கூறினான்.

திரிவேணியின் சிந்தனை தீவிரமாக வேலை செய்தது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாய், சைக்கிளில் தனியாக அச்சகத்துக்குப் புறப்பட்டாள். அன்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் அச்சகத்துக்கு விடுமுறை. வெளிக் கதவு சாத்தியிருந்தது. சைக்கிளை வெளிச் சுவர் மீது சாத்திவிட்டு வாசற் கதவைத் தட்டினாள். சிறிது நேரத்தில் முத்து, சன்னல் கதவைத் திறந்து எட்டிப் பார்த்து விட்டு வாசற் கதவைத் திறந்தான். வழியை மறைத்துக் கொண்டு வாசற் படியில் நின்றான்.

''யாருமே இல்லையா....?'' என்று திரிவேணி கேட்டாள்.

''இ.... இ... இல்லை.... என்ன வேண்டும்?'' என்று வாய் குழறிய படியே கேட்டான் முத்து.

''அப்பா எப்போது வருவார்கள்?''

''தெரியவில்லை....''

''எனக்குத் தலைசுற்றுகிறது; சோடா வேண்டுமே!'' என்றாள் திரிவேணி, ஒரு கையால் தலையைப் பிடித்துக்கொண்டு. முத்துவைத் தாண்டிக் கொண்டு அச்சகத்துக்குள் சென்று ஒரு நாற்காலியில் சாய்ந்து கொண்டாள். (தொடரும்)



பல்ஜ் போர்

போரை விரும்பாவிடினும் வீரத்தை, துணிவை, சாகசங்களை எந்த நாட்டினரும் வழிபடத்தான் செய்வார்கள். வீரமில்லா நாட்டுக்கு வாழ்வில்லை. வீரர்களை உருவாக்காத நாடு வாழ்ந்ததுமில்லை. இரண்டாவது உலகப் போரில் ஜெர்மானியர் தோல்வியைத் தழுவப் போகிறார்கள் என்ற ஒரு நிலை உருவாகி விட்ட தருணம். நேசப் படைத் தலைவர்கள் அந்த நம்பிக்கையிலேயே செயல் படுகின்றனர். அந்த நிலையில் அடிபட்ட புலியாக நாஜிகள் ஏதோ ஒரு முடிவான திட்டத்துடன், கடைசி முயற்சியாகத் தங்களைத் தழுவ வரும் தோல்வியைத் துடைத்தெறிய மர்மமான திடீர்த் தாக்குதலை நடத்திச் சூழ்நிலையை மாற்றியமைக்கக் கூடும் என்று நம்புகிறார் அமெரிக்க லெப்டினெண்ட் கெல்லி என்பவர். இதை அவரது மேலதிகாரிகள் கேலிசெய்கிறார்கள். ஆனால் அதுவே உண்மை என்பதை விரைவில் உணரும் நிலை வந்த போது அமெரிக்கப் படைகளைக் கொன்று குவித்துப் பயங்கரமான முறையில் 'டைகர்' டாங்கிகளின் அசுர பலத்துடன் முன்னேறி வருகிறான் நாஜி படைத் தலைவன் ஹெஸ்லர். அவர்களின் டாங்கிகளை எதிர்த்து நிறுத்தும் வல்லமை யாருக்குமில்லை. அந்த டாங்கிகளுக்கு ஜீவாதாரமான பெட்ரோல் விநியோகம் துண்டிக்கப்படுமானால் ஒருவேளை வெற்றி பெறலாம் என்ற நிலையில் செயல் படுகின்றனர் அமெரிக்கர். அதிர்ஷ்டவசமாக வெற்றியும் அடைகின்றனர்.

போரையே வெறுப்பவர்களையும் வீறு கொள்ளும் வகையில் சாகசச் செயல்களைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள் இந்தப் படத்தில் வார்னர் பட நிறுவனத்தினர். யுத்த களத்தில் நம்மையே கொண்டு போய் நிறுத்தி அதன் கொடுமைகளை, கோரங்களை, வீரத்தை மிகச் சிறப்பாகக் காட்டியிருக்கிறார்கள். காமிராவைக் கையாண்டிருக்கும் அற்புதத்தைக் கண்டு வியப்படையாமலிருக்க முடியாது. பெல்ஜியம் நாட்டில் உண்மையாக நடந்த இந்தச் சம்பவத்தைப் போர்க் கலையிலும் படக் கலையிலும் வல்லவர்களான அமெரிக்கர் படமாக்கித் தந்தால் எப்படி இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. வீரமும் சாகஸமும் விரும்புவர்களுக்கு இப் படம் ஒரு விருந்து.



இரவு நேரம். அலகாபாத் நகரின் வழியில் காரை ஓட்டிக் கொண்டிருந்தார் நேரு. எதிரே பசு மாடு ஒன்று வந்தது. அந்த மாட்டின் கொம்பில் காரின் கைப்பிடி இடித்துக் கொம்பு முறிந்துவிட்டது. சாலையில் யாரும் இல்லை.

காரை நிறுத்தி விட்டார் நேரு. சிறிது நேரம் கழிந்தது. மக்கள் கூடி விட்டனர். அப்பசுவின் சொந்தக்காரரும் வந்தார். நேரு ஓட்டிய கார்தான் கொம்பில் மோதி யது என்பது தெரிந்தது. ''பரவாயில்லை, காரை ஓட்டிக் கொண்டு போங்கள்'' என்று சொல்லி விட்டார் மாட்டின் சொந்தக்காரர். நேரு அவரது முகவரியைக் கேட்டுக் கொண் டார். கார் புறப்பட்டுச் சென்றது.

மறு நாள் அந்த மாட்டுக்காரருக்கு 30 ரூபாய் அனுப்பி வைத்தார் நேரு !



சிறுவயதில் படிப்புக்காக டாக்டர் ராம் மனோகர் லோஹியா லண்டனுக்கு அனுப்பப்பட்டார். ஆனால் தாய்நாட்டை அடிமைப் படுத்திய நாட் டில் கல்வி பயில மறுத்து, பெர்லின் சென்று மேல் படிப்புபடித்த வர்லோஹியா. 1933ல் சென் னையில் சல்லிக் காசு இல்லா மல் கப்பலில் வந்து இறங் கிய லோஹியா, சென்னைப் பத்திரிகை ஒன்றுக்குக் கட் டுரை எழுதிக் கொடுத்து, அந்தப் பணத்தில் கல் கத்தா சென்றார்.



—நாயக்



அடால்ப் ரைபர் என்பவர் மனைவிக்குத் தாம் அணிவித்த ''மணமோதிரம்'' தொலைந்து விட்டதென்று அறிந்து ஆத் திரம் கொண்டார். அவரது ஆத்திரத்தைத் தணிக்க அவர் மனைவி அவருக்குப் பிரிய மான கோழிப் புலவு தயாரிப்ப தற்காகக் கோழிக் குஞ்சை அறுத்தாள். அக்கோழியின் வயிற்றில் அந்த மோதிரம் இருந்தது.

தகவல் எறும்பு

குட்டி எலக்டிரானிக்

நீங்கள் படத்தில் பார்ப்பது ராக்கெட் அல்ல. டெலிவிஷன் டியூப்பில் பொருத்தக் கூடிய 'எலக்டிரானிக் கானன்' எனப் படும் கருவி. இது ஒரு விரலின் அளவுதான் இருக்கும். சிவப்பு, பச்சை, நீலம் ஆகிய மூன்று நிறங் களுக்கான மூன்று பகுதிகளை இக்கருவியில் காணலாம். ஒரு விநாடிக்கு 300 லட்சம் மின் காந்தத் துடிப்புகளை இயக்குவதின் மூலம் ஒரு வண்ணப் படம், டெலி

பஞ்சுவைப் பக்கம் 1

ஆமை வேகம்

மிக மிக மெதுவாக நடைபோடும் பேர்வழிகளை, 'என்ன இது! ஆமை வேகத்தில் நடக்கிறாய்?' என்று கிண்ட லாகக் கேட்கிறோமே, அந்த ஆமையின் வேகம் எவ்வளவு தெரி யுமா? மணிக்கு ஐம்பது கஜ தூரம் தான்! சாதாரணக் குதிரை மணிக்கு நாலரை மைலும், பிரயாணம் செல்லும் குதிரை மணிக்குப் பதினன்கு மைலும், பந்தயக் குதிரை முப்பது மைலும் ஓடுகின்றன. பறவைகளில் கழுகுதான் (பறவை ராஜா) அதிவேக மாய்ப் பறக்கக் கூடி யது. கழுகு மணிக்கு நூறு மைலும், நாரை தொண்ணூறு மைலும்



ஆஸ்திரியத் தலைநகரான வியன்னாவில் சில ஆண்டுகளுக்குமுன் ஒரு டாக்டர் இருந்தார். பேராசைக்காரர். பெரும் பணம் கிடைக்கும் என்ற கேஸ்களில் மட்டுமே வைத்தியம் செய்ய ஒப்புக் கொள்வார். ஒரு சமயம் சாதாரண ஓட்டல் சிப்பந்தி ஒருவனின் மனைவி நோயுற்று அபாயமான நிலையில் இருந்தாள். இவரை அழைத்தபோது முதலில் மறுத்து விட்டார். நிலைமை மோசமானபோது அவன் மீண்டும் வந்து கெஞ்சினான். வைத்தியர் இசைந்தார். வைத்தியம் நடந்தது. பெண்மணி பிழைக்கவில்லை. சிப்பந்தியிடமிருந்து பணம் வரவில்லை. ஆகவே கோர்ட்டிலே தாவா போட்டார் டாக்டர்.

நீதிபதி: அவன் மனைவியை நீர் பிழைக்க வைத்தாலும் சரி, கொன்றாலும் சரி, முழுக் கட்டணமும் செலுத்திவிடுவதாகப் பிரதிவாதி ஒப்புக் கொண்டாரா?

டாக்டர்: ஆம், பிரபுவே !

நீதிபதி: நீர் அவளைப் பிழைக்க வைத்தீரா?



டாக்டர்: பிரபுவே! அது அசாத்தியமான காரியம்.

நீதிபதி: எனவே நீர் அவளைக் கொன்றீரா?

டாக்டர் (ஆத்திரத்துடன்): இல்லவேயில்லை. அப்படியும் ஒருவன் செய்வானா ?

நீதிபதி: சரி, அப்படியானால் நீர் அவளைக் கொல்லவும் இல்லை. பிழைக்க வைக்கவும் இல்லை. அதாவது ஒப்பந்த ஷரத்தை நீர் பூர்த்தி செய்யவில்லை. ஆகவே, ஒரு தம்பிடியும் உமக்கு உரிமையில்லை. உமது தாவா செல்லாது. வழக்கை டிஸ்மிஸ் செய்கிறேன்.


தகவல்: 'ரமண்'; ஆதாரம்: 'ஃப்ரீ இந்தியா.'

பல்சுவைப் பக்கம் ௨

கருவி

விஷனில் கண்ணுக்குத் தெரிகிறது. இப் படத்தில் காணப்படும் கருவியின் நீளம் 9 சென்டி மீட்டர் தான். மேல் பகுதியிலிருந்து மூன்றுவித மின் காந்தக் கதிர்கள் கிளம்பி கீழ்ப் பகுதிக்கு வருகிறது.

—(யூ. பி. எஸ்.)




புறா அறுபது முதல் எண்பது மைலும், காக்கை இருபத்தைந்து மைலும் பறக்கின்றன.

தகவல் :
குத்தாலம்
வீ. சம்பந்தன்

பிரிட்டனின் தொழில் நுணுக்க மந்திரி, சவுத்தாம்ப்டன் என்னுமிடத்தில் கம்ப்யூட்டர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தபோது, ''கம்ப்யூட்டர்கள் சமூகத்தின் சார்பாக இம் மாநாட்டைத் திறந்து வைத்த மந்திரிக்கு நன்றி செலுத்துகிறேன்'' என்று ஒரு கம்ப்யூட்டரே பேசியதாம். பேச்சின் பல்வேறு வகைகளைப் பற்றி ஆராய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட பேசும் கம்ப்யூட்டர் ஒன்றுதான் இப்படி நன்றி கூறிற்று.

தகவல் : எறும்பு



எங்கும் 'கு.க' என்பதே பேச்சு!

திட்டமிட்ட குடும்பம் பற்றிப் பிரசாரம் செய்வதற்காகச் சமீபத்தில் நாடு எங்கிலும் 'இரு வார விழா' நடைபெற்றது. சென்னையிலும் பல பேட்டைகளில் இவ்விழா கொண்டாடப்பட்டது. 'எங்கும் குடும்பக் கட்டுப்பாடு என்பதே பேச்சு' என்று சொல்லுமளவுக்கு - கட்டுப்படுத்த வேண்டிய ஒரு காரியத்துக்குப் பேச்சுகள் பெருகின. இவற்றை நேரில் கண்ட நமது நிருபர் தம் கருத்துக்களைத் தருகிறார். — ஆசிரியர்

''டார்லிங்!''

''போய் வந்தாயா? என்ன சொன்னார்கள்?''

''இன்னும் பதின்மூன்று மாதங்களுக்கு இடம் இல்லையாம்!''

''ஐயையோ! இப்பொழுது என்ன செய்வது?''

''அதைத்தான் இப்பொழுது நானும் உங்களிடம் கேட்கிறேன்!''

''அவர்கள் இடம் இல்லை என்று கூறி விட்டதற்காக இந்தக் காரியம் நிற்காதே!''

''நிற்காதுதான். அதனால்தான் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளாமல் இப்படி அவசரக் குடுக்கையாக யார் காரியம் செய்யச் சொன்னது என்று கேட்கிறார்கள். எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்னுகிறது!''

''நடந்ததை நினைத்து நாம் இப்போது வருந்தி என்ன பயன்? ஆகவேண்டிய காரியத்தை அல்லவா பார்க்க வேண்டும்?''

''இந்தியாவில் பிறந்திருந்தால் இந்தக் கவலை இல்லையல்லவா? பெற்றோர்கள் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்று பேறு பார்த்துப் பிள்ளையும் கையுமாகத் திரும்பக் கொண்டு விட்டிருப்பார்கள் அல்லவா?''

''அதற்கு நாம் எத்தனை பிறவிகள் எடுத்துத் தவமிருக்க வேண்டுமோ? அது போகட்டும், இந்த இக்கட்டிலிருந்து இப்பொழுது விடுபட வழி என்ன சொல்லு!''

''நாமும்தான் எத்தனையோ ஜாக்கிரதையாக இருந்தோம்; விஞ்ஞான வழிகளைப் பின்பற்றினோம். அப்படியும் நம்மை ஏமாற்றிவிட்டதே இந்த விதி!''

''விதியை இனி மதியால்தான் வெல்ல வேண்டும். அதற்குரிய அதிகாரிகள் மந்திரிமார்கள் வரையில் போயாவது இடம் கிடைக்கிறதா என்று பார்க்கிறேன். இனி விட முடியுமா?''

கணவன் வரிந்து கட்டிக் கொண்டு சூளுரைத்து விட்டுப் புறப்படுவதைக் காண மனைவிக்குத் தெம்பு பிறக்கிறது. இது வெறும் கற்பனை உரையாடலோ, நிகழ்ச்சியோ அல்ல. வெல்லமும் சர்க்கரையும் அரிதாக இருக்கும் இந்த நாளில், வர்ணனைகளில்கூட வெல்லத்தைச் சேர்க்க முடியாத நிலை. மகப்பேறு மருத்துவ விடுதிகளில் நம் நாட்டில் மட்டும் என்ன, பிரிட்டிஷ் ஆட்சியிலேயே கூட இடம் கிடைக்கவில்லை என்று நம்பகமான செய்தியை ஆதாரமாகக் கொண்டு காதும் கண்ணும் வைத்துத் தீட்டிய கலப்படக் கற்பனை இல்லாத உரையாடல் இது.

இங்கிலாந்தில் மகப்பேறு மருத்துவ மனைகளில் இடம் 'ரிசர்வ்' செய்து கொள்வதற்காகப் பல மாதங்கள் 'கியூ'வில் காத்திருக்க வேண்டியிருக்கிறதாம், நம் நாட்டில் ஸ்கூட்டருக்காக முன் பணம் கட்டிப் பல ஆண்டுகள் காத்து நிற்க வேண்டியிருப்பதைப் போல. இதிலிருந்து என்ன தெரிகிறது? மருத்துவ மனைகளில் இடம் இருக்கிறது என்றபின்தான் குழந்தைகள் பெற வேண்டும் என்பதுதானே? அப்படியானால், இந்தக் குழந்தைகள் பெறும் காரியம் மனிதன் கையில் இருக்கிறதென்பதும் ஊர்ஜிதமாகிறதல்லவா? இதை உணர்ந்து செயற்படும் இங்கிலாந்திலேயே மகப் பேறு மருத்துவ மனைகளில் இவ்வளவு நெரிசல் என்றால், மனிதனையும் மீறிய சக்தி ஒன்று செயல்படுகிறது. அது ஆட்டுவிப்பதுபோல் அவன் ஆட வேண்டியிருக்கிறது என்பதும் உறுதியாகிறதல்லவா? அந்தச் சக்தியை 'இயற்கை விதி, கடவுள், தெய்வம்' என்று எந்தப் பெயர் இட்டு வேண்டுமானாலும் அழைப்போம். அது இல்லாமல் இல்லை என்று கூறிப் புறக்கணிக்க முடியாது. இது உறுதி. எனவேதான், இப்படி மனிதனையும் மீறிக் குழந்தையைத் தரும் அந்தச் சக்தியைக் குழந்தையோடு ஒப்பிடுகிறது நமது தமிழ் சமூகம். இல்லாவிட்டால் 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்னும் பழமொழி உருவாகி யிருக்க முடியுமா? இப்படித் தெய்வத்துக்கு இணையாகப் போற்றப்படும் குழந்தையை 'வேண்டாம்' என்று கரித்துக் கொட்டும் அளவுக்கு இன்று உலகம் வளர்ந்திருக்கிறது என்றால் அந்தத் தெய்வத்துக்கும் அதே கதிதானே?

பழியைத் தெய்வத்தின் மீது சுமத்திவிட்டு ஆறறிவு படைத்த மனிதன் தன் போக்குக்கு நடக்க முற்படுவானாகில், கஷ்டங்களுக்கு இலக்காவது அவனேயொழிய அவனைப் படைத்த தெய்வமல்ல; அல்லது அவன் படைத்த தெய்வமும் அல்ல. எனவே, சீரான குடும்பம் வேண்டும், சுகமான வாழ்க்கை வேண்டும் என்று மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவரும் ஆசைப்படுவது இயல்பு. இந்த இயல்பை ஒட்டித்தான், 'ஆசைக்கொரு பெண்ணும் ஆஸ்திக்கொரு பிள்ளையும்' என்னும் பழமொழி உருவாகியுள்ளது. வாழையடி வாழையாக இந்த உலகம் வளர வேண்டும். வாழைத் தண்டை ஒடித்தால், எப்படி நூல் அறுமல் நீண்டு வருகிறதோ,



அப்படிக் குடும்ப நாளும் அறுமல் நீளவேண்டும் என்னும் பொருளும் இந்தப் பழமொழியிலே தொக்கி நிற்கிறது.

உலகம் பொய், மாயை என்னும் கூற்றுக்கு இலக்காக்கி இந்த உலகத்தை அழிக்கும் பாவத்தை யாரும் செய்யக் கூடாது. செய்யவும் முன்வர மாட்டார்கள். குடும்பம் தழைக்க வேண்டும் என்ற பெரு நோக்கோடுதான் உலகாயத காரியங்கள் அனைத்துமே நடைபெற வேண்டும்.

சீரான குடும்பமாக, குடும்பத்தினருக்குக் கிலேசம் தராத குடும்பமாக அமைய வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டவேதான் ஆசைக்கும் ஆஸ்திக்கும் முடி போட்டார்கள் நம் ஆன்றோர்கள். அப்படியின்றி, குடும்பங்கள் எக்கச்சக்கமாக வளர்ந்து, உலகம் பெருகி, அது அரசாங்கத்துக்கே தலைவேதனையாகிக் குடும்பக் கட்டுப்பாட்டுத் தினம் என்று தொடங்கி அது வார விழாவாக வளர்ந்து, இப்போது இருவார விழாவாகவும் — குடும்பங்களைப் போலவே — பல்கிப் பெருகியிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் என்ன? மக்கட் பெருக்கமும், உணவுச் சுருக்கமும்தானே?

உலகம் தலைகீழாக மாறி விட்டதா? ஆம், இந்த இக்கட்டிலிருந்து விடுபடுவதற்காக, இயற்கை முறைகளை விடுத்துச் செயற்கை முறைகளை நாடுமளவுக்கு ஆட்சிபீடமே துணிகிறது. மக்களை இம்முறைகளில் ஈடுபாடு கொள்ளச் செய்வதற்காகப் பணம் தரலாமா? 'டிரான்ஸிஸ்டர்' தரலாமா என்று ஆசை காட்டுகிறது என்றால் வேறு எப்படிப் பொருள் கொள்ள முடியும்?

ஆசைக்கென ஒரு பெண்ணை விரும்பும் மக்கள் ஒன்பது பிள்ளைகளையும், ஆஸ்திக்காக ஒரு பிள்ளையைப் பெறத் தவம் கிடப்பவன் ஒரு டஜன் பெண்களையும் பெறுவதனால்தான் அரசாங்கம் இப்படியெல்லாம் ஆசை காட்டுகிறது. மக்கள் காட்டும் இந்த ஆசை நியாயமானதுதான் என்றாலும் அதற்கு ஒரு வரம்பு வேண்டாமா? ஆசைக்கு ஓர் அளவில்லை; அது நிராசையாகாமல் இருக்க வேண்டுமானால், ஒரு வரன்முறை வகுத்துக் கொள்ள வேண்டியதுதான் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்னும் இந்த மூன்று ஆசைகளில் பெண்ணாசை முதலிடம் பெற்றுச் சமூகத்தை என்ன பாடு படுத்திவிடுகிறது!

உலகத்தை உலகமாக்கி நடத்திச் செல்பவள் பெண்; அடுத்த தலைமுறைக்கு வித்திட்டு வளர்ப்பவள் பெண்; அவள் மீது ஆசை வைத்து மனிதன் செய்யும் காரியங்கள் மிருக இச்சை என்னும் பெயர் பூண்டு மிருகங்களுக்கு அல்லவா ஓர் அவப்பெயரை ஏற்படுத்துகின்றன! ஆற அமர யோசித்தால், மாக்கள் மக்கள் ஆவதில்லை. பருவத்தில்தான் தங்கள் இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுகின்றன விலங்குகள். தாவரங்கள் கூடப் பருவத்தில்தான் பலன் தருகின்றன. காலந் தவறி அவை இச்சைகளுக்கு அடிமையாவதில்லை. 'பருவத்தால் அன்றிப் பழா' என்ற வழக்கே இதற்குச் சான்று.


ஆறறிவு படைத்த மனிதன், இத்தகைய தவறுகளுக்கு ஆளாவான் என்பதை உணர்ந்தே நமது முன்னோர்கள் நாள், நட்சத்திரம் என்று வைத்தார்கள். அதை மக்கள் கடைப் பிடித்தால், இவ்வளவு விரைவில் இனப் பெருக்கம் ஏற்பட்டிராது. ஏனெனில் விதை நெல் அத்தனையுமே சோடை போகாமல் பலன் தந்து விடுவதில்லை.

ஒரு காலத்தில் மழலைச் செல்வத்துக்காக ஏங்கித் தவித்த மனிதன், இன்று குழந்தைகளைக் கண்டால், விசுவாமித்திரர் போலப் பெருவதற்குக் காரணம், புலனடக்கத்தை அவன் கைவிட்டு விட்டதே ஆகும். காந்திஜி, ராஜாஜி போன்ற அறிவிற் சிறந்த பெரியார்கள் புலனடக்கத்தையே உபதேசித்தார்கள்; உபதேசித்து வருகிறார்கள்.

ஆட்சி பீடத்தினரோ இன்றைய இக்கட்டிலிருந்து தப்பினால் போதும் என்று எண்ணிப் பெருகி வரும் சமுதாயத்துக்குச் செயற்கை முறையில் அணை போட முயலுகிறார்கள். அதனால் ஏற்படக் கூடிய அல்லது ஏற்படுகிற லாப — நஷ்டக் கணக்குகளைப் பார்க்க இப்பொழுது அவர்களுக்குப் பொழுது இல்லை.

உலகத்துக்கே இத்துறையில் புத்தி புகட்டக் கூடிய நிலையில் இருந்த பாரதம்,















ஒட்டைச் சிவிங்கியும் ரத்த அழுத்தமும்



ஆதாரம்: லைப்.
தகவல்: ராஜாமணி

ரத்த அழுத்தம் அதிகமானுல் மனிதனுக்கு இதய நோய் வந்து விடுகிறது. ஆனுல் ஒட்டைச்சிவிங்கி மட்டும் தன்னுடைய பத்து அடி நீளமுள்ள கழுத்து வழியாக ரத்தத்தைச் செலுத்தும் போது ஏற்படும் ரத்த அழுத்தத்தால் இறந்து விடுவதில்லையே. இதுஏன்?

இதற்கு விடை கிடைத்தால் ரத்த அழுத்த வியாதிக்கும் தீர்வு காண முடியும் என்கிருர்கள் விஞ்ஞானிகள்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

மற்ற நாடுகளைக் 'காப்பி' அடித்து அதனுல் ஏற்படும் நன்மை தீமைகளைக் கணக்குப் பார்க்கும் நாள் என்றைக்காவது ஒரு நாள் வந்தால், வருந்த நேரிடும், நாம் இத்தனை கீழாகவா போய்விட்டோம் என்று!

திட்டமிட்ட குடும்பம் பற்றி அரசாங்கம் மட்டும் எண்ணிப் பார்க்கவில்லை. ஒவ்வொரு குடும்பமுமே நினைத்துப் பார்க்கிறது. ஆனுல் சுற்றுப்புறச் சூழ்நிலை மனிதனது மிருக இச்சை —தவறு—காம இச்சையைத் தூண்டுகிறதே ஒழியக் குறைப்பதாக அமையவில்லை.

இன உணர்ச்சிக்குச் சுற்றுப்புறச் சூழ்நிலை ஒரு காரணமே. இல்லாவிட்டால் இலக்கியப் படைப்பு என்று கூறப்படும் அரும் பெரும் காரியங்களில் சிருங்கார வர்ணனைகள் தோன்றியிருக்க முடியாது. அவற்றைத் தொடர்ந்து இன விழிப்புக்கென்றே புனையப் பட்டதால் அவைகளில் நாட்டம் செலுத்துபவர்களின் குடும்பங்கள் பெருகியிருப்பது கண்கூடு.

இந்த இன உணர்ச்சியை எல்லை மீறிக் கிளறிவிடுகின்றன இன்றைய திரைப்படங்கள். நம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல; உலகத்தின் ஏனைய பாகங்களிலும் இவை தம் கைவரிசையைக் காட்டுகின்றன. எத்தனை சுதரியும் குடும்பங்கள் கட்டுப்பாட்டுக்கு அடங்காமல் பெருகுவதற்குப் பெருங் காரணம் இத் திரைப்படங்களே யாகும். அரசாங்கம் இப்படி உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு வருவோடு மக்கட் பெருக்கத்துக்கும் அடிகோலும் படங்களைத் தயவு தாட்சண்யமின்றித் தணிக்கை செய்ய முன்வருமானுல், ஓரளவு மக்கட் தொகை பெருகுவது தடைப்படும்.

அடுத்தபடியாக, அக்காலத்து அவிபக்த குடும்ப முறை போய், வீட்டுக்குப் பெரியவர்களோடு வாழாமல், இளம் தம்பதிகள் தன் இச்சையாக வாழ்வதும், மக்கட்பெருக்கத்துக்குக் காரணமாகும். எனவே, இளம் தம்பதிகள் பொறுப்பு அதிகமாகிறது. குடும்பப் பொறுப்பைக் கச்சிதமாக ஏற்க வேண்டுமென்றுல், அவர்களே தங்களுக்குத் தடை விதித்துக் கொள்ள வேண்டியதுதான்.

கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் காயடிக்கக் கற்றுக்கொண்ட மனிதன், தன் சொந்த வாழ்க்கையிலும் மேற்கொள்ளுவானுகில், அவனைக் கையைப் பிடித்துத் தடுக்க யாரும் முன்வர மாட்டார்கள்.

ஆனுல் ஒன்று சிந்திக்க வேண்டிய விஷயம். இளைஞன் ஒருவன் தனக்கு இருக்கும் இரண்டு குழந்தைகள் போதும் என்று அறுவைச் சிகிச்சைக்கு உட்படுகிருன் என்று வைத்துக்கொள்வோம். நெருப்பு என்றுல் வாய் வெந்து விடாது. முதல் இரு குழந்தைகளையும் பறிகொடுக்க நேர்ந்தாலோ, அல்லது அவனை இரண்டாம் தாரம் கொள்ளுமாறு இயற்கை சதி செய்து விட்டாலோ — தம்பதிகளின் அல்லது இரண்டாந்தாரமாக வருபவளின் நிலை என்ன? தனக்கென்று இரண்டாந் தாரமாக வருபவள் ஒரு குழந்தைக்கு ஆசைப் பட்டால்...? அந்த ஆசையைத் தவருகக் கூறிவிட முடியுமா?

திருமண வயதை ஆணுக்கும் பெண்ணுக்கும் உயர்த்தி விட்டால்...? இப்படி ஒரு சட்டம் கொண்டுவரப் பார்க்கிறோம். நாட்டின் வெப்ப தட்ப நிலைக்கேற்ப உடற்கூறு அமைகிறது என்பதை மறந்து! அதைச் சொன்னுலும் பரிஹாரி, இதைக் கேட்டாலும் நோயாளி என்பது போல.

சட்டம் என்பது வரையறுப்பதாக இருக்க வேண்டுமே ஒழிய விரிவுபடுத்துவதாக இருக்கக் கூடாது. இந்த வயதுக்கு மேல்தான் திருமணம் செய்யலாம் என்று சட்டமியற்றினுல் இந்தக் காலத்துச் சூழ்நிலையில் திருமணம் ஆறுற்போலத்தான்! எல்லாப் பெண்களும் கன்னியர்களாக இருந்துவிட்டால், ஜனத் தொகைப் பெருக்கம் குறைந்துதானே ஆக வேண்டும்? இப்படியும் கணக்குப் போடலாம்.

ஆனுல், இது கற்புக்குப் பெருமை சேர்த்த பாரதத்தின் பண்புக்கு ஒவ்வாதது; பெருமை தராதது. எனவே, எதுவும் காலாகாலத்தில் நடக்க வேண்டும். மக்கள் ஒழுக்கத்தால் உயர வேண்டும்.

இந்தக் கருத்தைத்தான் மக்களிடையே பரவவிட வேண்டுமே ஒழிய, இனப் பெருக்கத்தைத் தடுத்து, இன்ப வாழ்க்கையைக் காண — அதுவும் மருந்து மாயங்கள், அறுவை — சிகிச்சைகள் மூலம் — முயல்வது தவருக முடியும்.

நோயற்ற வாழ்வோடு இன்ப வாழ்க்கை வாழச் செயற்கை முறைகள் பயன்படாது. இயற்கையோடு ஒட்டி, ஒழுக்கத்தை மேற்கொண்டால், வாழ்விலே இன்பம் காண முடியும். கட்டுப்பாடான குடும்பத்தை அமைத்துக் கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் புலனடக்கத்தை மேற்கொள்ளுவதே சாலச் சிறந்தது.

'இதென்ன, பத்தாம் பசலிக் கொள்கை?' என்று கேட்பவர்களுக்கு எத்தனையோ செயற்கை வழி முறைகள் இருக்கின்றன. தீவிரப் பிரசாரமும் செய்கிருர்கள்! அவர்களுக்குக் குறுக்கே நாம் யார்?

மூன்றாவது பரிசு நாவல்

மணக் கோலம்

பி.வி.ஆர்



அத்தியாயம் 7

கோதண்டராமனுக்குச் செய்ய வேண்டிய எல்லாக் கிரியைகளையும் செய்துமுடித்தபின் ஒரு நாள் ரவி, ராஜாவுடன் பேசிக் கொண்டிருந்தான். ஏற்கனவே கம்பெனியை மூடிவிடத் தான் முடிவு செய்துவிட்டதாக அவனிடம் கூறியிருந்தாலும் அது பற்றிய நடவடிக்கைகளைப் பற்றி இருவரும் கலந்தாலோசிக்கவில்லை.

''அப்பா பெரும்பாடு பட்டு நிலை நாட்டி விட்டுப் போன ஸ்தாபனத்தைத் திடுதிப்பென்று நிறுத்தி விடுவது எனக்குப் பிடிக்கவில்லை'' என்றான் ராஜா.

''ராஜா, நீ திரும்பத் திரும்ப ஒரே பல்லவியைத்தான் பாடுகிறாய். எனக்கு இந்தக் கம்பெனியின் வியாபாரம் ஒன்றும் தெரியாது என்று நீ நினைத்துக் கொண்டிருந்தால், உன்னைவிடப் பெரிய முட்டாள் யாரும் இருக்க முடியாது. இரும்பு வியாபாரம் என்று பெயருக்கு இருக்கே தவிர, என் அப்பா இரும்பு வியாபாரமா செய்தார்?''

ராஜா பதில் சொல்லவில்லை.

''அவர் செய்திருக்கிற அபின் பிஸினஸும் கடத்தல் தங்க பிஸினஸும் எனக்குத் தெரியாமல் இருக்க நான் பச்சைக் குழந்தை இல்லை.''

''அப்பாவின் ஆத்மாவுக்குச் சாந்தியே இருக்காது...'' என்று ராஜா முணுமுணுத்தான்.

''எனக்கு உயிரோடு இருக்கிறவர்களுடைய சாந்திதான் முக்கியமே தவிர செத்துப் போனவர்களுடைய ஆத்மாக்களைப் பற்றிக் கவலை இல்லை. என் அப்பா என்னென்னவோ தில்லுமுல்லுகள் எல்லாம் அந்தக் காலத்தில் செய்திருக்கிறார். இரண்டு மூன்று தடவைகள் நாங்கள் சின்னக் குழந்தைகளாக இருக்கிற போது, நடு ராத்திரியிலே போலீஸ் சோதனைகூட நடந்திருக்கு.....''

''ஆனா ஒண்ணும் கண்டுபிடிக்கவில்லையே.....!''

''அது என் அப்பாவின் சாமர்த்தியம். அதனாலே செய்தது சரியா? எதற்குச் சொல்றேன்னா நான் இந்தக் கம்பெனியை ஏற்று நடத்தினா, அப்பாவுக்குக் கிடைச்சிருக்கிற கெட்ட பெயர் ஒண்ணுதான் கிடைக்கும். எனக்கு அது வேண்டாம். அதனாலே பிஸினஸை 'க்ளோஸ்' பண்றதுக்கு எல்லா ஏற்பாடுகளையும் ஆரம்பி.... எனக்கு உன்னுடைய அக்கௌண்ட்ஸ் எல்லாம் வேணும். நானும் அதைச் செக் பண்றேன்......''

''உங்களுக்குச் 'செக்' பண்ணத் தெரியுமா....?''

''சந்தானம் இருக்கிறான். அவன் பார்க்கிறான்!''

''சந்தானமா? அப்போ என் மேலே நம்பிக்கையில்லையா?''

''இல்லேன்னுதான் வெச்சுக்கோ.... என்னுடைய அப்பாகிட்டே பெர்ஸனல் செக்ரடரியா இருந்தவனை என்னால் எப்படி நம்ப முடியும்?''

ராஜாவுக்குக் கோபம் தலைக்கேறியது. இருந்தாலும் அடக்கிக் கொண்டான். ரவி மனத்தில் பட்டதை ஒளிக்காமல் சொல்லுகிறவன். ராஜாவின் கோபம் அவன் மீதுள்ள அவநம்பிக்கைக்கு உரமாகப் போய்விடும். ரவியைப் போல் உள்ளவர்களைச் சாதுரியத்தாலும் பொறுமையாலும்தான் வெல்ல முடியும்.

''சரி.... இன்னும் பதினைந்து நாளிலே எல்லா லெட்ஜர் அக்கௌண்ட்ஸையும் 'கம்ப்ளீட்' பண்ணச் சொல்றேன். ஆடிட்டரும் பார்க்கட்டும்.''

''ஆடிட்டர்கிட்டே நான் காட்டிக் கொள்ளுகிறேன்.....''

''சரி.....''

''ராஜா.... இன்னொரு விஷயம். அப்பா உயில் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறாராம். வக்கீலிடம் சாவகாசமாகப் பார்த்துக் கொள்ளலாம்னு சொல்லியிருக்கேன். நீ கம்பெனியை 'க்ளோஸ்' பண்றதுக்கும் அதுக்கும் சம்பந்தம் இருக்காது. இருந்தாலும் இரண்டு நாட்களிலே ஊர்ஜிதப்படுத்தறேன். நீ ஆரம்பிக்க வேண்டியதை ஆரம்பித்து விடு.....!''

ரவியை நன்றாகப் புரிந்து கொண்ட ராஜா, அவன் முழுப் பைத்தியமாக அதிக நாள் செல்லாது என்று தன்னுள் நினைத்துக் கொண்டான். அதே சமயத்தில், அன்று பாக்கெட்டில் எடுத்துப் போட்டுக் கொண்ட இரு 'செக்' தாள்கள் நினைவுக்கு வந்தன. அந்த இரு தாள்களில் ஒன்று அவனைக் காட்டிக் கொடுத்து விடும். கோதண்டராம

ஷின் சடலத்தைச் சுற்றி எல்லாரும் கதறிக் கொண்டிருக்கையில், சமக் கிரியைக்கான ஏற்பாடுகளைச் செய்ய அவன் சென்றதுதான் அவர்களுக்குத் தெரியும். மரணச் செய்தியை இன்னும் அறிந்திராத பாங்கிச் சிப்பந்தி எண்ணிக் கொடுத்த ரூபாயைப் பற்றி அவர்கள் எப்படி அறிவார்கள்?

இன்றுவரை அவன் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் கணக்கு களைச் சந்தானம் பரிசீலனை செய்ய நேர்ந்தால் அவனுடைய அனுபவக் கண் கண்டு பிடித்து விடுமே? கோதண்ட ராமன் இறந்த பிறகு மாற்றின செக் மூலம் கிடைத்த பணம் என்னவாயிற்று என்று ரவி கேட்டால் அவன் என்ன பதிலைச் சொல்வான்?


ஃ ஃ ஃ

ரவி வெளியே சென்றதும் சீமாச்சு அங்கே வந்தான்.

''என்ன ராஜா... உலகம் எப்படிப் போகிறது?'' என்றான்.

மூவாயிரம் ரூபாயை இந்த ஆள் எங்கோ ஒளித்து வைத்துவிட்டு இப்படிக் குண்டு தைரியமாக இருக்கிறான் என்று வியந்து கொண்டே, 'ஏதோ போறது' என்றான் ராஜா.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு இருவ ரிடையேயும் ஒருவிதப் பிணைப்பு ஏற்



பட்டது. வாழ்ந்தாலும் விழ்ந்தாலும் இருவரும் சேர்ந்துதான் அது நடக்கும் என்ற எண்ணம் இருவருக்கும் இருந்தது தான் அந்தப் பிணைப்புக்குக்காரணமோ?

''இன்னமே எல்லாம் 'டல்'தான்.... எனக்கு. என்னிக்குச் சீட்டு கிழிக்கப் போகிறார்களோ...? கோதண்டராமன் செத்துப்போனது வாஸ்தவத்திலேயே ரவிக்கும் அகிலாவுக்கும் நஷ்டமில்லே. நம்மைப் போல இருக்கிறவர்களுக்குத் தான் நஷ்டம்!'' என்றான் சிமாச்சு.

''இரைஞ்சு பேசாதே!''


''கேட்கிறதுக்கு யாருமில்லே. பாக்கியம் மாடியிலேதான் இருக்கா!'' என்று கத்தினான் சிமாச்சு.

''சரி சரி... நீ போ...நீயும் நானுமா அடிக்கடி சேர்ந்து பேசினாலே சந்தேகம் வரும். அன்னிக்கு ராத்திரி நான் வந்து தலைவலி மாத்திரையும் சோடாவும் வாங்கிண்டு வரச் சொன்னதாகச் சொன்னாயாமே...... அதை அகிலா விசாரிச்சா... பர்ஸைத் தேடறதுக்கு வந்தேன். அப்போதுதான் உன்னை அனுப்பிச் சென்னேன். ஏன் இப்படிச் சமயத்திலே உளறி வைக்கிறே? அகப்பட்டுக்கொள்றதுக்கா?''

''வாய் பிசகிவிட்டது...ஆனால் சமாளிச்சுண்டேனே?''

''இன்னும் அது மாதிரிப் பிசகாமல் இருக்க என்கிட்ட அடிக்கடி வராமல் இரு!''

ராஜா வெறுப்புடன் அவனைப் பார்த்துவிட்டு எழுந்தான்.



வக்கீல் தேசிகாச்சாரி நிறுத்தி நிதானமாக உயிலைப் படிக்க, ரவியும் அகிலாவும் கேட்டுக் கொண்டே வந்தார்கள். நடுநடுவே தன் திருப்தியையோ அதிருப்தியையோ வெளியிட அகிலா வாயெடுத்தாள். ஆனால் ரவி சைகையால் அவளை அடக்கினான்.

படித்து முடிந்ததும் தேசிகாச்சாரி மூக்குக் கண்ணாடியை எடுத்து, கையில் வைத்துக் கொண்டே, ''மிஸ்டர் ரவி! கோதண்டராமன் சுய அறிவோடுதான் இதை எழுதினார்...... அன்னிக்கே நான் சொன்னேன். 'பிள்ளையையும் பெண்ணையும் இப்படி வஞ்சிக்கிறது சரியல்ல'ன்னு.... அவர் பிடிவாதமாகக் கத்தினார். எங்கே கத்தற கத்தலிலேயே 'ஹார்ட் அட்டாக்' என் கண் முன்னாடி வந்துடுமோன்னு அப்புறம் நான் வாய் திறக்கல்லே...''

ரவி சிரித்தான்.

''உசிரோடு இருக்கிறப்போ எங்க அப்பாவுக்கு நல்ல பேர் இல்லை... ஆனால் இப்பத்தான் எங்க அப்பா பேரிலே இதுவரை தோணாத மதிப்பும் மரியாதையும் தோணியிருக்கு... அகிலா நீ என்ன சொல்றே?''

''அப்பாவின் கல்லான மனசை அவருடைய முதல் 'ஹார்ட் அட்டாக்' கரைச்சிருக்கு...''

தேசிகாச்சாரி ரவியையும் அகிலாவையும் மாறி மாறிப் பார்த்தார். உயில் எழுதிய கோதண்டராமன் பைத்தியமா அல்லது இந்த உயிலைப் பத்திச் சந்தோஷப்படுகிற இந்த இரண்டும் பைத்தியங்களா?

அவர் மெதுவாகச் சொன்னார்.

''வெள்ளைக்காரா சிலபேர் வீட்டுச் சமையல்காரிக்கும் தோட்டக்காரனுக்கும் ஏதாவது எழுதிவைப்பா உயிலிலே. அது தெரியும் எனக்கு. உங்கப்பா மாதிரி முன்னே பின்னே பார்க்காதவர்களுக்கும் அவரோட சம்பந்தப்படாதவர்களுக்கும் எழுதி வைச்சு நான் பார்த்தது இல்லை...''

''இரண்டு மூன்று தர்ம ஸ்தாபனங்கள் படித்தீர்களே அதெல்லாம் தான் அவருடன் சம்பந்தப்படாதவை. பாக்கி எல்லோரும் சம்பந்தப்பட்டவர்கள்தான்.''

''யாரு, இந்த வடக்கத்திக்காரன்களும், சாம்பமூர்த்தியின் குடும்பமும், வேதாசல முதலியார் குடும்பமுமா?''

''என்னென்ன சம்பந்தமிருந்ததோ.. விசாரித்துப் பார்த்தால் தெரியும்!'' என்ற ரவி, ''இந்த உயிலைக்கூட அமுலாக்குகிற உரிமையை என்கிட்டே தானே கொடுத்திருக்கிறார்?'' என்று கேட்டான்.

''ஆமாம். நீ ஒரு நாள் கோர்ட்டுக்கு என்னுடன் வா. அகிலா ஒரே பெண்... அவள் லட்ச ரூபாய்தானா பெறுவாள்?'' தேசிகாச்சாரி மன முடைந்தவரைப் போல் ஏங்கினார்.

''அதே ஜாஸ்தி!'' என்றான் அகிலா.

''நீயும் உன் அண்ணாவைப் போல் ஒரு கிறுக்கு!''

ரவி மெதுவாக எழுந்திருந்தான்.

''ஸார்... பணத்தை மனுஷன் தான் சம்பாதிக்கிறான். பணம் மனுஷனை என்னிக்குமே சம்பாதிக்கிறதில்லை. அதுக்கு அவனை நாசப்படுத்தத் தான் தெரியும்.....''

அவனுடைய பேச்சை ரசிக்காதவரைப் போல வக்கீல், ''உங்க பங்களாவுக்குப் பின்னாலே இரண்டு சின்ன வீடுகள் இருக்கு இல்லியா? அந்த விவரமே இந்த உயிலை எழுதறபோது தான் எனக்குத் தெரியும்!'' என்றார்.

''அதிலே ஒண்ணு இந்த ராஜாவுக்குப் போறதுதான் எனக்கு எரிச்சலா இருக்கு ஸார்.... இந்த இடத்திலே அப்பா ஒரு தப்பைப் பண்ணி விட்டார்னுகூடத் தோண்றது!'' என்றாள் அகிலா.


''இந்த உயிலை அப்பாவின் படத்தோடு 'பிரேம்' பண்ணி வைக்கணும் அகிலா.... ஒரு தப்புக்கு நாம் எரிச்சல் படக் கூடாது!'' என்றான் ரவி. பிறகு, ''நாங்கள் வருகிறோம் ஸார்!'' என்று புறப்பட்டான்.

திரும்பி வரும் போது, ''அண்ணா! என்னைப் பவர் ஹவுஸ் பக்கத்திலே இறக்கி விட்டுவிடு... அம்புஜத்தைப் பார்க்கணும்!'' என்றாள் அகிலா.

அவள் இறங்கிய பிறகு, உயிலைப் பற்றியே இதுகாறும் எண்ணியிருந்த ரவிக்கு சாம்பமூர்த்தியின் குடும்பத்தைப் பற்றிய நினைவு பிறந்தது. சாம்பமூர்த்தி ஒரு காலத்தில் அப்பாவின் காரியதரிசியாக இருந்தது ஞாபகத்தில் இருக்கிறது. அவர் திடீரென்று வராமல் போனதும் இப்போது நினைவுக்கு வருகிறது. ஆனால் அவருடைய குடும்பத்துக்கு ஒரு வீட்டையும் எழுதி மூன்று பெண்களின் கல்யாணத்துக்கும் பண உதவி செய்வானேன்?

ஒரு வேளை சாம்பமூர்த்தியின் குடும்பத்துடன் நெருங்கிப் பழகும் சந்தானத்துக்குத் தெரியுமோ? தன் தகப்பனார், ஓர் ஏழைக் குடும்பத்துக்கு அந்தக் குடும்பம் கனவிலும் நினைத்திருக்க முடியாத ஒரு சொத்தை அளிப்பதற்கு அழுத்தமான காரணம் இருக்க வேண்

பலனைப் போறுத்தவரை எல்லா தலைவலி மாத்திரைகளும் ஒன்றுதான் என்பது உங்கள் எண்ணமானல் நீங்கள் அவேதன் சாப்பிட்டுப் பார்த்திருக்க மாட்டீர்கள்



அற்புத 'எபேப்'* அடங்கிய அவேதன் துரிதமாக, தீமையற்ற, நிச்சயமான நிவாரணத்தை அளிக்கிறது

'எபேப்' அடங்கியிருப்பதனுல், அவேதன், நோவுகளையும், வலிகளையும் உடனடியாக விரட்டியடிக்கும் விசேஷ குணத்தைப் பெற்றிருக்கிறது. அவேதனில் அடங்கியுள்ள 'எபேப்' சில நிமிடங்களில் செயல் புரிகிறது—உடனடியாக நிவாரணமளிக்கிறது! அவேதன், ஒரு விதமான தீமையுமற்ற தலைவலி மாத்திரையாகத் திகழ்வதற்குக் காரணம் 'எபேப்'தான்—இதனுல் கெடுதலான விளைவுகள் எதுவும் ஏற்படுவதில்லை. துரிதமான, தீமையற்ற, நிச்சயமான நிவாரணத்திற்கு—அற்புத 'எபேப்' அடங்கிய அவேதன்!

தலைவலி, பல்வலி, முதுகுவலி, தசைநார்களில் வலி, ஜலதோஷம், ஃப்ளு முதலியவற்றிலிருந்தும், இதர சாதாரண வலிகள் மற்றும் நோவுகளிலிருந்தும், பெண்களின் அசௌகரியமான தினங்களிலும், துரித நிவாரணம் பெற,



அவேதன்®

சாப்பிடும்படி டாக்டர்கள் சொல்லுவதில் வியப்பென்ன !

சாப்பிடும் அளவு: 1—2 டேப்லெட்டுகள்

* என்-அஸெடைல்-பி-அமினேஃபெனல்

SQUIBB ஸாராபாய் கெமிகல்ஸ்

® இ. ஆர். ஸ்க்விப் & ஸன்ஸ் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க். கரம்சந்த் பிரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க லைசென்ஸ் பெற்றவர்கள்.

ShilpiSC. 46/67A Tam.

பூரணமான இருமல் கட்டுப்பாட்டுக்கு



க்ளைகோடின்

டெர்ப் வசாகா

க்ளைகோடினுடைய மருத்துவ அங்கீகாரம் பெற்ற பார்முலா, இருமலால் பாதிக்கப்பட்ட பல இடங்களிலிருந்தும் இருமலை விரட்டியடித்துவிடுகிறது. க்ளைகோடினின் செயல் திறன்: ● மூளையில்—க்ளைகோடின், தன்னியல்பாக வரும் இருமலைத் தூண்டும் இருமல் கேந்திரத்தை சீரான சம பத்தில் பத்திரமாகவும், பலனுள்ள முறையிலும் கட்டுப் படுத்துகிறது ● தொண்டையில்—க்ளைகோடின் அடைப்பை அகற்றி எரிச்சலையும் வலியையும் ஆசுவாசப்படுத்தி, தொண்டையின் மென்மையான பகுதிகளை, கிருமிகள் பாதிக்காமல் பத்திரமாகப் பாதுகாக்கிறது ● மார்பில்—க்ளைகோடின், சுவாசக் குழாய்கள் மற்றும் மார்பின் இறுகிய தசைகளைத் தளர்த்தி, கஷ்டமின்றி சுவாசிக்க உதவுகிறது ● நுரையீரல்களில்—மூச்சுத் திணறலைக்கும் சளியைக் கரைத்து, 'ஆழப் படிந்த' சளியை அகற்றி, அடைப்பை நீக்குகிறது.

எப்பொழுதும் க்ளைகோடின் கைவசம் இருக்கட்டும்.



க்ளைகோடின்—30 வருடங்களுக்கு மேலாக மிகவும் அதிகமாக விற்பனையாகும் கைகண்ட வீட்டுநிவாரணி

4 அளவுகளில் கிடைக்கிறது · அலெம்பிக் தயாரிப்பு Alembic

everest/363 i/Acw tm

டும்! ஏன் அது ரகசியமாகக்கூட இருக்கலாம். அப்படியானால் அது என்ன? யாரைக் கேட்டால் அதை அவன் அறிந்து கொள்ள முடியும்?

அவன் மணியைப் பார்த்தான். ஐந்தரை. ஆழ்வார்ப் பேட்டையைத் தாண்டி மயிலாப்பூரை அடைந்த ரவி, அரிசிக்காரன் தெருவுக்குக் காரைச் செலுத்தினான்.

இறங்கிக் கதவைத் தட்டிய போது, சந்தானம் ஆபீஸிலிருந்து இன்னும் திரும்பி வரவில்லை என்று புரிந்தது.

பின்கட்டிலிருந்து ஒற்றை நாடியாய், ஏழைமையின் சொரூபமாய் நடுத்தர வயதைக் கடந்த ஒரு ஸ்திரீ, தன் வயதுக்கும் மீறிய மூப்பு முகத்தில் பிரதிபலிக்க வருவது தெரிந்தது.

பிரம்மாண்டமான காரையும் அவனையும் பார்த்த அவள் கை நடுங்கக் கதவைத் திறந்தாள்.

''வாருங்கள்!''

குரலிலிருந்து அவள் அரண்டு போயிருக்கிறாள் என்பதை உணர்ந்த ரவி, திண்ணையில் ஏறியதும், ''நான் கோதண்டராமனின் பிள்ளை. உள்ளே வரலாமா?'' என்று கேட்டான்.

பாகீரதி, ''வந்து உட்காருங்கள். சந்தானம் இன்னும் வரவில்லை'' என்று கூடத்தை நோக்கி நகர்ந்தாள்.

சந்தானத்தைக் காட்டிலும் சிறந்த இடம் தன் சந்தேகங்கள் தீருவதற்கு என்று நினைத்த ரவி, ''நான் உங்களைத்தான் பார்க்க வந்தேன்....!'' என்றான்.

அவள் விழித்தாள்.

அவன் ஒரு நீண்ட மௌனத்துக்குப் பிறகு, எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் விழித்து விட்டு, திடீரென்று கேட்டான்.

''என் தகப்பனார் எப்போதாவது இந்த வீட்டுக்கு வந்திருக்கிறாரா?''

''ஆமாம்.... கொஞ்ச நாட்கள் முன்னாலே வந்தார்....!''

''வந்தாரா? என்ன சொன்னார்....? தயவுசெய்து என்னிடம் அதை விவரமாகச் சொல்கிறீர்களா?''

பாகீரதியின் கண்களில் நீர் தளும்பியது. புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டே, ''அது என் தலைவிதியின் கதை!'' என்று நாத்தழுதழுக்கக் கூறினாள்.

''அதைக் கேட்கத்தான் மாமி நான் இப்போ ஓடோடி வந்திருக்கிறேன். கடைசிக் காலத்திலே என் அப்பா இந்தக் குடும்பத்தைப் பற்றி நினைச்சிருக்கார்னு இன்னிக்குத்தான் தெரிஞ்சுது. உங்க வாயாலே அதைச் சொல்லி எனக்குக் கேட்கணும்.......!''

பேச்சு



பத்து மரக்கால் அளவு பேச்சு இந்தப் பூமிக்கு வந்தது. பெண்கள் ஒன்பது மரக்கால் பேச்சை எடுத்துக் கொண்டார்கள். ஆண்கள் ஒரு மரக்கால் பேச்சை எடுத்துக்கொண்டார்கள்.

—பாபிலோனியன் தால்மூத்

பேசாத வார்த்தைக்கு நீ எசமான்; பேசின வார்த்தை உனக்கு எசமான்.

— ஆங்கிலப் பழமொழி

சிந்தித்துப் பார்க்காமல் பேசுவது, குறிபார்க்காமல் சுடுவதைப் போன்றது.

— ஹாஸ்லிட்

தங்களுக்குத் தெரிந்தது பற்றிப் புருஷர்கள் பேசுகிறார்கள். ஆனால் தங்களுக்குத் திருப்தி அளித்ததைப் பற்றியே பெண்கள் பேசுகிறார்கள்.

— ரூஸோ

தகவல்: 'ரமன்'

பாகீரதி விழித்தாள்.

''பயப்படாமல் சொல்லுங்கோ!''

''எனக்கு எங்கே எப்படி ஆரம்பிக்கிறதுன்னே மலைப்பா இருக்கு....''

''எப்படி வேணும்னாலும் சொல்லுங்கோ....''

''உங்க அப்பாகிட்டே அவர், என் பெண்களோடே அப்பா, வேலையாயிருந்தார்.''

''அது தெரியும் எனக்கு!''

''மூத்த பெண் — அவ பேரு சீதா... அப்போ அவள் சின்னப் பொண்ணு...'' பாகீரதிக்குக் குரல் கம்மியது.

ரவி சோகத்துக்கு மாறிவிட்ட அவளுடைய முகத்தைப் பார்த்தவனாய் உட்கார்ந்திருந்தான்.

''அவளுக்கு நிச்சயதார்த்தத்தைப் பண்ணிவிட்டு, பத்து நாட்களிலே வரேன்னுட்டுப் போனவர்தான். அப்புறம் ஒரு ராத்திரி கான்பூரிலேயிருந்து தந்தி வந்தது... அன்னிக்குத்தான் இப்படியானேன்!'' புடவைத் தலைப்பால் பாகீரதி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவளுடைய உள்ளக் குமுறல் ரவியைத் தாக்கி, நெஞ்சைப் பிழிந்தது.

பெண்ணின் மணக்கோலத்தைப் பார்ப்பதற்குமுன் தாயாருக்கு வித வைக் கோலம்! அவ்னுடைய தந்தை விதியின் கருவி !

''கலியாணம் நடக்கலியா?'' தன் கேள்வி அநாவசியம் என்று அவனுக்கே தோன்றினாலும் அவன் தன்னையும் மீறிக் கேட்டான்.

''எப்படி நடக்கும்... ஏது பணம்...? பதினேழு வயசிலே அவள் தன்னோடு விடிவைப் பார்க்கலாம்னு விடிய விடியக் காத்திருந்தாள். அவளுக்கு விடியா மலே போயிடுத்து.... பிஞ்சு பிஞ்சாக ரெண்டு தங்கைகள். வெளியே தலை காட்டவும் முடியாத ஒரு தாயார்.... சுமக்க முடியாமல் சுமையைச் சுமந்து தங்கைகளையும் ஒரு நிலைக்குக் கொண்டு வந்தா.... அவ அன்னிக்குப் பொறுப்பு எடுத்துக்கலேன்னு, இன்னிக்கு நாங்க ஏது?''

''என் அப்பா உபகாரமே செய்ய லையா ?''

''கலியாணத்துக்கு எல்லாச் சௌக ரியங்களும், பணமும் தரேன்னு வார்த்தை கொடுத்திருக்கார்னு வடக்கே போறதுக்கு முன்னே அவர் சொல்லித் தெரிய வந்தது. ஆனால் அந்தக் தந்தி வந்தப்புறம் ஏதோ ஒரு தாயாதிக் காரன் கையிலே ஒரு தர்ப்பையைக் கொடுத்துச் செய்யணுமே! அதற்குண் டான செலவு கொஞ்சம் கிடைச்சுது.''

''அப்போ என் அப்பா வந்து பார்க்கக்கூட இல்லையா....?'' ரவிக்கு இறந்து போன தகப்பனார் தன் முன் இப்போது இல்லையே, அவருடைய கழுத்தை நெரிக்க என்று ஆத்திரம் பிறிட்டது.

வெறுப்புடன் அவள் சிரித்தாள். பிறகு, ''இப்போ கொஞ்ச நாட்கள் முன்னாலே வந்தாரே.... அப்போதான் நானே அவரை முதன் முதலாகப் பார்த்தேன்....!'' என்றாள்.

''என்ன சொன்னார்?''

''பழசைப் பத்தி நினைச்சிருக்கார் போலிருக்கு. இந்தக் குடும்பம் இப்படிச் சீரழிந்து போனதற்குத் தாம்தான் பொறுப்பாளின்னு மனச்சாட்சி உறுத்தியிருக்கு. என்கிட்டே மன்னிப்புக் கேட்டு வாங்கத்தான் வந்திருக்கிற தாகச் சொன்னார். இந்த உலகத்திலே யாருக்கும் யாரையும் மன்னிக்கிறதுக்கு அருகதையோ யோக்கியதையோ கிடை யாது. எல்லாமே பாபாத்மாக்கள்.... ஒவ்வொருத்தன் விதியையும் இன் னொருத்தன் மூலமாக ஆட்டி வைக் கிறது தெய்வம்!'' அவளுடைய வறண்ட கண்களில் இப்போது வெறுப்பு பிரதிபலிப்பதைக் கண்டான் ரவி.

''மன்னிக்க ஒருவனுக்கு யோக் கியதையோ, அருகதையோ இருக்கோ இல்லையோ, என் அப்பா செய்திருக் கிற பாபத்துக்கு மன்னிப்பே இருக்க முடியாது. ஆனால் அவர் சாகிறதுக்கு முன் செய்திருக்கிற ஒரு காரியத்தைப் பார்த்தால் கல்மனசும் இளகிவிடும்...''

ரவி மெதுவாக எழுந்தான். கடி காரம் ஆறரையைத் தாண்டி ஏழு அடிக் கப் பறந்து கொண்டிருந்தது.

பாகீரதி புரியாமல் அவனைப் பார்த் தாள். அவளுடைய மனக் குழப்பத்தை அறிந்தவனைப் போல, ரவி, ''என் அப்பா உயில் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார். உங்களுக்கு ஒரு வீடும் கொஞ்சம் பணமும் வைத்திருக்கிறார்.'' என்றான்.

பாகீரதிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. அவள் தூணில் சாய்ந்து கொண்டு, ''அன்னிக்கே அவர் என்ன பிராயச்சித்தம் வேணும்னாலும் தாம் செய்யத் தயார்னார். நான் வாயைத் திறக்காமல் கேட்டுக் கொண்டிருந் தேன்.... ஆனால் இப்படி ஒரு காரியம் செய்வார்னு நான் சொப்பனத்திலும் எதிர்பார்க்கவில்லை......'' என்றாள்.

''நான் அப்புறம் மறுபடியும் வந்து பார்க்கிறேன்.....''

''வந்ததுமே பேச ஆரம்பிச்சுட் டேன். உங்களுக்குக் காப்பி கொடுக்க ணும்னுகூடத் தோணலே....''

''எனக்கு இப்போ உங்களைப் பார்த் தப்புறம் பால் சாப்பிட்ட மாதிரி இருக்கு.... சந்தானம் வந்தால் என்னை உடனே வந்து பார்க்கச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் நானே மறுபடியும் வரும்படியாக இருக்கும்.....''

''சரி......''

அவன் கடைசியாகப் புறப்படவும் சீதா குடையுடன் அங்கே வரவும் சரியாக இருந்தது. ஏற்கனவே சந்தானம் அவளை அவனுக்கு அறிமுகம் செய்து வைத் திருந்ததால், ரவி அவளைப் பார்த்துப் புன்முறுவல் செய்து கொண்டே, ''குட் ஈவினிங்... இவ்வளவு நேரம் ஆகிறதா ஆபீஸிலிருந்து வர?'' என்று கேட்டான். அவளுடைய சருகு போன்ற உடலையும், களைத்துப் போன முகத்தை யும் பார்த்த போது, இந்தச் சோக உருவத்தைச் சிருஷ்டி பண்ணினவரே அவனுடைய தந்தைதான் என்ற எண்ணம் - சம்மட்டியால் அடிப்பது போல் எழுந்தது.

சீதா பதில் சொல்லாமல் ரேடியோ அருகே குடையை வைத்து விட்டு, ''சந்தானத்துக்காக ரொம்ப நேரம் காத்துக் கொண்டிருக்கிறீர்களா ?'' என்று கேட்டாள். **(தொடரும்)**

அபவாதம்

கோமதி ஸ்வாமிநாதன்



வாசற் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. மூன்றாவது தடவையாகத் தொடர்ந்து தட்டப்பட்ட பிறகுதான் விசாலம், ''யார்?'' என்ற குரல் கொடுத்தாள். அந்த வீட்டுக் கதவு ஊர்க்காரர்கள் யாராலேயும் தட்டப்பட்டு எத்தனையோ வருஷங்களாகின்றனவே! ஆறு வருஷங்களுக்கு மேலேயே இருக்குமே! அந்த வீட்டுக்குள் விசாலத்தையும் அவள் கணவர் ரங்கசாமியைத் தவிர அன்னியர் அடி எடுத்து வைத்தும் அத்தனை காலம் ஆகிறதே! அதனால்தான் அவளுக்கு அந்த நேரத்தில் எழுந்த கதவு தட்டல் ஓசை வியப்பையும் தயக்கத்தையும் ஒருங்கே அளித்தது.

''நான்தான்'' என்ற ரங்கசாமியின் குரல் கணீரென்று வந்தது.

''இதோ வந்து விட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே விசாலம் கையில் கோழிமுட்டை விளக்குடன் ரேழிக்கு வந்து கதவைத் திறந்தாள்.

''ஹரிக்கேன் லைட்டையும் ஏற்று! நம் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்திருக்கிறார்!'' என்று ரங்கசாமி அறிவித்தபோது அவர் குரலில் அசாதாரண பரபரப்பும் ஆர்வமும் ஒலித்தன. அவளுக்கு விளக்கை ஏற்ற அவகாசம் கொடுக்கும் வகையில் திண்ணையிலேயே உட்கார்ந்தார். கூட வந்தவரும் கையில் இருந்த துணிப் பையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அமர்ந்தார்.

ஏற்றப்பட்டுப் பத்து நாட்களுக்கு மேல் ஆகியிருந்தாலும் அந்த ஹரிக்கேன் லைட்டில் எண்ணெய் இருந்தது. இரண்டு நிமிடங்களில் விளக்கை ஏற்றிக் கூடத்தின் நடுவில் வைத்த விசாலம் கதவோரமாக வந்து நின்றாள். ''நீங்க போய்க் கால் கழுவிக் கொண்டு வாருங்கள். நான் ஒரு நிமிஷத்திலே கரி அடுப்பைப் பற்ற வைத்து ரவை உப்புமா கிண்டி விடுகிறேன்'' என்றாள் கணவனைப் பார்த்துத் தணிந்த குரலில்.

''அதற்கெல்லாம் ஒன்றும் இப்போது அவசியமில்லை. நாங்கள் இருவருமே ரயிலடிப் பெட்டிக் கடையில் வாழைப் பழங்கள் உதவியினால் பசி தீர்த்துக் கொண்டாகி விட்டது. கொஞ்சம் மோர் இருந்தால் மாத்திரம் எடுத்துக் கொடு'' என்று சொல்லிவிட்டு வந்தவர் பின்தொடர ரங்கசாமி உள்ளே வந்தார்.

விசாலம் அவசரம் அவசரமாக இரண்டு பாத்திரங்களில் மோரை எடுத்து வைத்து விட்டு, திண்ணையைப் பெருக்கி விட்டு வந்தாள். இரண்டு ஜமக்காளம் தலையணைகளையும் கொண்டு போய் வைத்தாள்.

அவள் தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு இலையைப் போட வாசல் பக்கம் வந்தபோது ரங்கசாமியும் வந்திருந்த விருந்தாளியும் உலக விவகாரங்களைப் பற்றி உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வந்திருப்பவர் ஒரு வார காலம் தங்கி யிருப்பார் என்பதை ரங்கசாமி சூசகமாக ஏற்கனவே தெரிவித்திருந்தார். அவர் 'ஒரு மாத காலம்' என்று சொல்லி யிருந்தால் விசாலம் இன்னும் அதிக மகிழ்ச்சியடைந்திருப்பாள். அன்னியர் குரலைக் கேட்போமா இவ் வீட்டில் என்று ஏங்கிப் புழுங்குவது அவளல்லவா!

ரங்கசாமி — வேதகிரி சந்திப்பு எதிர்பாராத வகையில்தான் நிகழ்ந்தது. பகல் நேரப் பாசஞ்சர் ரயில் வண்டி அது. வண்டியில் கூட்டமே இல்லை. ஒரு பக்கத்து ஓரத்தில் ரங்கசாமி உட்கார்ந்திருந்தார். மறு கோடியில் வேதகிரி உட்கார்ந்திருந்தார். ரயில் ஏதோ சிறு ஸ்டேஷனில் நின்று விட்டு மீண்டும் மெதுவாக நகரத் தொடங்கியது.

''அடா—ா!'' என்று எழுந்த வேதகிரி, தமக்குத் தாமே தொடர்ந்து, ''டிக்கெட் இந்த ஊருக்குத்தான் வாங்கினேன். ஆனால் நான் இங்கே இறங்கறதுலே பகவானுக்கு இஷ்டமில்லே போலிருக்கு! ஹூம்! வேறே ஊரிலே இறங்கினுப் போச்சு!'' என்று கூறியவாறு அமர்ந்தார். ரங்கசாமியைப் பார்த்து, ''டிக்கெட் எக்ஸாமினர் யாரும் வந்தால் ஞாபகப்படுத்துங்கோ!'' என்று சொல்லி விட்டு ஜன்னலுக்கு வெளியே கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர்.

''ஆனால், நீங்க இந்த ரயிலில் வந்து சேரலியேன்னு வீட்டிலே கவலைப்பட மாட்டார்களா?'' என்று ரங்கசாமி கேட்டு வைத்தார்.

. வேதகிரி ''வீடா! எனக்கா?'' என்று கேட்டார். சிறிது நாழிகை மௌனத்துக்குப் பிறகு பேச ஆரம்பித்தார். தெளிவாகவே பேசினர்.

''எனக்கும், ஊர், வீடு, நில புலன் எல்லாம் இருக்கின்றன. ஆனல் அவைகளுடன் என்னை இழுத்துப் பிணைப்பதற்கான சக்தி இப்போது ஏதும் இல்லை. எந்த ஊர் கொஞ்சம் மனசுக்குப் பிடிக்கிறதோ அந்த ஊரில் சில நாட்கள் தங்குவேன். கோவில், குளம் என்று பொழுதைக் கழிப்பேன். பிறகு வேறு ஊருக்குக் கிளம்புவேன். யாசகம் எடுத்து நிற்க வேண்டிய நிலையில் நல்ல வேளை ஆண்டவன் வைக்கவில்லை. மனைவி பிள்ளை பெண் என்ற பந்தம் ஏதும் இல்லை. என் உடைமைகளைத் தூரத்து உறவினர் ஒருவர் கவனித்துக் கொள்கிறர். நான் வீட்டுக்குள் நுழைந்தால் சாப்பாட்டைப் போடுவார், வருமானம் செலவுக் கணக்கைக் காண்பிப்பார். நான் கிளம்பினல் 'எங்கே போகிறீர்?' என்று கேட்க மாட்டார். இந்த மாதிரி சுதந்திர நிலை யாருக்கும் சுலபமாகக் கிடைக்காது!'' என்று பெருமையுடன் கூறி நிறுத்தினர் வேதகிரி.

''நல்லது! ஒரு சிறு வேண்டுகோள். நான் இந்தப் பக்கத்திலே ஒரு சிறு கிராமத்திலே இருக்கிறேன். மனத்துக்கு இதமான ஊர். வாய்க்கால், கோவில், தென்னம் சோலைகள் எல்லாம் மனத்துக்கு நிறைவைக் கொடுக்கும் வகையில் இருக்கின்றன. நீங்கள் எங்கள் ஊருக்கு என்னுடன் வந்து என் விருந்தினருகச் சில நாட்கள் தங்கியிருக்க வேண்டும். உங்களுக்கு ஏதோ மனச் சாந்தி வழங்குவதற்கான முயற்சியில் ஈடுபடுகிறேன் என்று நினைக்கக் கூடாது. எனக்கு மனச் சாந்தி தேவை. அதற்காகத்தான் அழைக்கிறேன். என் வேண்டுகோளைத் தட்டக் கூடாது'' என்றார் ரங்கசாமி. அவர் குரல் தழுதழுத்தது.

''ஆட்சேபணையில்லை! தாராளமாக வருகிறேன். உங்கள் வீட்டில் உள்ளவர்கள் என்னை ஒரு பாரமாக நினைக்க மாட்டார்களே?'' என்று கேட்டார் வேதகிரி.

ரங்கசாமி தம் கண்களில் இட்ட நீர்த் திரையை மறைக்க ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டே, ''எங்கள் வீட்டில் நானும் என் மனைவியும்தான். விருந்தினர்களை மதிக்கப் பழகியவள்'' என்று தெரிவித்தார்.

ரயிலிலிருந்து இறங்கியதும் வேதகிரி நேராக ஸ்டேஷன்மாஸ்டரிடம் சென்று, தம் பிரயாணத்துக்கான அதிகப்படித் தொகையைக் கட்டி ரசீது வாங்கிக் கொண்டார். அப்படியே பக்கத்துப் பெட்டிக்கடையில் இரண்டு சீப்பு வாழைப் பழங்களையும் வாங்கிக் கொண்டார். வரும் வழியில் வாய்க்கால் பாலத்தின் மேல் உட்கார்ந்து பசி தீர்த்துக் கொண்டுதான் வீட்டை அடைந்தார்கள்.

வேதகிரி வந்து நான்கு நாட்களாயின. விசாலம் நாவுக்கு ருசியாகச் சமையல் செய்து போட்டாள். ரங்கசாமியும் வேதகிரியும் அவர்களுக்குத் தெரிந்த பொது விஷயங்களை யெல்லாம் பற்றி அலசித் தள்ளினர்கள்.

ரங்கசாமி பொறுப்பான உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றவர். குழந்தை குட்டிகள் கிடையாது. இந்தக் கிராமத்தின் அமைதியான சூழ்நிலை அவருக்குப் பிடித்திருந்தது. பிராவிடண்டு பண்டு பணத்தைக் கொண்டு மலிவாகவே ஒரு பெரிய வீட்டை வாங்கிப் போட்டார். பொழுதுபோக்குக்காக பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர் வேலையையும் மேற்கொண்டார்.

ரங்கசாமியுடன் அவ்வப்போது வாய்க்காலுக்கோ கோவிலுக்கோ போய் வந்தபோதும் வேதகிரி ஒரு விஷயத்தைக் கவனித்தார். ரங்கசாமி வீட்டுக்கு அண்டை அயலார் வீட்டிலிருந்து ஒரு குழந்தைகூட வரவில்லை. தெருவில் போகும்போது யாருமே ரங்கசாமியுடன் பேச முன்வரவில்லை. சம்பிரதாயத்துக்காவது 'சௌக்கியமா?' என்று கேட்கும் நபர்களுக்குக்கூட அங்கு பஞ்ச



மாகி விட்டதா என்று நினைத்தார் வேதகிரி. கோவில் அர்ச்சகர்கூடக் கற்பூரத் தட்டை நீட்டும்போது வேண்டாவெறுப்பாக நீட்டுவது போல் தோன்றியது. தெருக் கோடியில் இருந்த ஒரே மளிகைக் கடைக்குப் போவதற்குப் பதிலாக ரங்கசாமி அவ்வப்போது வாய்க்காலைக் கடந்து போய்ப் பக்கத்துக் கிராமத்திலிருந்து சாமான்களை வாங்கி வருவதையும் கவனித்தார். கடந்த நான்கு நாட்களில் அவர் தம்முடனும் அவர் மனைவியுடனும் தவிர வேறு யாருடனும் பேசி அவர் பார்க்கவே யில்லை.

ஒரு நாள் மாலை வாய்க்கால் மணற்பரப்பில் உட்கார்ந்திருந்த போது ரங்கசாமியையே அதைப் பற்றிக் கேட்டு விட்டார்.

''நான் கேட்பதில் ஏதாவது தப்பிதம் இருந்தால் மன்னித்து விடுங்கள். இந்த ஊர்க்காரர்கள் ஏதோ கட்டுப்பாடாக உங்களுடன் விரோதம் பாராட்டுகிறார்கள் போல் எனக்குத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் என்ன என்று நான் தெரிந்து கொள்ளலாமா? ஆனால் உங்களை நான் வற்புறுத்தவில்லை'' என்று சொல்லிவிட்டு வேதகிரி நிறுத்தினார்.

ரங்கசாமி கண்களைத் துடைத்துக் கொண்டார். கணீரென்று பேச ஆரம்பித்தார். ஆவேசம் வந்தவர் போல் பேசி முடித்தார்.

முதன் முதலாக இந்தக் கிராமத்தின்மீது மோகம் கொண்டு விசாலத்துடன் இங்கு வந்து சேர்ந்த போது அவருக்கு ஜாகை வசதி செய்து கொடுத்தது தங்கம்மாள் தான். ஐம்பதே வயதாகியிருந்தாலும் வயதுக்கு மீறிய மூப்பு அவள் மேல் படிந்திருந்தது. கழுத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த நைந்து போன மஞ்சள் கயிற்றிலிருந்து அவள் சுமங்கலி என்று ஊகித்துக் கொள்ள முடிந்தது. அவளுக்குச் சொந்தமான வீட்டில் அவள் ஒன்றியாகத்தான் இருந்தாள். அப்பளம் வடகம் தயாரித்துக் கொடுத்தும், அக்கம் பக்கத்தவர்கள் வீடுகளில் சில்லறை வேலைகளில் உதவி செய்தும் அவள் வாழ்க்கையின் தேவைகளைச் சமாளித்துக் கொண்டிருந்தாள். கிராமத்தில் அவள் வீட்டைத் தேடிக் குடியிருக்க வர யாரும் இல்லை. அப்படி முதன் முதலாக வந்தவர் ரங்கசாமிதான். மாதம் மூன்று ரூபாய் வாடகை. தங்கம்மாள் தனக்கு என்று ஓர் அறையை மாத்திரம் வைத்துக் கொண்டு மீதிப் பகுதிகளை ரங்கசாமி தம்பதிகளுக்கு விட்டு விட்டாள்.

மறு வருடமே ரங்கசாமி சொந்தத்தில் ஒரு வீட்டை வாங்கிக் கொண்டு இடம் பெயர்ந்தார். ஊரில் அவருக்கு நல்ல மதிப்பு. சரளமாகப் பேசிப் பழகினார். பிராஞ்சுப் போஸ்ட் மாஸ்டர் பதவியையும் ஏற்றுக் கொண்டார். ரங்கசாமி அங்கு வந்து குடியேறியதை ஒரு பெருமையாகவே நினைத்தார்கள் அந்த ஊர்க்காரர்கள்.

இந்த நிலையில்தான், தங்கம்மாள் தன் வீட்டைப் பக்கத்து ஊர் மிராசுதாருக்கு விலை பேசிக் கொண்டிருக்கிறாள் என்ற செய்தி பரவியது. ஆனால் ரங்கசாமி அதைப் பற்றித் தங்கம்மாளிடம் ஒன்றும் விசாரிக்கவில்லை.

ஒரு நாள் பிற்பகல். ரங்கசாமி தன் வீட்டு ரேழியில் அமர்ந்து கிராம முனிசிப் கண்ணாயிரத்துடன் வாய்க்கால் கரைப் பிள்ளையார் கோயில் புனருத்தாரணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அப்போதுதான் தங்கம்மாள் அவர்களைத் தாண்டிக் கொண்டு உள்ளே போனாள். சில நிமிடங்களில் விசாலம் நிலைப்படி அருகில் ஒதுங்கி நின்று, ''சற்று உள்ளே வந்து விட்டுப் போகிறீர்களா ?.... தங்கம் உங்ககிட்டே ஏதோ சொல்லணுமாம்'' என்றாள்.

ரங்கசாமி எழுந்தவுடன் கிராமமுனிசிப் கண்ணாயிரமும் எழுந்திருந்தார். ''உட்காரும் ஐயா ! உமக்கு என்ன அவசரம்? இதோ வந்து விட்டேன்'' என்று சொல்லி விட்டு ரங்கசாமி உள்ளே போனார்.

''அண்ணா ! வீட்டு வியவகாரம் ஒரு வழியாக முடிந்து விட்டது. நான் உயிரோடு இருக்கிற வரையிலே முன்கட்டு அறையிலே தங்கியிருக்க வீட்டை வாங்கினவர் ஒப்புக் கொண்டு விட்டார். இதோ அவர் கொடுத்த மூவாயிரத்து அறுநூறு ரூபாய் இருக்கிறது. இதை உங்களிடம் ஒப்படைக்கிறேன். உங்களிடமே இருக்கட்டும். நான் வேண்டும்போது வாங்கிக் கொள்கிறேன்'' என்று கையில் இருந்த கவரை ரங்கசாமியிடம் தங்கம்மாள் நீட்டினாள்.

ரங்கசாமி அதை வாங்கிக் கொள்ளவில்லை. ''உங்ககிட்டேயே இருக்கட்டும். நாளைக்கு உங்களைப் பக்கத்து டவுனுக்கு அழைத்துக் கொண்டு போகிறேன். பண்டாபீஸிலோ, தபாலாபீஸ் சேமிப்பு பாங்கியிலோ போட்டுவிட்டு வரலாம். நான் வாங்கி வைத்துக் கொள்வது அவ்வளவு சரி என்று தோன்றவில்லை'' என்று தயங்கினார்.

''அங்கே யெல்லாம் போட்டு வைத்தால் எனக்குத் தேவையானபோது உடனடியாகக் கிடைக்காது. அதனால்தான் உங்களிடம் கொடுக்கிறேன். எனக்கு உங்களிடம்தான் நம்பிக்கை உண்டு. நீங்கள் தயங்காமல் வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றாள் தங்கம்மாள்.

''அப்படியானால் இதற்கு அத்தாட்சியாக ஒரு கடுதாசி எழுதிக் கொடுத்து விடுகிறேன். கண்ணாயிரத்திடம்கூட ஒரு சாட்சி வாங்கிக் கொள்ளலாம்'' என்றார் ரங்கசாமி.

தங்கம்மாளின் முகம் சிவந்தது. கண்கள் ஈரத்தால் பளபளத்தன. ''இந்தக் காலத்திலே யாரையும் அவசரத்துக்கு நம்பக்கூட உரிமை இல்லாமல் போயிற்று. எனக்கு ஒன்றும் ரசீது தேவையில்லை. நீங்கள் வைத்துக் கொள்ள மறுத்தால், வாய்க்காலில் தூக்கி எறிந்து விட்டுப் போகிறேன். யாருக்கு வேண்டும் இந்தப் பணம்?'' என்று தங்கம்மாள் கேட்டபோது ரங்கசாமிக்கு மயிர்க்கூச்செடுத்தது.

''விசாலம்! இந்தப் பணத்தை வாங்கி ஜாக்கிரதையாக வை !'' என்று சொல்லி விட்டு அவர் மீண்டும் கண்ணாயிரத்துடன் பேச வந்துவிட்டார். அவர் மனத்தில் இது ஒரு புது பாரமாகக் கனத்தது.

கண்ணாயிரத்திடம் தங்கம்மாள் வந்த விஷயம் பற்றிச் சொல்லி, தாம் ஏற்றுக் கொண்ட பொறுப்பையும் விவரித்த பிறகுதான் அவருக்கு ஓரளவு மனப்பாரம் குறைந்தது.

''அந்த அம்மா சுபாவமே அப்படித் தானுங்க ! இன்னிக்கு நேற்று? எத்தனை



நேரு ஹார்வர்டு சர்வகலாசாலையில் படித்துக்கொண்டிருந்தார். நேருவின் தந்தை மோதிலால் நேரு வாரம் ஒரு முறை நேருவுக்குப் பணம் அனுப்புவார் செலவுக்கு. ஒரு முறை நேரு, மேலும் பணம் தேவை என்று தந்தைக்குக் கடிதம் எழுதினார். அதைக் கண்ட மோதிலால் ஒரு வாரத்துக்குள் இரண்டாம் முறையாகப் பணம் கேட்கிறானே பிள்ளை என்ன செலவு செய்கிறானோ என்ற எண்ணத்தில் ''அனுப்பிய பணத்துக்குக் கணக்கு அனுப்பவும்'' என்று எழுதினார் பிள்ளைக்கு. நேருவும் அங்கிருந்து பதில் அனுப்பினார். அந்தப் பதிலைக் கண்டவுடன் மோதிலால் நேரு மறு வார்த்தை பேசாது மகன் கேட்டிருந்த பணத்தை அனுப்பினார். தந்தை அப்படிச் செய்ய நேரு அனுப்பிய பதில் இதுதான்: ''என் மீது உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் என்னிடம் கணக்குக் கேட்க வேண்டிய அவசியமில்லை. அப்படி என்மீது நம்பிக்கை இல்லாத பட்சத்தில் நான் அனுப்பும் கணக்கினால் உங்களுக்குப் பலனில்லை.''

வருஷங்களா எனக்குத் தெரியும்? இந்த ஊரு எல்லையைத் தாண்டி ஒரு நாளும் திரும்பிப் போக மாட்டேன்னு சொன்னதை இன்னமும் கடைப் பிடிச்சுக்கிட்டுத் தானே வாருங்க! புருஷனைப் பற்றியோ சொந்தக்காரங்களைப்பற்றியோ அந்த அம்மா ஒரு வார்த்தை யார்கிட்டேயும் சொன்னது கிடையாது'' என்ற விவரங்களை சொல்லிவிட்டுக் கண்ணாயிரம் புறப்பட்டார்.

தங்கம்மா ரூபாய் ஒப்படைத்து இரண்டுமூன்று மாதங்களுக்கு மேலே ஆகிவிட்டிருந்தது. பணம் பத்திரமாக ரங்கசாமி வீட்டுப் பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் இரவு பத்து மணிக்கு மேலாகவே இருக்கும். படுக்கையில் படுத்த ரங்கசாமி கண்ணயர்ந்து விட்டார். வாசற் கதவை யாரோ படபடவென்று உடைக்கும் சத்தம் அவர் தூக்கத்தைக் கலைத்து விட்டது.

''தூங்கிப் போய்விட்டீர்களா அண்ணா? தொந்தரவுதான். கொஞ்சம் உள்ளே வரட்டுமா? வீடு விற்றுக் கொடுத்து வைத்த பணம் வேணும். அவசரம்!'' என்று சொல்லிக் கொண்டே ரங்கசாமியைக் கடந்து வீட்டுக்குள்ளே போனாள் தங்கம்மாள். ஒரு வாலிபனும் அவள் பின்னாலேயே உள்ளே வந்தான்.

''பணம் அப்படியே பத்திரமாக இருக்கிறது. காலையிலேயே வாங்கிக் கொள்ளக் கூடாதா? இந்தப் பையன் யாரு தெரியலியே!'' என்று தயங்கினார் ரங்கசாமி.

அந்த வாலிபனின் தோற்றம் ரங்கசாமிக்கு அவ்வளவு திருப்திகரமாக இல்லை. கன்னத்தில் இருந்த நீண்ட காயத் தழும்பு அவனை முரட்டு நபர் போல் காண்பித்தது. படிப்பு, மரியாதை, அடக்கம் இவைகளுக்கான அறிகுறிகளே இல்லை.

''இவன் என் பிள்ளை பாலு!'' என்று தங்கம்மாள் சொன்னபோது ரங்கசாமி திடுக்கிட்டார். அவருக்குப் பேச வார்த்தை அகப்படவில்லை.

''இதோ, அவன் கன்னத்திலே ஒரு தழும்பு இருக்கே! அதுதான் என் வாழ்க்கையைப் பாழாக்குவதற்குக் காரணமாக இருந்தது. குழந்தையின் முதல் பிறந்த நாளன்று கவனப் பிசகாக அவனைக் கைநழுவிக் கீழே போட்டு விட்டேன். தரையில் இருந்த வெற்றிலைத் தட்டின் விளிம்பு கன்னத்தைக் கிழித்து விட்டது. என் மாமியாரும், கணவரும், குழந்தைக்கு மருந்து போடறதுக்கு முன்னாலேயே என் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விட்டார்கள். ரோஷம் தாங்காமல் ஊரை விட்டே கிளம்பி விட்டேன். அன்றைக்குப் பார்த்த என் பிள்ளையை இருபத்தெட்டு வருஷங்கள் கழித்து இன்னிக்குத்தான் பார்த்தேன். எப்படியோ நான் உயிரோடு இருக்கிறதைத் தெரிந்து கொண்டு வந்து சேர்ந்திருக்கிறான். அவனுக்குப் பெரிய உத்தியோகம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதாம். அதற்கு டிபாசிட் பணம் கட்ட வேண்டும். இவனுக்கு உதவாத பணம் வேறு யாருக்கு வேணும்? தரேன்னுட்டேன்.''

''ரொம்ப சந்தோஷம், விசாலம்! இவர்களுக்கு ஏதாவது முறுக்கு தேங்குழல் எடுத்துக் கொடு.... ஏனப்பா பாலு....! நீ காலையிலேதானே ஊருக்குப் போவாய்? அப்போ வந்து பணத்தை எடுத்துக்கொண்டு போயேன். ராத்திரி வேளையிலே அது இடம் மாற வேண்டாமே!'' என்றார் ரங்கசாமி.

''இல்லே, சார்! நான் ராத்திரியே கிளம்பவேணும். பன்னிரண்டரைப் பாஸஞ்சரிலே போயாகணும்'' என்றான் பாலு. அவன் தோற்றத்தில்தான் பண்பு இல்லை என்றால் குரலில்கூட அது இல்லையே என்று நினைத்தார் ரங்கசாமி.

''சரி.....ஒரு ஐந்து நிமிஷங்கள் உட்காருங்கோ! நான் கோவில் அர்ச்சகர் இருக்காரா என்று பார்த்து விட்டு வருகிறேன்'' என்றார் ரங்கசாமி.

''ஏன் அண்ணா? பணத்தை அவர்கிட்டே கொடுத்து வைத்திருக்கிறீர்களா?'' என்று கேட்டாள் தங்கம்மாள் பதற்றத்துடன்.

''இல்லே! இல்லே! பணம் இங்கேதான் இருக்கிறது. ஆனால் ஒரு பொது மனிதரைச் சாட்சி வைத்துக் கொண்டு திருப்பிக் கொடுப்பது உசிதம் என்று படுகிறது'' என்று ரங்கசாமி மெதுவாகவே பேசினார்.

''அதுதான் நான் இருக்கிறேனே?.... போதாதா?'' என்றான் பாலு.

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது

வலிதான் எங்கள் பிரச்னை: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கூடத்தில் வலியைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்துவரும் விஞ்ஞானிகள் வலியை வேகமாக வெளியேற்றுவதற்கான புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளனர்—அதுதான் புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'.

மைக்ரோஃபைன்ட் என்றால் என்ன? புதியதொரு விசேஷமான செய்முறையின் மூலம், 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள வலிநிவாரணப் பொருளை மேலும் 30 மடங்கு நுணுக்கமாக்கியிருப்பதைத்தான் மைக்ரோஃபைன்ட் என்கிறோம். இப்பொழுது ஒவ்வொரு மாத்திரையிலும் இந்த வலிநிவாரணப் பொருளின் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக் கூறுகள் அடங்கியிருக்கின்றன. இதன் விளைவாக, முன்பைவிட இருமடங்கிற்கும் அதிகமான வலிநிவாரணச் சக்தி, மும்மடங்கு வேகமாக இயங்கி வலியைத் துரிதமாக வெளியேற்றிவிடுகிறது.

வேகமாகச் செயல்புரிகிறது—நீடித்த பயனைத் தருகிறது: புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள சுறுசுறுப்பாக இயங்கும் வலிநிவாரணப் பொருள், மிகவும் சுலபமாகவும், துரிதமாகவும் இரண்டறக் கலந்து உங்கள் உடலில் 5 முதல் 7 மணி நேரம்வரை தங்கியிருக்கிறது. இதனால் தான் மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' வலியை அதி வேகமாக வெளியேற்றி, நீண்ட நேரம் பயனளிக்கிறது.

உட்கொள்ளச் சுலபமானது: புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'வை வெறும் மாத்திரையாகவோ, தண்ணீரில் கலந்தோ, ஒரு டம்ப்ளர் தண்ணீருடனோ அல்லது சூடான பானத்துடனோ—எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம்.

கீழ்க்கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: சோர்வு • தலைவலி • உடல்வலி • பல்வலி • மூட்டுவலி • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • ஃப்ளு • டெங்கு • தொண்டை அழற்சி.

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி.

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்





புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலிநிவாரணியாகும்.





புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்துவிடுகிறது

நிகோலஸ் தயாரிப்பு

"நீ அந்த அம்மாவின் பிள்ளை என்று எனக்குச் சற்று முன்தானே தெரியும்! நான் ஒரு பொது மனிதனை வைத்துக் கொண்டு கொடுப்பதைத்தான் விரும்புகிறேன்!" ரங்கசாமி மசியவில்லை.

"ஏன் அண்ணே?.... நான் ஒரு சாட்சியை வைத்துக் கொண்டும் உங்களிடம் பணம் கொடுக்க வில்லையே! உங்களை நம்பித்தானே கொடுத்தேன்!" தங்கம்மாள் குரலில் இத்தனை நாள் கேட்டிராத கடுகடுப்பும் ஆத்திரமும் இருந்தன.

"என்ன சார்! பணத்தைச் செலவழித்து விட்டீர்களா?" என்றான் பாலு கிண்டலாக.

ரங்கசாமி உணர்ச்சியைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார். உள்ளே போய்ப் பணம் வைத்திருந்த கவரை எடுத்து வந்து தங்கம்மாவின் முன் வைத்தார். "எடுத்துக் கொள்ளுங்கள்! நீங்கள் ஒப்படைத்த அதே நோட்டுக்கள்தாம். ஒரே ஒரு சின்ன விஷயம்! இருபத்து எட்டு வருஷங்களாக நீங்க எங்கே இருக்கிறீர்கள் என்றுகூடக் கவலைப்படாத உங்கள் பையனுக்கு, எப்படித் திடீர் என்று உங்களிடம் வீடு விற்ற பணம் இருக்கிறது என்று தெரிய வந்தது? சொல்ல முடியுமா?" என்றார் நிதானமாக.

"என்ன? இது எங்க குடும்ப விவகாரம். அதைப் பற்றி நான் அன்னியரிடம் பேசத் தயாரில்லை. எனக்கு அப்படிப்பேசிப் பழக்கமுமில்லை. நான் வருகிறேன்! வாடா பாலு!" என்று ரூபாயுடன் கிளம்பினாள் தங்கம்மாள்.

ரங்கசாமி சில நிமிஷங்கள் அவர்கள் போன திசையைப் பார்த்துக் கொண்டே நின்றார். பிறகு, "விசாலம்! கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொள்! நான் கண்ணாயிரம் வீடு வரை போய் அவரை எழுப்பித் தகவல் சொல்லி விட்டு வருகிறேன். இந்தத் தங்கம்மாள் பணம் கொடுத்தபோது அவன் இருந்தான். இந்த அகால வேளையில் அவள் திருப்பி வாங்கிண்டு போனதும் அவனுக்குத் தெரியறது நல்லது" என்று சொல்லி விட்டுத் தெருவில் இறங்கினார்.

கண்ணாயிரம் வீடு பூட்டப்பட்டிருந்தது. திருநாள் பார்க்கக் குடும்பத்துடன் மதுரைக்குப் போய் விட்டானாம். எப்போது திரும்புவான் என்று தெரியாதாம்.

பத்து நாட்கள் ஓடி விட்டன. இடையே ரங்கசாமியோ விசாலமோ தங்கம்மாவை நேரில் பார்க்கவில்லை.

அன்று காலை பத்து மணி சுமாருக்கு ரங்கசாமி திண்ணையில் அமர்ந்து பத்திரிகை பார்த்துக் கொண்டிருக்கிற போதுதான் மாடி வீட்டுக் கோபாலன் பரக்கப் பரக்க ஓடிவந்தான். "மாமா! தங்கம் மாமி வாய்க்காலிலிருந்து வர வழியிலே மயக்கம் போட்டு விழுந்து விட்டாளாம். செத்துப் போயிட்டான்னுகூடச் சொல்றா. அப்பாகூடப் போயிருக்கார்" என்று அறிவிப்புக் கொடுத்து விட்டு அவனும் வாய்க்கால் கரையைப் பார்க்க ஓடினான்.

தங்கம்மாள் மயக்கத்திலிருந்து தெளியாமலே இந்த உலக வாழ்க்கையிலிருந்து விடுதலை அடைந்து விட்டாள். அந்திமச் செலவுகளுக்குத் தர்மம் வசூல் பண்ணித்தான் ஆக வேண்டும் என்ற நிலை.

ஜவாஹர் சிறுவராயிருந்தபோது தன் வயதொத்த நண்பர்களுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது பந்து ஒரு மரத்தின் அடியில் இருந்த பொந்துக்குள் விழுந்து விட்டது. ஜவாஹரின் நண்பர்கள் கைகளை விட்டும், குச்சிகளை விட்டும் அந்தப் பந்தை எடுக்க முயன்றனர். ஆனால் முடியவில்லை. சிறிது நேரம் சிந்தித்த ஜவாஹர் பக்கெட்டில் தண்ணீர் கொண்டு வந்து அந்தப் பொந்துக்குள் ஊற்றினார். பந்தும் மிதந்து வந்து பொந்தின் வாயளவில் நின்றது. பிறகு பந்தை எடுத்து மீண்டும் விளையாடலாயினர்.



அப்போதுதான் திடுதிப்பென்று கண்ணாயிரம் வந்து சேர்ந்தான். அவன் முதல் நாள் இரவுதான் ஊர் திரும்பியிருந்தான்.

"என்னத்துக்கு இந்தத் தர்ம வியவகாரமெல்லாம்? அந்த அம்மாதான் கணையாக மூவாயிரத்து அறுநூறு ரூபாயை ரங்கசாமி ஐயாகிட்டே கொடுத்து வைச்சிருக்கிறாங்களே! அதிலேயிருந்து கொஞ்சத்தை எடுத்துச் செலவழிக்க வேண்டியதுதான்" என்று ஆரம்பித்தான். அவன் அருகிலிருந்தவர்களெல்லாம் ரங்கசாமியின் முகத்தைப் பார்த்தார்கள்.

"கொடுத்து வைத்தது உண்மைதான்! ஆனால் பத்து நாட்களுக்கு முன்பாக, அவள் பிள்ளைக்கு வேண்டுமென்று அவனையே அழைத்துக்கொண்டு வந்து வாங்கிக்கொண்டு போய் விட்டாளே!" என்றார் ரங்கசாமி பதற்றத்துடன்.

கண்ணாயிரம் சூழ்நிலையை மறந்து மடமடவென்று சிரித்தான். "புதுக் கதையாக இருக்கே! அந்த அம்மாவுக்குப் பிள்ளை இருந்தானா.....?" என்று கேட்ட போது பக்கத்திலிருந்த அனைவருமே ரங்கசாமியை அவநம்பிக்கையோடு பார்த்தார்கள்.

தங்கம்மாள் மறைந்து விட்டாள். ஆனால் ரங்கசாமி மீது படிந்த கறை அப்படியே அழுத்தமாக நின்று விட்டது.

கிராமத்துப் பெரியவர்கள் பஞ்சாயத்துக் கூடி, ரங்கசாமி அந்தப் பணத்தை உடனே பொதுவான ஒரு நபரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு கட்டினார்கள்.

"என் வீட்டை விற்று என்னால் அந்தப் பணத்தை உங்களிடம் கொடுக்க முடியும். ஆனால் அப்படிச் செய்தால் நான் ஏதோ தவறு செய்தவன் என்பதை நிரூபிப்பது போலாகும். நான் என் மனதாரத் தவறு செய்யவில்லை. எப்படியாவது தங்கம்மாவின் பையன் பாலுவைக் கண்டுபிடித்து உங்கள் முன் கொண்டு வந்து நிறுத்தி என் மேல் சுமத்தப்பட்ட அபாண்டப் பழியைத் துடைத்துக் கொள்வேன்" என்று சொல்லி விட்டார் ரங்கசாமி.

அந்த நாளிலிருந்து அந்தக் கிராமமே அவரைப் பகிஷ்கரிக்கத் தொடங்கியது.

உடனடியாக ரங்கசாமி பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர் பதவியை விட்டு விட்டார். அவ்வப்போது அவகாசம் கிடைத்தபோதெல்லாம் சுற்று வட்டார ஊர்களில் பாலு தட்டுப்படுவானா என்று தேடினார். அவன் முகத் தழும்பைக் கொண்டு அவனைக் கண்டுபிடிப்பது சுலபம். ஆனால் அந்தச் சுலபமான காரியம் கடந்த ஆறு வருடங்களாக நிறைவேறவேயில்லை.

ரங்கசாமியும் வேதகிரியும் அன்று திரும்பி வந்து சாப்பிட உட்கார்ந்தபோது இரவு மணி ஒன்பதாகி விட்டிருந்தது. வேதகிரி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். ரங்கசாமி சொன்ன விஷயங்கள் அவர் மனத்தைக் குடைந்து கொண்டிருந்தன. தளராத நம்பிக்கையுடன் ரங்கசாமி இந்த ஊர்க்காரர்களின் வெறுப்பையும் புறக்கணிப்பையும், சமாளித்து நிற்பதைக் கண்டு அவர் பெரும் வியப்படைந்தார்.

சாப்பாடு முடிந்து திண்ணைக்கு வந்ததும் வேதகிரி ரங்கசாமியைப் பார்த்து, ''நீங்கள் தூங்குங்கள். நான் என் காரியஸ்தருக்குக் கடிதம் எழுத வேண்டும். பல நாட்களாகி விட்டன. எழுதி முடித்து விட்டுப் படுத்துக் கொள்கிறேன். ஹரிக்கன் லேட்டை மாத்திரம் இப்படித் திண்ணைக்குக் கொண்டு வந்து வைத்து விடுங்கள்'' என்றார்.

ரங்கசாமி சீக்கிரமே தூங்கி விட்டார். அப்புறம் வெகு நேரம் ஏதோ எழுதிக்கொண்டிருந்த வேதகிரியும் விளக்கை அணைத்து விட்டுப் படுத்தார். ஆனால் அவர் இன்னும் தூங்கவில்லை.

வழக்கம் போல் காலையில் இருள் பிரியும் நேரத்தில் எழுந்த ரங்கசாமி அருகில் வேதகிரி படுத்திருக்காததைக் கண்டு திடுக்கிட்டார். ஒரு வேளை சீக்கிரமே எழுந்திருந்து வாய்க்கால் கரைப் பக்கம் போயிருப்பாரோ என்ற சந்தேகமும் தோன்றியது. தலையணை ஜமுக்காளத்தை எடுத்து உள்ளே வைக்கச் சுருட்டியபோதுதான் வேதகிரியின் தலையணைக்கு அடியில் அந்தக் கடிதத்தைப் பார்த்தார். மேலே 'திரு ரங்கசாமியின் பார்வைக்கு' என்று பெரிதாக எழுதப்பட்டிருந்தது.

ஜமுக்காளத்தை மடிப்பதையும் மறந்து போய்க் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

மதிப்புக்குரிய நண்பருக்கு,

நேற்று மாலை நீங்கள் சொன்ன விவரங்களைக் கேட்ட பிறகு என் மன நிலை குழம்பிப் போய் விட்டது. காரணம் தங்கம்மாளின் பூர்வோத்திரங்களைப் பற்றி எனக்கு ஓரளவு தெரியும். ஆனால் அவள் இந்த ஊரில்தான் வாழ்ந்து வந்தாள் என்று தெரியாது.

பாலு அவள் பிள்ளைதான். கன்னத் தழும்பு அடையாளமும் உண்மையானதுதான்.

இருபத்தெட்டு வருஷங்களுக்குமுன் அவளை வீட்டை விட்டு வெளியே தள்ள அவள் மாமியாருக்கும் அவள் கணவனுக்கும் வெவ்வேறு நோக்கங்கள் இருந்தன. ஏழை மருமகளுக்குக் குழந்தை பிறந்த பிறகு, தன் மகன் பேரிலும் சொத்துக்கள் பேரிலும் ஆதிக்கம் வந்து விடுமோ என்ற பொறாமை உணர்ச்சியால் மாமியார்க்காரி குழந்தை கீழே விழுந்ததைச் சாக்கிட்டு அவளைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளினாள். கணவனோ, காலம் கடந்து, நாற்பது வயதுக் காலத்தில் தன் இரண்டாந் தார மனைவிக்குக் குழந்தை பிறந்ததே என்று மகிழாமல், சமீப காலத்தில் கிட்டிய ஓர் அபிமான ஸ்திரீயின் மோகத்தில் ஆழ்ந்து, மனைவி ஒழிந்தால் நலம் என்ற நோக்கத்தில் பிடித்து வெளியே தள்ளினான். குழந்தை மீது ஏற்பட்ட பாசத்தினாலல்ல! அந்தக் குழந்தை பெரியவனானபோது பள்ளிப் பருவக் கட்டத்திலேயே போக்கிரி என்று பெயர் எடுத்து விட்டிருந்த நகைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடி விட்டான்.


எட்டு வருடங்களுக்கு முன்னால் அவர் பிள்ளை பாலு ஒரு கேடியாக, பல தடவைகள் ஜெயிலுக்குப் போய் விட்டுத் திரும்பிய அனுபவத்துடன் வந்து நின்று உறவு கொண்டாட முயற்சி செய்தான். அப்பா அதற்கு இடம் கொடுக்கவில்லை. அவனை வீட்டு வாசற்படி மிதிக்கக் கூடாது என்றும் சொன்னார். அதற்குப் பிரதி உபகாரமாக அவன் அன்றிரவு அவர் வீட்டிலேயே புகுந்து பெரிய திருட்டை நடத்தி விட்டுப் போனான். அப்பா பெருமூச்சுடன் சும்மா இருந்தார்.

தங்கம்மாவைச் சந்தித்து அவளிடம் ஏதோ நம்பக்கூடிய பொய்யைச் சொல்லிப் பணத்தை வாங்கிக் கொண்டு இரவோடு இரவாக ஓடியவன் சீக்கிரமே தன் தந்தையைப் பார்த்து, அவரைக் கேலி செய்யும் வகையில் தான் தாயாரிடம் பணம் வாங்கி வந்து மூன்றே நாட்களில் சீட்டாடித் தொலைத்ததைப் பெருமையுடன் சொன்னான். ஆனால் அவன் தந்தை அதை நம்பவேயில்லை. அதனால் அவன் தாயார் எங்கிருக்கிறாள் என்று கேட்கவும் இல்லை. 'மறுபடியும் வீட்டு வாசற்படி ஏறினால் உறவை மறந்து போலீசுக்குப் போவேன்' என்று சொல்லி அவனை மிரட்டினார்; விரட்டினார்.

பாலு இப்போது ஒரு கொலைக் குற்றத்துக்காக வேலூர் ஜெயிலில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். கண்ணுவிரத்தையும், ஊர்ப் பெரிய மனிதர் ஒருவரையும் அழைத்துக் கொண்டு நீங்கள் வேலூருக்குப் போங்கள். ஜெயில் அதிகாரிகள் உதவி கொண்டு, அவர்கள் முன்னிலையில் பாலு அன்றிரவு தங்கம்மாவுக்குத் துணையாக வந்து பணம் வாங்கிப் போனதைப் பற்றிக் கேளுங்கள். உங்கள் மேல் சுமத்தப்பட்ட அபவாதம் மறைய இதுதான் வழி.

எனக்கு எப்படி இத்தனை விஷயங்களும் தெரியும் என்று கேட்கிறீர்களா? நியாயமான கேள்வி. பாலுவின் தகப்பனார் நான்தான்! அன்று தங்கம்மாவை வீட்டை விட்டுக் கழுத்தில் கைவைத்து வெளியே, தள்ளிய அவள் கணவன் நான்தான்!—**வேதகிரி**

''சீக்கிரம் போங்கோ! அந்தப் படுபாவி கண்ணுவிரத்தின்கிட்டேயே இந்தக் கடுதாசியைக் காண்பியுங்கோ! நமக்கு விமோசனம் இந்த வேதகிரி மூலமா வந்திருக்கு! எழுந்திருங்கோ!'' என்று விரைவுபடுத்தினாள் விசாலம். கடிதத்தை எழுதி வைத்து விட்டு இரவு பாசஞ்சரிலேயே ஊரை விட்டுக் கிளம்பி விட்ட புண்ணியவானை நன்றியுடன் நினைத்தார் ரங்கசாமி.



வீட்டில்
ஆபீஸில்
ஆலைகளில்

தாங்கள் வெளிச்சத்தை பார்க்க முடியுமா? இல்லை. ஒளிபட்ட பொருட்களைத்தான் பார்க்க முடியும். நல்ல ஒளிதரும் திட்டத்தினால் தங்கள் வீடு அழகுடன் விளங்கும். ஆபீஸின் வேலைத்திறன் ஓங்கும்; ஆலைகளின் உற்பத்தி பெருகும். நல்ல ஒளித்திட்டத்திற்கு பஜாஜ் பல்புகள், ட்யூபுகள் மற்றும் இதர உபகரணங்களை ஒப்பற்றவை.

ஒளி அமைப்பின் எல்லா தேவைகளுக்கும் பஜாஜையே நம்புங்கள்.

பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

45-47, வீர் நாரிமன் ரோடு, பம்பாய்-1 ▢ இந்தியா முழுவதிலும் கிளைகளுண்டு

heros'-BE-7 TAM

யாரோ இவர் யாரோ?



சோ

மகாதேவனின் திட்டங்களை அறியாத ரவி அடுத்த நாள் வழக்கம்போல் சின்னதுரை வீட்டுக்குச் சென்றான். வாசலிலேயே நின்று கொண்டிருந்த சித்ரா அவனைப் பார்த்து வழிமறித்து நின்றாள்.

''வெட்கம் மானம் இருந்தால் இந்த வீட்டுப் பக்கம் வரமாட்டீங்கன்னு நான் சொல்லலே?'' என்று சித்ரா அவனுக்குத் தன்னுடைய வார்த்தைகளை நினைவுறுத்தினாள்.

''வெட்கம் மானம் இல்லாததனாலேதான் இப்ப வந்திருக்கேன்'' என்று தன்னடக்கத்தோடு பதில் கூறினான் ரவி.

''என்ன விஷயம்?''

''நான் உங்கப்பாவைப் பார்க்க வந்திருக்கேன்.''

''அவரை நீங்க பார்க்க வேண்டியதில்லே.''

''அதை நீங்க சொல்ல வேண்டியதில்லே.''

''ஓஹோ!''

''ஆமாம்.''

அவனுடைய திமிர் சித்ராவின் வைராக்கியத்தைச் சிறிது தளர்த்தி விட்டது. ''நேற்று காலக்ஷேபத்திலே என்னை அவமானப்படுத்தினது போதாதா? இன்னும் ஏன் இங்கே வந்தீங்க....?''

''அப்படி என்ன அவமானகரமான விஷயம் நடந்திரிச்சு?''

''எங்கப்பாவை ஏன் கூட்டிக்கிட்டு வந்தீங்க? அவர் அந்தமாதிரி கத்தினது எவ்வளவு அசிங்கமாப் போயிரிச்சு?''

''அதுலே என்ன அசிங்கம்? அவருக்குத் திடீர்னு ஆவேசம் வந்திரிச்சு. பக்திப் பெருக்குத் தாங்க முடியாமல் சாமி வந்து கூச்சல் போட்டுட்டாரு!''

''ஆவேசம் வந்தால் 'கம் ஆன், கம் ஆன்'னுதான் கத்துவாங்களா?''

''அது அவங்கவங்க மனோபாவத்தைப் பொறுத்தது. ஒருத்தொருத்தருக்கு ஒவ்வொரு விஷயத்திலே வெறி இருக்கும். ஆவேசம் வர்றபோது அதைப் பத்தித்தான் கத்துவாங்க. நீங்களே யோசிச்சுப் பாருங்க. சேத் கோவிந்த தாஸுக்கு ஆவேசம் வந்தால் 'ஹிந்தி, 'ஹிந்தி'ன்னு கத்துவாரு. உங்கப் பாவுக்கு ஆவேசம் வந்தது. 'கம் ஆன், கம் ஆன்'னு கத்தினாரு. உங்களுக்கு ஆவேசம் வந்தால் 'ரவி ரவி'ன்னு கத்துவீங்க.''

இதைச் சித்ரா எதிர்பார்க்கவில்லை. ரவியின் துணிச்சலைக் கண்டு வியந்தாள் அவள். ஆனால் அந்த வியப்பு உடனே கோபமாக உருவெடுத்தது. தான் இவ்வளவு பேசியும், ஒன்றுமே நடக்காதது போல் சர்வ சாதாரணமாகப் பேசியதைக் கண்டு அவள் மனம் கொதித்தது. தன்னை அவன் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. தன் தகப்பனாரைக் கைக்குள் போட்டுக் கொண்டால், தன்னையும் அடைவது சுலபம் என்று எண்ணியிருக்கிறான். அந்த எண்ணத்தைத் தவிடுபொடியாக்கிவிட வேண்டும் என்று தீர்மானித்தாள்.

''மிஸ்டர் ரவி! அளவுக்கு மீறிப் போகாதீங்க. உங்க பேரிலே எனக்கு எந்தவிதமான அக்கறையும் கிடையாது. யூ ப்ளீஸ் கெட் அவுட்!''

சித்ரா மிஞ்சுவதைப் பார்த்த ரவி கெஞ்சினான். ''சித்ரா, நீங்க என்னை ரொம்ப 'மிஸ்டேக்' பண்ணிக்கிட்டீங்க. தயவு செய்து நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க.''

அவன் கெஞ்சுவதைப் பார்த்த சித்ரா மிஞ்சினாள்.

''நான் எதையும் கேக்கப் போறதில்லே. நீங்க தயவு செய்து போய் விடுங்கள்!''

சித்ராவை எப்படியாவது அன்று மாலை தன்னுடன் வெளியே புறப்படச் செய்தால் மகாதேவன் வழி

மறித்து மிரட்டுவான். தான் பெரிய வீரன் போல் அவனைக் காப்பாற்றி நல்ல பெயர் சம்பாதித்து விடலாம் என்று தீர்மானித்திருந்த ரவி, இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. ''சித்ரா! உங்களுக்காக என்ன வேணுமின்னு லும் செய்ய நான் தயாராயிருக்கேன். உங்களுக்காக என் உயிரையே தியாகம் செய்வேன்.''

சித்ரா பேசவில்லை. ரவி பேசினான். '' மிஸ் சித்ரா! உங்ககிட்டே நான் ரொம்ப முக்கியமா ஒரு விஷயத்தைப் பத்திப் பேசணும். உங்கப்பாவைப் பத்தின விஷயம். இத்தனை நாட்கள் நான் அதை மறைச்சேன். இன்னிக்கு உங்களிடம் சொல்லிடறதுன்னு தீர்மானம் செய்துட்டேன்.''

''என்ன அது?''

'' இங்கே சொல்லக் கூடிய விஷயம் இல்லை.''

''இத்தனை நாள் சொல்லாம இன்னிக்குச் சொல்ல வேண்டிய அவசியம்?''

''இனிமேல் என்னை இங்கே வரக் கூடாதுன்னு சொல்லிட்டீங்க. உங்களுக்கு இஷ்டமில்லாத காரியத்தைச் செய்ய எனக்குப்பிடிக்கவில்லை. அதனாலே இனிமே இந்த விஷயத்தைச் சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்குமோ கிடைக்காதோ! அதான் இன்னிக்கே சொல்லிடறதுன்னு தீர்மானிச்சுட்டேன்.''

இதை ரவி உண்மையாகவே கூறினான்.

சித்ராவுக்கும் ஓரளவு அப்படியே தான் தோன்றியது. இருந்தாலும் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள ரவியிடமே கேட்டாள்: ''இதாவது நிஜமா, இல்லை.....''

''சத்தியம்!'' என்றான் ரவி.

''அந்த விஷயத்தைச் சொல்லி விட்டு ஊருக்குத் திரும்பிப் போயிடறதா இருக்கீங்களா? உங்க அப்பாவுக்குக் கொடுத்த வாக்கு என்ன ஆறது?'' என்று சித்ரா சற்று ஏளனமாகவே கேட்டாள்.

''நான் எங்கப்பாவுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேத்தாம ஊர் திரும்ப மாட்டேன். உங்க பேச்சுக்குக் கட்டுப் பட்டு இந்த வீட்டுப் பக்கம் வராமலே, உங்களைக் கல்யாணம் செய்து கொள்ள முயற்சி செய்வேன்.''

''அது நடக்காது!''

''பார்த்துடலாம்.''

''சரி! மிஸ்டர் ரவி! அது என்ன விஷயம்?''

ரவிக்குத் திடீர் என்று ஒரு யோசனை பிறந்தது.

''இன்றைக்குச் சாயந்திரம் சுமார் எட்டு மணிக்கு எலியட்ஸ் பீச்சுப் பக்கம் வந்தால் சொல்றேன்.''

''நான் அங்கே எல்லாம் வரமாட்டேன்.''

''அப்போ அந்த முக்கியமான விஷயத்தை உங்களாலே தெரிஞ்சுக்க முடி



யாது. அப்புறம் என் பேரிலே வருத்தப்படாதிங்க.''

அவன் பிடிவாதத்தைப் பற்றி நன்கு உணர்ந்திருந்த சித்ரா சற்று யோசித்து விட்டு, ''ஆல் ரைட்! நீங்க சொன்ன மாதிரியே எட்டு மணிக்கு எலியட்ஸ் பீச்சுக்கு வர்றேன். நீங்க இப்ப போகலாம்'' என்று கூறி உள்ளே சென்றாள்.

ரவியின் உள்ளத்தில் சில எண்ணங்கள் தோன்றி மறைந்தன. ''அந்த விஷயத்தைச் சொல்லிவிட வேண்டியதுதான். எத்தனை நாட்கள் தான் மறைப்பது? நானும் இங்கு முன் போல் வர முடியாமல் போய்விட்டால், சித்ராவுக்கு அது தெரிந்திருப்பதுதான் நல்லது. அதே சமயத்தில் என் திட்டப்படி அவள் எலியட்ஸ் பீச்சுக்கு வருவதற்கும் ஏற்பாடு செய்தாகி விட்டது. மகாதேவா, உன்னை உதைத்து நான் நல்ல பெயர் எடுக்கப் போகிறேன். செருப்பால் அடித்த கண்ணப்ப நாயனாருக்கு அந்த மகாதேவன் அருளினான். உன்னை உதைக்கப் போகும் எனக்கு நீ அருளப் போகிறாய்! மகாதேவனின் மகிமையே மகிமை!'' மனத் திருப்தியோடு ரவி சின்னதுரையின் வீட்டை விட்டு வெளியேறினான்.

அன்று மாலை சின்னதுரையிடம் ஏதோ ஒரு சிநேகிதி வீட்டுக்குப் போவதாகச் சொல்லி விட்டுச் சித்ரா எலியட்ஸ் பீச்சுக்குப் புறப்பட்டாள். மகாதேவன், ரவியோடு வரும் பெண்ணை மிரட்டி, உதவிக்கு வரும் ரவியை அடித்து நொறுக்கி நகைகளை 'அபேஸ்' செய்வது என்று தான் செய்திருந்த முடிவை நிறைவேற்றிக் கொள்ள எலியட்ஸ் பீச்சுக்கு இரண்டு சகபாடிகளோடு புறப்பட்டான். ரவி தன் திட்டப்படி மகாதேவன் சித்ராவை வழிமறிக்கும் போது, அவனை மிரட்டி ஓடச் செய்து, அடித்து விரட்டிச் சித்ராவிடம் நல்ல பெயர் சம்பாதிக்க எலியட்ஸ் பீச்சுக்குக் கிளம்பினான்.

மாலை சுமார் ஏழரை மணிக்கு அடையாறு காந்தி நகரில் இருக்கும் பிள்ளையார் கோயில் எதிரில் சித்ரா



காரில் வந்து இறங்கினாள். ஒரு முறை கோவிலை வலம் வந்து விநாயகனை நமஸ்கரித்து, ''ரவி சொல்லப் போகும் விஷயம் என்னவென்று எனக்குக் கொஞ்சம்கூடப் புரியவில்லை. பார்த்தால் நல்லவன் போலிருக்கும் அவருக்கு நல்ல புத்தியைக் கொடு. என் தந்தையைப் பற்றி அவர் கூறப்போகும் விஷயம் நல்லதாகவே இருக்க அருள் புரி. உனக்கு நாலு தேங்காய் உடைக்கிறேன்'' என்று வேண்டிக் கொண்டு எலியட்ஸ் பீச்சுக்குப் புறப்பட்டாள்.

அதே சமயத்தில் சனீசுவரன் கோயிலை வலம் வந்து கொண்டிருந்த ரவி சாஷ்டாங்கமாக விழுந்து சனீசுவரனை நோக்கிப் பிரார்த்தித்தான்: ''சனீசுவரா, ஏதோ அவசரத்தில், சின்னதுரையைப் பற்றிய விவரத்தைச் சொல்லி விடுவதாகச் சித்ராவிடம் சொல்லி விட்டேன். அந்த நிர்ப்பந்தத்தை எனக்கு ஏற்படுத்தாதே. மகாதேவன் என்னிடம் உதைபட்டு ஓடுவதைப் பார்த்துச் சித்ரா என்னைக் காதலிக்க ஆரம்பிக்கட்டும். யார் என்ன நினைத்தாலும் சரி, எனக்குப் பிறக்கப் போகும் முதல் குழந்தைக்கு, அது ஆணாக இருந்தால் சனீசுவரன் என்றே பெயர் வைக்கிறேன்.'' — மனமுருக நின்று ரவி பிரார்த்தனையை முடித்துக் கொண்டு எலியட்ஸ் பீச்சுக்குக் கிளம்பினான்.

மயிலாப்பூர் முண்டகக்கண்ணி அம்மன் கோயிலின் எதிரில் மகாதேவன் நின்று கொண்டிருந்தான்.

'' தாயே! அந்தப் பொம்பளை நிறைய நகையோட வரட்டும். அந்த ரவி எங்கிட்டே உதை வாங்கி ஓடட்டும். நான் அபேஸ் பண்ணற நகையிலேயே நல்ல ஓஸ்தியான நகை ஒண்ணை உனக்கு நான் காணிக்கையாக் கொணாந்து போடறேன்'' என்று வேண்டிக் கொண்டு புறப்பட்டான் மகாதேவன்.

எலியட்ஸ் பீச்சில் எட்டு மணி சுமாருக்கு மகாதேவன் அவனுடைய இரு சகபாடிகளுடன் செடி மறைவில் மறைந்திருக்க, சித்ரா காரில் வந்திறங்கினாள். அவளுக்காகவே காத்திருந்த ரவி காரை நெருங்கினான். இவர்களில் யார் கண்களுக்குமே புலப்படாமல், மற்றும் மூவர் அங்கு வந்திருந்தனர். அவர்கள்தான் முறையே விநாயகர், சனீசுவரன், முண்டகக்கண்ணி அம்மன் ஆகியோர். ஒவ்வொருவரும் மனமார வேண்டிக் கொண்டதால் நேரே வந்திருந்து, பக்தர்களுடைய வேண்டுதலைப் பூர்த்தி செய்ய மூன்று தெய்வங்களும் பிரசன்னமாகியிருந்தனர். ஒருவரைக் கண்டு ஒருவர் அதிசயித்துக் கொண்டார்கள்.

விக்நேஸ்வரர் பேச ஆரம்பித்தார்: ''என்ன? நீங்கள் இருவரும் வந்திருக்கிறீர்கள்?''

''நீர் வந்த காரணம் என்ன விநாயகரே?'' என்றார் சனீசுவரர்.

''தாயே, நீங்கள் வந்த காரணம்?'' என்று விநாயகர் முண்டகக்கண்ணி அம்மனைக் கேட்டார். வந்த காரணங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டார்கள்.

''ரவியை அந்த விஷயத்தைச் சொல்ல வைத்து, அவனுக்குச் சித்ராவின் வேண்டுதல்படி நல்ல புத்தியையும் கொடுக்கவே நான் வந்தேன்'' என்று மீண்டும் கூறினார் விநாயகர்.

''ரவியின் வேண்டுதல்படி, அந்த விஷயம் வெளியே வராமல் இருக்கும்படி செய்து, மகாதேவனை உதைத்து ரவி சித்ராவிடம் நல்ல பெயர் எடுக்கும்படி செய்யவே இங்கு நான் வந்தேன்'' என்றார் சனீசுவரர்.

''ரவி உதைபட்டு ஓட, சித்ராவின் நகைகளை மகாதேவன் அடைய வேண்டும். அதற்கு உதவத்தான் நான் வந்திருக்கிறேன்'' என்றாள் முண்டகக்கண்ணி அம்மன்.

''இப்படி மூவரும் மூன்று விதமாக நின்று போட்டியிடுவது நன்றாகஇல்லை. ஆதலால் மூவரும் சேர்ந்து என் பக்தை சித்ராவின் வேண்டுதலையே நிறைவேற்றி வைப்போம்'' என்றார் விநாயகர்.

''இது என்ன நியாயம்?'' என்று கேட்டார் சனீசுவரன்.

''விநாயகரே! உமது சகோதரன் முருகன் வள்ளியை மணம் புரியக் கூட இருந்து உதவி செய்தீரே, என் பக்தன் ரவிக்கு உதவக் கூடாதா? உமது சகோதரன் என்றால் ஒரு நியாயம், மற்றவர்கள் என்றால் இன்னொரு நியாயமா?''

விநாயகர் பதில் பேசமுடியாமல் நின்றார். முண்டகக்கண்ணி அம்மனை நோக்கினார் சனீசுவரன்.

அதற்குள் மகாதேவனும் நண்பர்களுடன் செடி மறைவிலிருந்து வெளிப்பட்டு, நேரே சித்ராவை நெருங்கினான். ''மரியாதையா நகையெல்லாம் கழட்டு!'' என்று கத்தியைக் காண்பித்து மிரட்டினான். முண்டகக்கண்ணி அம்மன் புன்முறுவல் பூத்தாள். சனீசுவரன் பரிதாபமாக விழித்தார். விநாயகர் சற்று ஒதுங்கியே நின்றார்.

ரவி மகாதேவனைப் பார்த்து, ''டேய், யார்ரா நீ? மரியாதையா

இந்த இடத்தைவிட்டுப் போயிடு. இந்தப் பொண்ணு மேலே கையை வைத்தால் உன்னைக் கொன்னுப்புடுவேன்'' என்று மிரட்டினான்.

உடனே மகாதேவன் அலட்சியமாக ரவியைப் பிடித்துக் கீழே தள்ளினான். பொதேலென்று விழுந்த ரவி, ''இது என்ன விளையாட்டுக்குத் தள்ளும் போதே இப்படித் தள்ளுகிறானே, இவன் !'' என்று நினைத்தவாறே எழுந்து மகாதேவனின் முகத்தில் ஒரு குத்து விட்டான். மகாதேவன் ரவியின் சட்டைக்காலரைப் பிடித்து இரண்டு கன்னங்களிலும் மாறி மாறிப் 'பளார், பளார்' என்று அறைந்தான். சித்ரா பயந்து வாயடைத்து நின்றாள். ரவி மகாதேவன் காதோடு ரகசியமாக, ''என்னப்பா, இது! நிஜமாவே அடிக்கிறியே! மெதுவா அடி. நான் இப்ப ஒரு குத்து விடறேன். கீழே விழுந்துடு. அப்புறம் ஓர் உதை உதைக்கிறேன். எழுந்து ஓடிப் போயிடு'' என்றான்.

இப்படிச் சொல்லி விட்டுக் கையை ஓங்கினான் ரவி. அவன் கையைப் பின்னால் நின்றிருந்த மகாதேவனின் நண்பன் பிடித்துப் பின்புறமாகவே மடக்கி ஒரு முறுக்கு முறுக்கினான். ஓலமிடப் பார்த்தவனின் வாயைப் பொத்தி ஒரு தள்ளுத் தள்ளினான் மகாதேவன். கீழே விழுந்த ரவியைப் பிடித்து, நிறுத்தி, மீண்டும் அவன் முகத்தின் மீது குத்து மழைகளைப் பொழிந்தான்.

இப்போதுதான் ரவிக்கு மகாதேவன் தன்னை நிஜமாகவே உதைக்கிறான் என்பது புரிந்தது. மகாதேவன் ரவியைப் பிடித்தவாறே சித்ராவைப் பார்த்து, ''உம், கழட்டு நகையெல்லாம்!'' என்றான். சித்ரா பயந்து நகைகளைக் கழற்றலானாள்.

முண்டகக்கண்ணி அம்மன் புன்முறுவல் பூத்தாள். சனீசுவரன் முண்டகக் கண்ணி அம்மனிடம் நெருங்கி, ''தாயே! ஒரு வார்த்தை !'' என்றார்.

''என்ன?'' என்றாள் அம்மன்.

''இந்த மகாதேவன் வேண்டுதலை நிறைவேற்றி வைத்தால் இந்த நகைகளில் ஒன்றை அவன் உனக்கு அணிவிக்கப் போகிறான். உன் கழுத்திலே திருட்டு நகை தவழ வேண்டும் என்று நீ விரும்புகிறாயா? இந்த மாதிரி அபக்கியாதியிலிருந்து நீ தப்ப வேண்டுமானால் மகாதேவனுக்கு உதவி செய்யாதே !'' என்றார் சனீசுவரன்.

''சனீசுவரர் சொல்வது முற்றிலும் நியாயம் என்றே எனக்குத் தோன்றுகிறது!'' என்றார் விநாயகர்.

இதற்குள் ரவிக்கு இன்னும் சில குத்துக்களும், உதைகளும் கிடைத்தன.

பேசாமல் இருந்த அம்மனை நோக்கி மீண்டும் முறையிட்டார் சனீசுவரர். ''தாயே! என் பக்தன் படும் அவதியைப் பார். உன் பக்தனோ, விநாயகன் பக்தையோ உங்கள் ஆசீர்வாதத்தால் தங்கள் வேண்டுதலை நிறைவேற்

சிங்க ரசாயனம்



சிங்கத்தின் பலத்தை நாம் அறிவோம். உயிரோடிருக்கும்போது மட்டுமின்றி உயிரை விடும்போதும் இந்தப் பலம் வெளிப்படுகிறது. சிங்கத்தின் இதயமோ அல்லது நுரையீரலோ அம்பால் துளையுண்ட பின்பும் கூட அது உடனே இறந்து விடுவதில்லையாம். இருபதிலிருந்து முப்பது நிமிடங்கள் வரை உயிர் வாழுமாம். குண்டடி பட்டாலும் அது உடனே இறப்பதில்லை. அதற்கு இவ்வளவு தெம்பு இருப்பது எப்படி என்பது இதுகாறும் ஓர் அதிசயமாகவே இருந்தது.

இந்த அதிசயத்துக்குக் காரணத்தை அலசிக்கொண்டிருக்கிறார் ரிசார்ட் ஏ. கில்பெர்ட் என்ற வாஷிங்டன் நகரத்து டாக்டர். சிங்கத்தின் உடலில் ஏதோ ஒரு ரசாயனப் பொருள் இருக்கவேண்டும். இதுதான் அதற்கு இத்தகைய பலத்தைக் கொடுத்திருக்கவேண்டும் என்று அவர் கருதுகிறார். இந்த ரசாயனப் பொருளை எடுத்து வருவதற்காக அவர் சிங்கங்கள் அடர்ந்ததும், ஆப்பிரிக்காவில் உள்ளதுமான போர்ச்சகீஸ் மொஸாம்பீக் வனத்துக்குச் செல்லப் போகிறார். அதுவும் எப்படித் தெரியுமா? கையில் வில்லும் அம்பும் எடுத்துக் கொண்டு. சிங்கங்களின் இதயத்தைத் துளைக்குமாறு அவர் அம்பு விடப் போகிறாராம். அப்போது ஏற்படும் காயத்தின் வழியாக அதிசய ரசாயனம் கசியும் என்பது அவரது நம்பிக்கை. துப்பாக்கியால் சுட்டால் ரணம் பெரிதாக இருக்குமாதலால் இந்த ரசாயனத்தையும் அது அழித்துவிடக் கூடும் என்பதாலேயே வில்லும் அம்பும் எடுத்துச் செல்கிறார்.

கில்பெர்ட்டின் நம்பிக்கை மெய்யானால் இப்போது கிட்டுக்குருவி, குரங்கு ரசாயனங்கள் பாரிப்பது போல் சிங்க ரசாயனமும் தயாராகலாம்!



மாலை ஐந்து மணியிலிருந்து ஆறு மணி வரையில் உள்ள நேரத்தில் குழந்தைகள் அதிகம் பிறப்பதில்லை. ஆனால் விடியற்காலை மூன்று மணியிலிருந்து நான்கு மணிக்குள்ளாகத்தான் மிகவும் அதிகமான குழந்தைகள் பிறக்கின்றனவாம். 'டிட்பிட்ஸ்' — மீரு

றிக் கொண்டால் என் பக்தன் ரவியின் வேண்டுதல் நிறைவேறாமற் போய் விடும். அப்போது என் கதி என்ன? இதுவரையில் என்னிடம் யாருமே வேண்டுதலையாக அளிக்காததை ரவி எனக்கு அளிக்கப் போகிறானே, அது எனக்குக் கிடைக்கக் கூடாதா?''

''நீ எதைச் சொல்கிறாய் சனீசுவரா.....?'' என்றாள் முண்டகக்கண்ணி அம்மன்.

''ரவியின் வேண்டுதல் என்ன தெரியுமா? அவன் காரியம் ஸித்தி பெற்றால், அவனுக்குப் பிறக்கப் போகும் ஆண் குழந்தைக்கு என் பெயரை வைக்கப் போகிறான். இந்தப் பூலோகத்தில் வேறு யாராவது தன் பிள்ளைக்கு என் பெயரை வைக்க ஒப்புவார்களா? இந்த மாதிரி சந்தர்ப்பம் எனக்கு எப்போது கிடைக்கும்? தாயே, நீ மனம் வைத்தால் பூலோகத்தில் பிறக்கப் போகும் ஓர் ஆண் மகன் என் பெயரோடு வாழ்வான். இதை நீ எனக்கிடும் பிச்சையாக நினைத்து அருள் புரி, தேவி!'' என்றார் சனீசுவரர்.

முண்டகக்கண்ணி அம்மன் மனம் கரைந்தது; தலையசைத்தாள்.

மகாதேவன் இப்போது ரவியை ஒரே அடியில் வீழ்த்துவது என்று கையை ஓங்கினான். ஓங்கப் பட்ட கை பின்னாலிருந்த அவன் சகபாடியின் முகத்திலே தவறிப் பாய்ந்தது. அவன் அலறி விழுந்தான். அதைப் பார்த்துத் திகைத்த மகாதேவனின் பிடி தளர்ந்தது. ரவி உடனே விலகி நின்று காரின் கதவைச் சடேரெனத் திறந்து, ''ஹாண்டிலை''க் கையில் எடுத்துக் கொண்டான். மகாதேவன் அலட்சியமாக ரவியின்மீது பாய, ரவி சற்றே நகர, மகாதேவன் இன்னொரு நண்பன் மீது விழுந்தான். இருவரும் தரை மீது விழுந்து புரண்டனர்.

ரவி ஹாண்டிலை ஓங்கி மகாதேவன் கால்களிலும் அவன் நண்பன் கால்களிலும் ஓங்கி அடித்தான். மகாதேவனும் நண்பனும் எழுந்திருக்கக்கூட முடியாமல் அலற, ரவி சித்ராவைப் பார்த்து, ''உம், காரை 'ஸ்டார்ட்' பண்ணுங்க. நானும் ஏறிக்கறேன்!'' என்று கத்தினான். திக்பிரமை பிடித்து நின்று கொண்டிருந்த சித்ரா சுய உணர்வு பெற்றுக் காரில் ஏறி அமர்ந்து காரை 'ஸ்டார்ட்' செய்தாள். ரவி கடைசியாக ஆசை தீர மகாதேவன் கால்களை நொறுக்கிவிட்டுக் காரில் ஏறி அமரக் கார் பறந்தது.

சனீசுவரன் நன்றிப் பெருக்கோடு முண்டகக்கண்ணி அம்மனைப் பார்த்தார். ''தாயே! உன் கருணையே கருணை. நீ மட்டும் மனமுவந்து உன் பக்தனை விட்டுக் கொடுத்திருக்கா விட்டால், என் பெயரில் ஓர் ஆண் மகன் பிறந்திருப்பானா? ரவிக்கும் சித்ராவுக்கும் கல்யாணமாகி ஆண் குழந்தை பிறக்கவும் நீதான் அருள வேண்டும்'' என்று மனமுருகக் கூறினார்.

''உன் விருப்பப்படியே நடக்கட்டும்'' என்று கூறி மறைந்தாள் முண்டகக்கண்ணி அம்மன். சனீசுவரனும் திடீரென்று மறைந்தார். தனியே விடப்பட்ட விநாயகருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ''சனீசுவரரே! நான் நினைத்திருந்தால் சித்ராவுக்கு உதவி, மகாதேவனை இங்கு வராமல் இருக்கச் செய்திருப்பேன். ரவியிடமிருந்து அவன் சொல்ல இருந்த விஷயத்தையும் சித்ரா அறிந்திருப்பாள். ரவியின் திட்டங்கள் தூள் தூளாகி விட்டிருக்கும். நான் உம்மைப் பார்த்து உம்மை மதித்து, உங்கள் வேண்டுகோளுக்கிணங்கி எனது பக்தை சித்ராவின் வேண்டுதலையும் மறந்து, நான் வந்த காரியத்தைச் செய்யாமல் நின்றேன். ஆனால் நீரோ, எனக்கு நன்றி செலுத்தக்கூட மறந்து விட்டீர். தாய் முண்டகக்கண்ணி அம்மனுக்கு நன்றி செலுத்தத் தெரிந்த உமக்கு, நான் ஒருவன் இருப்பதே மறந்து விட்டதா? உம்! இருக்கட்டும்! இன்று உமது பக்தன் ரவி வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் அவன் திட்டம் எப்படி நிறைவேறுகிறது என்று பார்த்து விடுகிறேன். என்னை முதலில் நினைக்க மறந்த காரணத்தால் வள்ளியை மணம் புரிய நினைத்த என் சொந்த சகோதரனையே ஆட்டி வைத்தவன் நான். உமது பக்தன் எனக்கு எம்மாத்திரம்? நன்றி மறந்த நீர் எப்படி உமது பக்தனது திட்டத்தை நிறைவேற்றுகிறீர் என்பதை நான் பார்க்கத்தான் போகிறேன்! விநாயகனை விரோதித்துக் கொண்டவர் எவருமே வெற்றி பெற்றதில்லை!'' இவ்வாறு சபதமிட்டார் விநாயகர். **(தொடரும்)**

4 தலைசிறந்த ஏஸிஸி தயாரிப்புகள்


அக்கோஸிட்



(ஆஸிட்டால் பாதிக்கப்படாத ஸிமெண்ட்)

மிகவும் சுத்தமான ஸிலிக்கேட்டுகள் சேர்ந்த அக்கோஸிட் எவ்வளவு சக்திவாய்ந்த ஆர்கானிக் மற்றும் இனார்கானிக் ஆஸிட்களாலும் பாதிக்கப்படாது. ஆஸிட் டாங்குகள் மற்றும் பிக்லிங் டாங்குகள், ஆஸிட் டவர்கள் மற்றும் ஃப்யூம்ஸ்டாக்குகள், ரியாக்ஷன் வாட்கள் மற்றும் டாங்குகள், லாபரட்டரி பெஞ்சுகளின் மேல்பரப்பு, போன்றவைகளுக்கு அக்கோஸிட் சிபாரிசு செய்யப்படுகிறது.

அக்கோஸெட்-50



(மோனோலித்திக் ரிஃப்ராக்டரி ஸிமெண்ட்)

மிகவும் நன்கு அரைத்த உயர்தர களிமண், அதிக அளவில் அலுமினா கொண்ட சுடவைத்த ரிஃப்ராக்டரிப் பொருள்கள் மற்றும் பிரத்தியேக ரசாயனப் பொருள்கள் கொண்டது அக்கோஸெட்-50. இது அதிகரித்த வெப்பத்தாலும் பாதிக்கப்படாது. உறுதியான இணைப்பு வேலைகளுக்கும், மோனோலித்திக் மற்றும் ராம்ட் லைனிங்குகளுக்கும் இது சிறந்தது.


மிகவும் அதிகரித்த வெப்பம் உள்ள இடங்களில் அக்கோஸெட் ஸுப்பர் உபயோகியுங்கள்.

ஃபயர்ப்ரிக்குகள்



மீடியம், ஹை மற்றும் ஸுப்பர் அலுமினா கொண்ட ஃபயர்ப்ரிக்குகள் நீங்கள் குறிப்பிடும் உருவம், சைஸ் மற்றும் தரத்துடன் செய்து தரப்படும். இவை வெப்பத்தால் ஏற்படும் அழுத்தம் மற்றும் விரிசல் வெடிப்புகளை எதிர்க்கும்.

ஃபயர்க்ரீட்



வார்ப்பு செய்யக் கூடிய ரிஃப்ராக்டரி (பொடி)

உலைகளின் மேல் வளைவுகள், உலைகளின் சுவர்கள், உலை அடுப்பு, முதலியவற்றிற்கு ஏற்றது. இதை வேண்டிய உருவத்தில் வார்ப்பு செய்யலாம். மிகவும் அதிகரித்த வெப்பம் உள்ள இடங்களில் உபயோகிக்க ஃபயர்க்ரீட் ஸுப்பர் கிடைக்கும்.

தொழில் நுட்ப விவரங்கள் இலவசமாகப் பெற எழுதவும்:

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிட்டெட்

பம்பாய் . அஹமதாபாத் . பெங்களூர்
கல்கத்தா . கோயம்புத்தூர்
புது டில்லி . இந்தூர் . கான்பூர்
மதராஸ் . பாட்னு . ஸெகந்திராபாத்

ஏஸிஸி கட்னி

தி அஸோஸியேட்டெட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிட்டெட்

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிட்டெட்

ஏஸிஸி — சிறந்த ஸிமெண்டின் சீரிய சின்னம்

CMI 5407



நேரு தலையில் புறா!

டில்லி நகரில் நேஷனல்
ஸ்டேடி யத்தில் சிறுவர்கள்,
எள்ளுப் போட இடமின்றி
இலட்சக் கணக்கில் கூடினர்

"இன்று நேரு பிறந்தநாள்.
எங்கள் மாமா பிறந்தநாள்"
என்று கூறிப் பாடினர்
இன்பம் பொங்க ஆடினர்.

காரில் நேரு வருவதைக்
கண்ட வுடனே சிறுவர்கள்
'நேரு வாழ்க!' என்றனர்
நீண்ட நேரம் முழங்கினர்.

'யுத்தம் நீங்கி உலகிலே
உள்ளோர் நன்கு வாழவே
நித்தம் உழைத்த நேருவே,
நீடு வாழ்க!' என்றனர்.

அவர்க ளுக்கு மத்தியில்
அழகு வெள்ளைப் புருவினை
ஜவஹர் பறக்க விட்டார்
சர்ரென் றுயரச் சென்றது.

வட்ட மிட்டுத் திரிந்தது,
வானில் சிறிது நேரமே
சட்டென் றிறங்கி வந்தது
ஜவஹர் தலையில் அமர்ந்தது!

வெள்ளைக் குல்லாய் மீதிலே
வெள்ளைப் பறவை அமர்ந்ததும்,
பிள்ளை யெல்லாம் மகிழ்ந்தனர்;
பெரிதும் கூச்சல் போட்டனர்.

தலையில் வெள்ளைப் புருவுடன்,
சாந்தம் தவழும் முகத்துடன்,
சிலைபோல் நேரு நின்றனர்,
சிறுவர் பார்த்து மகிழவே!

நேரு பிறந்த நாளிலே
நிகழ்ந்த இந்தக் காட்சியை
நேரில் பார்த்தோர் இந்தநாள்
நினைத்துப் பார்த்தே மகிழ்கிறார்!

— அழ. வள்ளியப்பா



மல்லிகைச் சரம்



எதிர் வரிசைத் தென்னங் கன்றுகள் சலனமின்றி ஓய்ந்து நிற்கின்றன.

மாலதி வெளித் தாழ்வாரத்தில் தூணில் சாய்ந்தபடி நின்று கொண்டிருக்கிறாள். அவள் பார்வை எதிர்வரிசைத் தென்னங் கன்றுகளைக் கடந்து போகிறது.

நெஞ்சில் நினைவுகள் படைக்கின்றன — பரவசமும் வேதனையுமாய்.

ஒரு மாலைப் பொழுது.

தெருக் கோடித் திருப்பத்தில் அந்தக் குரல் கேட்டது: ''மருக்கொழுந்து, கதம்பம்.....''

மாலதியின் கண்கள் மலர்ந்தன.

பூக்காரச் சின்னத்தம்பி மெதுவாகத் தான் நடந்து வருவான். அவன் ஒவ்வொரு வீடாகத் தாண்டிக் கொண்டு வரும் போது அவள் நெஞ்சில் ஆசை படபடத்தது.

''சின்னத் தம்பி! சின்னத் தம்பி !''

''என்ன வேணும், கொழந்தே?'' - காவிப் பல் தெரியச் சிரித்துக் கொண்டே கேட்டான் பூக்காரன். அவனுக்கு ரொம்பச் சின்னப் பெண்களெல்லாம் 'பாப்பா'. அதற்கு மேல் எல்லாரும் 'கொழந்தே' தான் !

கூடையை மூடியிருந்த ஈரத் துணியைப் பிரிக்கொண்டு மணம் குப்பென்று படர்ந்தது.

அவள் மனம் கொண்ட மட்டும் அந்த மணத்தை இழுத்துத் தீர்க்கமாய் நெட்டுயிர்த்தாள்.

''சின்னத் தம்பி ! அரும்பு இருக்கா ?''

''என்ன அரும்பு கொழந்தே ?''

அந்தப் பத்தொன்பது வயதுக் குழந்தையின் ஆவல் அவனுக்கு அதிசயமா யிருந்தது.

''மல்லிகை அரும்பு!''

''ஏன் முல்லே, ஜாதியெல்லாம் இருக்கு.''

''ஊஹூ~ம்! எனக்கு மல்லி அரும்பு தான் பிடிக்கும்.''

''விடிஞ்சதும் கொஞ்ச நேரத்தில் புளியம் பூவாய்ப் பழுத்துப் போயிடும்.''

''போனால் போகட்டும்!''

சின்னத் தம்பி மாலதியை மேலும் அதிசயத்தோடு பார்த்தான்.

அவனுக்குத் தன் நினைப்பை எப்படிப் புரிய வைப்பது என்று அவளுக்குப் புரியவில்லை. நெருக்கமாய்த் தொடுத்த மல்லிகை அரும்புச் சரம் அவளது கற்பனையில் நெளிந்தது. சுடர் அரும்புகளாய், சுடர்வரிசையாய்!

''இல்லையே!'' என்று தயங்கினான் பூக்காரச் சின்னத் தம்பி.

''நிஜம்மா? மல்லிப்பூ வாசனை மாதிரி இருந்துதே ?''

''உனக்கு எப்படி அது தெரிஞ்சுது ?''

''எப்படியோ !''

சின்னத் தம்பி சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே, ''கொஞ்சமா ஒரே ஒரு முழம் இருக்கு. கோடி வீட்டுக்கு பம்பாயிலே இருந்து வந்திருக்காங்களே, அந்த அம்மாவுக்காகக் கொண்டாந்தேன்'' என்றான்.

மாலதியின் முகத்தில் ஆவலுக்கிடையே ஏமாற்றும் கீற்றாக ஓடியது.

''எடுத்துக்கோ, கொழந்தே. அந்த அம்மாவுக்கு நாளைக்குக் கொடுத்துக்கிறேன்.''

சரம் மாலதியின் கையில் தண்ணென்று வந்து அமர்ந்தது. நெஞ்சில் அதன் ஆழ்ந்த, மெதுவான மணம் இனித்தது.

அம்மா பதில் சொல்லவில்லை. அவ ளுடைய அவசரம், ஆத்திரம் எல்லாம் ஒரே பார்வையாய்த் தெறித்து விழுந்தது.

மாலதி திரும்பி வாசலுக்கு வந்துவிட் டாள். சின்னத்தம்பி மறுபடியும் அவளை அதிசயமாய்ப் பார்க்கிறான். உள்ளே நடந்த அத்தனை பேச்சையும் அவனும் கேட்டு விட்டான். ''நீ வைச்சுக்கோ கொழந்தை. காசு அப்புறம் கொடுக்க லாம்'' என்று சொல்லலாம் என்கிற எண்ணம் அவனுக்கு. ஆனால் மாலதி அரும்புச் சரத்தைக் கூடையின் மேலே வைத்து விட்டுத் திரும்பி விட்டாள்.

''எனக்கு மல்லிகை அரும்புன்னு ரொம்பப் பிடிக்கிறது.''

'ஏன் இந்த ஆசை? அம்மா ஏன் இப் படிக் காய்கிறாள்?'

கேள்வி வரிசை ஓயவில்லை.

இருள் படர்ந்து வந்தது.



கு. வேங்கடரமணி

மாலதி தெரு மாடத்தில் விளக்கை வைத்து விட்டு வீட்டுக்குள் வருகிறாள். இடைகழியைத் தாண்டவில்லை.

''மாலதி ! மாலு!''

சத்தியமூர்த்தியின் குரல் கேட்டது.

''ஏன்?''

''இதை வாங்கிக் கொண்டு போயேன்.''

''என்னது ?''

''வாசனையிலே தெரிஞ்சுக்க முடியலையா?''

''மல்லிகையா?''

''உம்.''

''எதுக்காகவாம் ?''

''உனக்குத்தான்.''

''எனக்கு எதுக்காகக் கொடுக்கிறே?''

''மல்லி அரும்பு உனக்கு ரொம்பப் பிடிக் குமே !''

சாயங்காலம் நடந்தது சத்தியமூர்த்திக் கும் தெரியுமோ என்ற சந்தேகம் மெதுவாகத் தலை நீட்டுகிறது.

''அது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று அவசரமாய்க் கேட்டாள்.

''நீயே எப்போதோ ஒரு நாள் சொல்லித் தான் தெரியும்.''

''அது அப்போது சொன்னது. இப்போ சொல்கிறேன். எனக்குப் பிடிக்காது. நீயே தயவுபண்ணி எடுத்துக்கொண்டு போய்விடு.''

''மாலு, மாலு!''

அவள் நின்று பதில்சொல்லவில்லை. இடை கழியையும் தாழ்வாரத்தையும் வேகமாய்க் கடந்து கூடத்துக்கு வந்து விட்டாள். அதற் குள், ''யாரது?'' என்று கேட்டுக் கொண்டே அம்மாவும் கூடத்துக்கு வந்துவிட்டாள்.

''நான்தான் மாமி சத்யம்.''

''வாயேன். ஏன் அங்கேயே நிற்கிறே?''

''ஒண்ணுமில்லே மாமி! தோட்டத்திலே நிறைய மல்லிகை அரும்புவிட்டிருந்தது. மால திக்குக் கொடுக்கலாமே என்று கொஞ்சம் கொண்டு வந்தேன்.''

''காசு கொண்டு வாம்மா. நேரமாச்சு. நான் போகவேணும்.''

அவளுக்கு நினைவு மீண்டது. காசுகொடுக்க வேண்டும்; அம்மாவிடம் கேட்க வேண்டும்.

மெதுவாய் உள்ளே போனாள்.

''அம்மா !''

''ஏண்டி, என்ன இப்போ அம்மாவுக்கு?''

''அரும்பு அம்மா.''

''ஓ! அதுதான் குறைச்சல். தினம் கால் ரூபாய்க்கு வாங்கி வைச்சுக்கோ.''

''இல்லேம்மா. இன்னிக்கு ஒரே நாள். மல்லி அரும்பு அம்மா !''

''அடடா! அதுக்காக நீயே வரணுமா?''

அம்மாவின் முகத்தில் வாடிக்கையான ஆத்திரத்துக்குப் பதில் பெருமை வழிந்தது; நன்றி பெருக்கெடுத்தது.

சுவரில் மொட்டு விளக்கு மௌனமாய் அடங்கி, வெளிச்சத்துக்குப் பதிலாக மங்கலான நிழலை ஏழைமையில் நடுங்கிக் கொண்டு வெளிப்படுத்தித் தரித்திரம் கொண்டாடிக் கொண்டிருந்தது.

மாலதி விளக்கைப் பார்த்தாள். விளக்கு எதிரில் வந்து நின்ற சத்தியமூர்த்தியைப் பார்த்தாள்.

அந்த மங்கலிலும் அவன் முகமும் உடலும் தங்கமாய்த் தகதகத்தன. அவனுடைய மறுப்பையும், அலட்சியத்தையும் தாங்கிக் கொண்டும், அவற்றையும் கடந்து நிலைத்த அமைதி கொழித்தது. நெற்றியிலும் உடம்பிலும் பட்டை பட்டையாய் விபூதி. மேலே ஒரு சாதாரணத் துண்டு மட்டுந்தான் போட்டுக் கொண்டிருந்தான். நெஞ்சத்து உறுதியின் வெளியீடு போலும், மார்பு விசாலமாய்ப் பார்வையைப் பறித்தது.

மாலதியின் உள்ளம் திடுமெனக் கனிவு கொள்ளத் தொடங்கியது.

ஒரே வினாடிதான். அவள் அந்த உணர்விலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு விட்டாள்.

கோவிலுக்குப் போகிறான் போலிருக்கிறது. இந்த அரும்பையும் அங்கேயே கொண்டு போகிறதுதானே!

அம்மா அவனோடு ஏதேதோ விசாரித்தாள்; அந்தக் காலத்துப் பெருமை, இன்றைய நிலை எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தாகி விட்டது. நல்ல வேளை! சாயங்காலம் பூக்காரன் வந்து விட்டுப் போனதைப் பற்றிப் பேச்செடுக்கவில்லை.

''போய்ட்டு வரேன்'' என்று மாமிக்கு ஒரு தடவையும், மாலதிக்கு ஒரு தடவையும் சொல்லிக் கொண்டு கிளம்பினான் அவன்.

மாலதி தலையை மட்டும் அசைத்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அம்மா வாசல் வரையில் கூடவே போய் வழியனுப்பி விட்டு, ''சத்யம்! நான் சொன்னதைக் கொஞ்சம் ஞாபகம் வைச்சுண்டு கவனி'' என்று சொல்லிவிட்டு வந்தாள்.

வாழை இலையில் கட்டப்பட்ட அரும்பு கூடத்துத் தரையிலேயே இருந்தது. அம்மா அதைப் பற்றிக் கேட்பதற்குள் மாலதி, ''நாளைக்குப் பூத்ததும் வைச்சுக்கிறேன், அம்மா!'' என்று கண் மறைவாய்க் கொண்டு போய் வைத்து விட்டாள்.

அவள் ஆசை அடங்கிப் போய்விடவில்லை. வெடிக்காத அரும்பாய் அது ஒடுங்கிப் போயிற்று.

மாலதி தூணில் சாய்ந்தபடி நின்று அந்தத் தொலைதூரக் காட்சியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தெருவில் ஒரு வண்டி கடகடவென உருண்டோடியது. தென்னங்கன்றின் சரிவான மட்டையில் வந்து உட்கார்ந்திருந்த காகம் தெற்கேயும் வடக்கேயும் கழுத்தைச் சாய்த்துப் பார்த்துவிட்டுப் பறந்தோடிப்போயிற்று.

மீண்டும் ஒரு மாலைப் பொழுது.

அவள் பகலில் அம்மாவோடு நடந்த பேச்சுக்களைச் சுற்றி மனத்தைச் சுழலவிட்டு நின்று கொண்டிருந்தாள்.

''உன் கலியாணத்தை முடிச்சுட்டா அப்புறம் எனக்குப் பெரிய பாரம் குறைஞ்ச மாதிரி'' என்று வழக்கமான அதே வார்த்தைகளில் அம்மா தன் குறையைக் கொட்டித் தீர்த்தாள்.

எத்தனையோ தடவைகள் கேட்டு அலுத்துப் போன பேச்சு. ஆனால் இன்றைக்கு மாலதியால் வாயை மூடிக் கொண்டு கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை.

''மூணு வருஷங்களாய் — அப்பா போன நாட்களாய் — இதையேதான் சொல்லிக் கொண்டிருக்கே! இன்னும், இன்னும்...!''

''என்ன, இன்னும்? சொல்லித் தொலையேன்.''

'நீ இருக்கிற வரைக்கும் இப்படியேதான் சொல்லிக் கொண்டிருப்பே' என்று மாலதி நினைத்துக் கொண்டாள். வாய் திறந்து சொல்லவில்லை.

''எனக்குக் கல்யாணமே வேண்டாம், அம்மா. நீ வீணாகக் கஷ்டப்படாதே!''

அம்மா அவசரமும் ஆத்திரமும் கலந்த பார்வையால் ஒரு வினாடி நேரம் தகித்தாள். இருவரும் எப்போதும் இப்படியேதான் கடைசியில் மௌனத்தில் ஒடுங்கிப் போகிறார்கள். ஆனால் மாலதிக்கு இப்பொழுதும் அதே போலப் பேச்சற்றுப் போய், எல்லாவற்றையும் இதயத்தில் சுமையாய் அடைத்துக் கொள்ள விருப்பமில்லை.

என் கல்யாணம் நடக்கணுமே என்று தானே அம்மா தவிக்கிறாள்? அந்தக் கவலை தானே அவளை ஆத்திரத்தில் வெடிக்க வைக்கிறது?

மாலதிக்கு, வெறும் கவலையாலோ அல்லது ஆசையாலோ மாத்திரம் எதுவும் நடந்து விடாது என்று நன்றாகத் தெரியும். நடக்க முடியாததற்கு ஏன் இந்த வீண் வேதனை?

''அம்மா! நிஜமாகத்தான் சொல்கிறேன்!'' என்றாள் அவள் மெதுவாய்—ஆசைகளை ஒட்டத் துடைத்துவிட்ட குரலில்.

''என்ன சொல்றே? ஏன் சொல்ல மாட்டே? நான் ஒவ்வொரு நாளும் பொழுது விடிகிற போதெல்லாம் தெய்வத்தை ஆயிரம் தடவை வேண்டிக்கிறேன். நீ உன்னோட துக்கிரி வாயாலே, ஒரே வார்த்தையாலே தூக்கி எறிஞ்சுட்டியே!''

''அது நடக்கிற காரியமா அம்மா?''

''நடக்கிறதா இல்லையா, பாரேன். அந்தப் பிள்ளை சத்தியம் ஓர் இடம் பார்த்திருக்கான். உன்னை வந்து ஒரு தடவை பார்த்துட்டுப் போனால் போதும். 'அப்புறம் எல்லாம் நான் பார்த்துக்கறேன்' என்று சொல்லியிருக்கான். உன்னைப் பார்த்துப் பிடிக்கலேன்னு சொல்கிறவன்கூட ஒருத்தன் இருக்கானா?''

''சத்யமா இத்தனையும் செய்யப் போகிறான்? ஏதோ போகும் போதும் வரும்போதும் எட்டிப் பார்த்து விட்டுப் போகிறானே என்ற நினைப்பிலே சொல்லாதே.''

''மாலு! அவனோட அப்பாவும் உன் அப்பாவும் எத்தனை சிநேகமாப் பழகினவா? அதனாலே இவன் என்னிடம் மதிப்பும் மரியாதையும் வச்சிருக்கான்.''

வலியா? ஜலதோஷமா?





பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம், வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கை கண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தசை வலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி, எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள், சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானால், மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள், மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம்
கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.



அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி

AM-3769

''அதெல்லாம் அப்பா உயிரோடே இருந்து, நம்ம குடும்பமும் வசதியாய் இருந்த போது சரி. இப்போ — இப்போ....''

''இப்போ ?'' அம்மாவின் பேச்சுத் தொடர வில்லே. அந்தப் பார்வைதான் தொடர்ந்தது.

மாலதி கிணற்றடியைப் பார்க்கப் போய் விட்டாள்.

''சத்தியத்தையே ஏன் நேராகக் கேட்டு விடக் கூடாது?'' என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

விளக்கு வைத்ததும், அவள் தெருப் படியில் நிற்கும்போது சத்தியமூர்த்தி வந்தான். அவளே ஒரு முறை நிமிர்ந்து பார்த்து விட்டு நடையைத் தொடர்ந்தான் அவன்.

''சத்தியம், சத்தியம்!''

''ஏன் ?''

''கோபமா, நிற்காமலே போகிறியே?''

''கோபமா? எனக்கா ? ஒரு நாளும் எனக்குக் கோபம் வராது.''

அவனும் படியேறி வெளியே வந்து நின்றான். மாலதி வீட்டுக்குள் எட்டிப் பார்த்துவிட்டு, ''உன்னே அம்மா எதிர் பார்த்துக் கொண்டே இருக்காளே! நீயானல் நான் நிற்கிறதைப் பார்த்துவிட்டுத் தெருவோடு போய்க் கொண்டே இருக்கே. அரும்பு !வேண்டாம்னு இருப்பிக் கொடுத்தேனே அதனால் கோபமா இருக்குமோ என்று நினைச்சேன்'' என்று கேட்டாள்.

''மாமி எதிர்பார்க்கிறாளா? எதுக்காக?''

''எனக்கு எப்படித் தெரியும்?''

''சரி, மாமியையே கேட்கிறேன்.''

அவன் வீட்டுக்குள் செல்ல அடியெடுத்து வைத்தான்.

''அம்மா இல்லே......''

''சரி, வரட்டும். நான் அப்புறம் வரேன்.''

''சத்யம்.''

''ஏன்?''

''உன்கிட்டே ஒண்ணு கேட்கணும். அதுக்காகத்தான் கூப்பிட்டேன்.''

''என்னது ?''

''உன்னே அம்மா கவனிக்கச் சொன்னுளே, அது என்ன?''

''கவனித்துக் கொண்டே யிருக்கேன். முடிவானதும் தன்னுல் உனக்கும் தெரிந்து போகிறது.''

''எல்லாம் எனக்குத் தெரியும்.''

''பின்னே என்னேக் கேட்பானேன் ?''

''வேண்டாம். நீ வீணுக முயற்சி பண்ண வேண்டாம். நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறதில்லே.''

''என்ன பேச்சு இது மாலதி ?''

''எனக்குக் கல்யாணம் ஆகணும் என்று நிஜமாவே கவலேயாய் இருக்கா ?''

''நிஜமாய், நிச்சயமாய்.''

''அப்போ, அப்படியானுல்—''

''அப்படியானுல் — ''

குறுக்கிட்ட தயக்கத்தை மாலதி உதறி விட்டு, ''அப்படியானுல் நீயே என்னேக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமே.''

கேட்டு முடித்ததும் மாலதிக்கு மூச்சுத் திணறியது. முகத்திலும், கூடவே உடல் முழுதும் வியர்த்துக் கொட்டியது. அவனேயே பார்த்தாள்.



நாக்கு மூன்று அங்குல நீளம்தான் உள்ளது. ஆனால் அது ஆறடி உயரம் உள்ள மனிதனையும் விழுங்கி விடும்.

— ஜப்பானியப் பழமொழி

நீதிமானை இகழ்ந்துரைக்கும் ஒரு தீயோன், மேலே நிமிர்ந்து பார்த்து வானத்தில் துப்புபவனைப் போன்றவன்.

—புத்தர் பெருமான்

அனுப்பியவர் : ஏபெஸ்

◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊

அவன் அமைதியாய் நின்றான். முகத்தில் பரபரப்பின் நிழல்கூட இல்லே.

''இல்லே, மாலதி! எனக்கு அந்த நினைப்பே இல்லே. எனக்குக் கல்யாணத்தைப் பற்றிய எண்ணமே இல்லே. என்னிக்கோ வீட்டை விட்டுச் சாமியாராய்ப் போகப் போகிறேன். அதுதான் நடக்கப் போகிறது.''

மாலதியின் இதயம் படபடத்தது.

''பொய், நீ பொய் சொல்லுகிறாய். எங்க குடும்பம் இப்போது வசதியில்லாமல் தாழ்ந்து போச்சு. அதுக்காகத்தான் இப்படிச் சொல்கிறாய்.''

அவன் பதில் எதுவும் சொல்லாமல் அமைதி குலேயாமல் நின்றான்.

மாலதி தானுக உண்டாக்கிக் கொண்ட ஏமாற்றத்தில் ஆழ்ந்து செயலற்றுப் போனாள்.

கடைசியில், ''என்னிக்கோ ஒரு நாள் உண்மை உனக்குப் புரியாமலா போய்விடப் போகிறது?'' என்று கேட்டு விட்டுப் போய் விட்டான் சத்யமூர்த்தி.

மாலதியின் மனத்துக்குள் அடுத்த நினைவு புரண்டது.

தன்னுடைய கல்யாணத்தைப் பற்றித் தானே அம்மாவுடன் பேச நேர்ந்தபோது அவள் மனத்தில் கவலே மட்டுந்தான் இருந்தது. பெண்ணுய்ப் பிறந்து வளர்ந்து அம்மாவுக்குச் சுமையாய் நிற்பதோடு, தனக்குக் கல்யாணம் செய்து பார்த்துவிட வேண்டும் என்று ஆசைப்படும் அம்மாவுக்கு ஒரு தனிப் பாரமும் இருக்கிறோமே என்ற கவலேதான் அது. சத்தியமூர்த்தியிடம் வாய்விட்டுத் தன்னுடைய ஆசையைச் சொல்லித் தீர்த்த போதுதான் அவளுக்கு நிலேகொள்ளவில்லே. 'அவனிடம் அப்படி ஏன் கேட்டேன்?' என்று தனக்குள் அவள் புலம்பிக் கொண்டேயிருந்தாள். நாள்கணக்காய் அவளுக்குள் அந்த அந்தரங்கமான புலம்பல் ஓயவில்லே.

அவனுடைய மறுப்பை மறுபடியும், மறுபடியும் ஞாபகப்படுத்திக் கொண்டு மாலதி சங்கடப்பட்டாள்.

அம்மாவின் பார்வையை மீற முடியவில்லை. சத்யமூர்த்தி ஒரு நாள் தான் சொல்லிக் கொண்டிருந்த அந்த வரனை அழைத்துக் கொண்டு வந்து விட்டான். கூடத்தில் இரவல் வாங்கி விரித்திருந்த ஜமக்காளத்தில் உட்கார்ந்திருந்த 'அவரை' நமஸ்காரம் பண்ணி விட்டுத் திரும்பினாள் மாலதி. அம்மா சமையலறைக்குள்ளேயிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். சத்யமூர்த்தியும் பக்கத்திலேயே எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

தட்டு நிறைய மல்லிகைச் சரம் பந்தாகச் சுற்றி வைத்திருந்தது. அடுத்த வீட்டிலிருந்து வந்திருந்த பெண் அதிலிருந்து அரும்பை நிறையக் கிள்ளி எடுத்து மாலதியின் தலையில் சூட்டினாள்.

'எனக்கு.... எனக்கு.... மல்லிகை அரும்புன்னு.....' — நினைப்பு முற்றுப் பெறுவதற்குள்ளேயே கூடத்திலே உட்கார்ந்திருந்த அவர் ஞாபகம் வந்தது.

'அவர் எப்படியோ ? அவருக்கு எது பிடிக்குமோ ?'

கொஞ்ச நேரத்தில் குதிரை வண்டி அவரை ஏற்றிக் கொண்டு போய் விட்டது. சத்யமூர்த்தி மட்டும் திரும்பி வந்தான்.

''வரன் எப்படி? பிடிச்சிருக்கா ?''

''பையன் ரொம்ப இளைச்சுப் போயிருக்கான். ஆனா, கல்யாணமாகிக் குடும்பம் ஏற்பட்டுப் போச்சுன்னா சரியாகப் போயிடும்.''— அம்மா தன் அபிப்பிராயத்தைச் சொல்ல ஆரம்பித்தாள்.

''ஒண்டிக் கட்டை. உறவுக்காரர்கள் யாருமே இல்லே. வயசு முப்பத்தி நாலு ஆகிறதாம். இத்தனை நாட்களாய்க் கல்யாணமே வேண்டாம் என்றான். இப்போத்தான் சாதாரண இடமாய் இருந்தால் தேவலே, பெண்ணைப் பிடிச்சிருந்தால் போதும் என்று சம்மதிச்சான்.''

''மாலதியைப் பிடிச்சிருக்கோ இல்லியோ?'' என்று கவலையோடு அவசரமாய்க் கேட்டாள் அம்மா.

''ஓ!'' — சத்யமூர்த்தி மாலதியின் பக்கம் பார்த்தான்.

''என்னடி, நீ என்ன சொல்றே?''

அரும்பின் மணம் மெள்ளக் கமழத் தொடங்கியது அப்பொழுதுதான். மாலதி பெருமூச்சு விட்டாள். மணம் நெஞ்சில் கனத்தது. அரும்புகூடத் தலையில் கனத்தது. அடுத்த வீட்டுப் பெண் நிறைய வைத்து விட்டாள் போலிருக்கிறது.

''என்னடி மாலு?''

அம்மாவுக்கு அவசரம். மாலதி நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

''எனக்குச் சம்மதந்தான் அம்மா.''

கூடத்து அறையின் இருள் மூலையை நோக்கி விரைந்தாள் அவள்.

''வசதியான இடம் மாமி! உங்களுக்கு அதிகம் செலவேயில்லே. எல்லாம் அவனே பார்த்துக் கொள்கிறேன் என்கிறான்.''

அம்மாவுக்கும் சத்யமூர்த்திக்கும் நடந்த பேச்சு அதற்கு மேல் அவள் காதில் விழவில்லை. தலையில் மல்லிகையின் அரும்புச் சரம் கனமாய்க் கனத்தது. அதன் மணம் அறை முழுதும் அடைத்துக் கொண்டு அவளைத் திணற வைத்தது.

'எடுத்து மூடி வைத்து விடலாமா?'

பொழுது விடிந்ததும் அத்தனையும் இதழ் வெடித்து மலர்ந்திருக்கும். இன்னும் வாசனை பெருகி நெஞ்சை அள்ளும் கொஞ்ச நேரம். அப்புறம் அந்த வெள்ளை வெளேர் என்ற இதழ்களெல்லாம் மங்கி.....

மாலதியின் கைகளும் உள்ளமும் செயலிழந்து போயின.

அப்புறம், அப்புறம் —

எல்லாம் சத்யமூர்த்திதான் கூட இருந்து கவனித்துக் கொண்டான். அம்மாவின் கண்களின் கலக்கத்தின் நடுவே 'பாரம் குறைந்து போன' நிம்மதியும் கலந்திருந்தது.

ராஜாராமன் ரயிலுக்கு நேரமாகிவிட்டது என்று அவசரப்படுத்தினான். மாலதி எல்லாரிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

ராஜாராமனுக்கும் தனக்கும் கல்யாணம் நடந்து விட்டதை நினைத்து நினைத்துப் பார்க்கிறாள் மாலதி. அவளுக்கு அது கனவின் மயக்கம் போலவே தோன்றுகிறது. என்றோ சத்தியமூர்த்தியிடம், 'நீயே என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளேன்' என்று கேட்டதையும் நினைத்துப் பார்க்கிறாள். 'அது என்ன அசட்டுத்தனமான நினைப்பு' என்று அதிலிருந்து மீள மனத்தை அவசரமாய் வேறு எங்கோ ஓட விடுகிறாள்.

சத்தியமூர்த்தியிடம் சொல்லிக் கொண்ட போது அவன் அமைதி கலையாமலே தலையசைக்கிறான்.

ஆறு மாதங்கள் கழிந்து விட்டன.

மாலதி மறுபடியும் கிராமத்துக்கு வந்திருக்கிறாள். அதுவும் ஒரு மாலைப் பொழுதுதான்.

மாடத்தில் விளக்கை வைத்து விட்டு வெளித் தாழ்வாரத்தில் நின்று தெருவின் இரு புறங்களையும் ஒரு தடவை பார்க்கிறாள் மாலதி.

விநாடிப் பொழுது அந்தப் பழைய நிகழ்ச்சி உள்ளத்துக் கோடியில் எட்டிப் பார்க்கிறது. சத்தியமூர்த்தி மல்லிகை அரும்புடன் வருகிறான். அதை அவள் நிராகரிக்கிறாள்.

நெட்டுயிர்ப்புடன் மாலதியின் உள்ளம் அதிலிருந்து மீள்கிறது.

அதே சமயம் அவன் வந்து தயக்கத்தோடு படியில் காலை வைக்கிறான்.

''சத்யம்!''

''உம்.''

''உன்னைத்தான் இப்போ நினைச்சேன்.''

''என்னையா ?''

''ஆமாம். முன்னே ஒரு நாள் நீ எனக்குப் பிடிக்கும் என்று அரும்பு கொண்டு வந்தாயல்லவா ?''

''ஆனால் மாலதி, அப்போ என் மனசு நிம்மதியாய் இருந்தது. இப்பொழுது வேதனைதான் வந்து முன்னாலே நிற்கிறது உன்னை நினைத்தவுடனே.''

மாலதி பதில் சொல்லாமல் நிலைத்துப் போகிறாள்.

'' என்னாலேதான் உனக்கு இந்தக் கஷ்டம் ? இருந்தாலும் ஒரு நாள் உன் கவலை தீர்ந்து போகணும், போயிடும்.''



குளிப்பில் குன்றாத ஆனந்தம் பெற

காவேரி
சூபர் சோப்



என்ன சுகம்...என்ன ஆரோக்கியம்!!
வியர்வை நாற்றம் அகன்று.
குளிர்ந்த சுகம் பெற காவேரி சூபர்-
சால்முக்ரா தைலம் கலந்தது.

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R.S. சேலம் ஜில்லா
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

Criterion-MC-1132

''உள்ளே வாயேன், சத்தியம்!'' என்று பேச்சை மாற்றுகிறாள் மாலதி.

''வேண்டாம். அப்புறம், இன்னொரு நாள் வருகிறேன்.''

ஏன் அவன் பாதியிலேயே திரும்புகிறான் என்று அவள் குழம்பும்போதே சத்தியமூர்த்தி தெருவில் இறங்கி விட்டான். அவன் கையில் வைத்திருந்த பொருளை அவள் அப்பொழுது தான் பார்த்தாள்.

''சத்யம்! அது என்ன?''

அவன் நீட்டுகிறான்.

இலை மடிப்புக்குள் மல்லிகைச் சரம்.

'இதை ஏன் கொடுக்காமலே திரும்பிப் போகிறாய்?' என்று அவள் கேட்கவில்லை. அவனும் அதை அவள் எதிரில் வைத்துவிட்டுப் போய் விட்டான்.

மாலதி அதை எடுத்துக் கொண்டு திரும்புகிறாள். மணம் மெதுவாகக் கமழ்கிறது.

இடைகழியைத் தாண்டும்போது, 'சத்யமூர்த்தியே தன்னைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால்' என்ற சிந்தனை எழுகிறது.

தாழ்வாரத்தைக் கடந்து கூடத்தில் காலடி வைக்கும் நேரம்.

சற்று முன் மனவெளியில் ஓடிய எண்ணம் நெருப்பாய்ச் சுடுகிறது.

எதிரே கூடத்தில் ராஜாராமன் படுக்கையில் கிடக்கிறான். மாதக் கணக்காய் அவன் படுக்கையோடுதான் ஒட்டிக் கொண்டிருக்கிறான். மூன்று மாதங்கள் தனியாய் அவனைக் கவனித்துக் கொண்டதில் மாலதியின் மனமும் உடலும் ஓய்ந்து விட்டன. கடைசியில் கிராமத்துக்கே அவனையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டாள் அவள்.

''மாலதி!'' என்று மெதுவாய் அழைத்துக் கொண்டே புரண்டு படுத்தான் ராஜாராமன்.

''இதோ வந்துவிட்டேன்.''

விநாடி நேரத்தில் மாலதி சமாளித்துக் கொள்ள முயன்றாள்.

''கையிலே என்னமோ கொண்டு வந்த மாதிரி இருந்ததே ?''

''ஒன்றுமில்லையே ! உங்களுக்குக் கஞ்சி கொண்டு வரட்டுமா ?''

பதிலை எதிர்பாராமலே தம்ளரில் கஞ்சியை ஆற்றி எடுத்து வந்தாள் மாலதி.

ஒரு வாய் குடித்துவிட்டு, ''மல்லிகையா மாலதி ? வாசனை அடிக்கிறதே ?'' என்று கேட்டான் ராஜாராமன்.

''ஆமாம்.''

''எனக்கு ஓர் ஆசை மாலதி. நீ மறுபடியும் தலை நிறைய மல்லிகை அரும்பு வைத்துக் கொண்டு நான் பார்க்கணும்.''

''இப்போ எதுக்கு? கொஞ்ச நாட்கள் போகட்டும். நீங்கள் எழுந்துவந்து அப்புறம்.''

பெருமூச்சு விட்டான் ராஜாராமன்.

''அப்புறம் — அப்புறம், என்றோ ஒரு நாள், நடக்குமோ நடக்காதோ ? எனக்காக மாலதி !''

அவன் வாயைப் பொத்த அவளால் முடியவில்லை. 'அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்' என்று கெஞ்சக்கூட முடியவில்லை. தனக்குள்ளேயே தவிப்பை விழுங்கிக் கொண்டு எழுந்து போய் அரும்புச் சரத்தைச் சூட்டிக் கொண்டு வந்தாள். அந்த மணம் ஓய்ந்துபோன அவனுடைய உடலில்கூட பரபரப்பை ஓட விட்டது.



காதலில் தோல்வியடைந்த நர்ஸ் ஒருத்தி தன் உயிரை முடித்துக் கொள்ள ஆஸ்பத்திரியிலிருந்து விஷ பாட்டில் ஒன்றைக் கையில் எடுத்து மறைத்துக் கொண்டாள். அதைப் பார்த்துக் கொண்டே இருந்த இன்னொரு நர்ஸ், சொன்னது: ''அது பிரயோசனப்படாது. ஏனெனில், அது அரசாங்க மருந்துக் கிடங்கிலிருந்து சப்ளை செய்யப்பட்டது.''

—'மன்னன்'

ஆனால் மாலதி ?

தன்னுடைய தடுமாற்றத்தை அவனிடம் சொல்லித் தீர்த்துவிட வேண்டும் என்று மாலதி முடிவு செய்து கொண்டாள்.

மனம் ஓய்ந்து விட்டது. கடைசி நினைவு அவளைக் கரையில் ஒதுக்கி விடுகிறது.

''ஜாதி அரும்பு, கதம்பம்......''

தெருத் திருப்பத்தில் பூக்காரச் சின்னத் தம்பியின் குரல் கேட்டது.

எதிர் வரிசைத் தென்னங் கன்றுகள் இப்பொழுதும் அசையாமலே நிற்பதைப் பார்த்துக் கொண்டு அப்படியே நிற்கிறாள் மாலதி.

சின்னத் தம்பியின் குரல் நெருங்கி, நெருங்கி அடுத்த வீட்டை எட்டிவிட்டது.

'எனக்கு, எனக்கு!'

'நான் என்னிக்காவது வீட்டை விட்டுச் சாமியாராய்ப் போய்விடப் போகிறேன்' என்று சொன்னவனின் ஞாபகம் வருகிறது. கடைசியில் அவன் ஒரே நாள் ஜுரத்தில் உலகத்தை விட்டே போய் விட்டானே !

''கொழுந்தே ! அரும்பு வேணுமா ? மல்லி அரும்பு கொண்டு வந்திருக்கேன்.''

அவள் திரும்ப வில்லை. நின்று பார்த்து விட்டுச் சின்னத் தம்பி நகர்ந்துவிட்டான்.

அப்போது மெதுவான காலடி ஓசை பின்னால் கேட்கிறது. அவசரமாய்த் திரும்பினாள் மாலதி. ராஜாராமன் நிலைப்படியைப் பிடித்துக் கொண்டு நிற்கிறான்.

''நீங்களா ?''

அதிர்ச்சியாய் இருக்கிறது. ஆனந்தமாய் இருக்கிறது. தூரத்தில் சின்னத் தம்பியின் குரல் கேட்கிறது.

''மல்லி அரும்பு !''

வேகமாய்த் தன் கணவனின் அருகில் ஓடி அவனைத் தாங்கிக் கொள்ளப் போகிறாள் அவள். அதே சமயம் கண்களில் நீர் கசிகிறது அவளுக்கு.

ராஜாராமன் ஓய்ந்த கைகளால் அவளுடைய கண்ணீரைத் துடைக்கிறான்.

'எனக்கு இதுதான் பிடிக்கும். இதுதான் வேண்டும்.'

தவிப்பினிடையே நிம்மதி மண இழையாய்ப் பரவுகிறது.



குட்டிக் கதைகள்

கிரிம் சகோதரர்கள்

தொகுப்பு: கு. அழகிரிசாமி


(ஜேக்கப் கிரிம், வில்ஹெல்ம் கிரிம் என்ற சகோதரர்கள் முறையே 1785லும் 1786லும் ஜெர்மனியில் பிறந்தவர்கள். ஜெர்மன் மொழி அகராதி, இலக்கணம் ஆகியவற்றைத் தயாரித்ததுடன் ஆட்களை அனுப்பி ஏராளமான நாடோடிக் கதைகளையும் சேகரித்த கடும் உழைப்பாளிகள். நெப்போலியனின் பயங்கரப் போர்களால் ஐரோப்பா பாதிக்கப்பட்டிருந்த சமயத்திலும் கூட, அமைதியாகவும் விடாமுயற்சியுடனும் இலக்கியப் பணிபுரிந்த அவர்கள் சேகரித்த கதைகளில் ஒன்றை இங்கு காண்கிறோம்.

■ ஒரு குடியானவனிடம் ஒரு குதிரை இருந்தது. அதற்கு வயது அதிகமாகி விட்டதால் வேலை செய்ய முடியாமல் தளர்ந்துவிட்டது. அதனால் குடியானவன் அதை ஒழித்துவிட முடிவு செய்து, ''உன்னால் எனக்கு எவ்விதப் பிரயோஜனமும் இல்லை. இப்போதே எங்காவது போய் விடு. நீ சிங்கத்தை விடப் பலசாலியாக மாறினாலொழிய என்னிடம் திரும்பிவரக்கூடாது'' என்று சொல்லிக் குதிரையை வெளியே விரட்டி விட்டான்.

கிழட்டுக் குதிரை துயரத்தோடு காடெல்லாம் சுற்றித் திரிந்தது. அதை ஒரு நரி பார்த்து, ''ஏன் இப்படித் தன்னந்தனியாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு காட்டில் சுற்றுகிறாய் ?'' என்று கேட்டது.

''என் வாழ்நாளெல்லாம் ஒரு குடியானவனுக்காக அரும் பாடுபட்டு உழைத்தேன். இப்போது வயதாகிவிட்டதால் வேலை செய்ய முடியவில்லை. அந்த நன்றி கெட்டவன், சிங்கத்தைவிட நான் பலசாலியாக மாற வேண்டும் என்றும் இல்லாவிட்டால் வீடு திரும்பக் கூடாது என்றும் சொல்லி என்னை விரட்டிவிட்டான்'' என்றது குதிரை.

''இவ்வளவுதானே ! கவலைப்படாதே ! உனக்கு நான் உதவி செய்கிறேன். ஆனால் நீ நான் சொல்கிறபடி செய்ய வேண்டும். நீ செத்துப் போனது போல் பாவனை செய்து கொண்டு நீட்டி விறைத்த வாக்கில் இங்கே கிட'' என்று சொன்னது நரி. குதிரையும் அப்படியே செய்தது.



நரி ஒரு சிங்கத்தின் குகைக்குச் சென்று, ''பக்கத்தில் ஒரு குதிரை செத்துக் கிடக்கிறது. உங்களுக்கு அருமையான சாப்பாடு'' என்று சொல்லிச் சிங்கத்தை அழைத்துக் கொண்டு வந்தது. குதிரையின் அருகில் வந்ததும் நரி சிங்கத்திடம், ''இதை நீங்கள் இங்கே சௌகரியமாக இருந்து சாப்பிட முடியாது. உங்கள் காலில் இதைக் கட்டி விடுகிறேன். குகைக்கு இழுத்துக்கொண்டு போய் அங்கே வைத்துக் கொண்டு சாப்பிடுங்கள்'' என்று கூறியது.

சிங்கமும் அதற்குச் சம்மதித்துக் குதிரையைத் தன் காலில் சேர்த்துக் கட்டுவதற்குத் தோதாகக் கீழே படுத்தது. நரி சிங்கத்தின் நான்கு கால்களையும் ஒன்றாகச் சேர்த்து இறுக்கிக் கட்டி, அதைக் குதிரையின் வாலோடும் இணைத்துக் கட்டிவிட்டது.

''நீ இனி குடியானவன் வீட்டுக்குப் போகலாம்'' என்று குதிரைக்கு நரி சொல்லவே, சிங்கத்தை இழுத்துக்கொண்டு குதிரை நடக்க ஆரம்பித்தது. சிங்கம் கோபத்தினால் உறுமியது; கர்ஜித்தது. ஆனால் கட்டுண்டு கிடக்கும் போது என்ன செய்ய முடியும் ?

குடியானவனிடம் போய், ''சிங்கத்தைக் கட்டிக் கொண்டு வந்திருக்கிறேன், பார் !'' என்று கம்பீரமாகச் சொன்னது குதிரை. குடியானவனுக்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் தாங்க முடியவில்லை. ''இனி நீ என் வீட்டிலேயே சௌக்கியமாகச் சாப்பிட்டுக் கொண்டு இரு'' என்று சொல்லிக் குதிரையைத் தட்டிக் கொடுத்தான் குடியானவன்.

டால்ஸ்டாய்

(லியோ டால்ஸ்டாய் (1828-1910) உலக இலக்கிய கர்த்தாக்களிடையே இமய மலையைப் போல் விளங்குபவர். மகாத்மாஜியால் குருநாதராகப் போற்றப் பட்ட குஷ்ய மகான். பிரபுக் குடும்பத்தில் பிறந்து, சொத்துக்களையெல்லாம் துறந்து எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்.)

■ இரண்டு பேர் பாவ விமோசனம் பெற ஒரு ஞானியிடம் யோசனை கேட்கப் போனார்கள். ஒருவன் தான் மிகப் பெரிய பாவச் செயலைச் செய்திருப்பதாகச் சொன்னான். மற்றவன், பெரிய பாவம் எதையும் தான் செய்ததில்லை என்று கூறினான்.


அவர்கள் செய்த பாவங்களை விவரமாகக் கூறும்படி சொன்னார் ஞானி.

முதலாமவன் சொன்னான் : ''என் நண்பன் ஒருவனை ஆத்திரத்தில் கொன்றுவிட்டேன். இப்போது என் மனச்சாட்சி என்னைத் துன்புறுத்துகிறது. அந்தப் பாவச் செயலை நினைத்து நினைத்து வேதனைப்படுகிறேன்.''

இவ்வாறு சொல்லும்போது அவனுக்கு அழுகை வந்து விட்டது.

இரண்டாமவன் சொன்னதாவது: "நான் சிறு பாவங்கள்தான் செய்திருக்கிறேன். அவை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவாறு அவ்வளவு முக்கியமானவையல்ல. அத்துடன் அவை இப்போது எனக்குஞாபகமில்லை."

ஞானி சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு, முதலாமவனைப் பார்த்து, "மகனே! நீ போய் உன்னால் சுமக்க முடிந்த அளவுக்கு ஒரு பெரிய பாறாங்கல்லைத் தூக்கிக்கொண்டு வா" என்றார்.



இரண்டாமவனைப் பார்த்து, "மகனே! நீ ஒரு கோணிப் பையை எடுத்துக் கொண்டு போய், அது கொள்ளும் அளவுக்குச் சிறு சிறு கூழாங் கற்களைக் கட்டிக் கொண்டு வா!" என்றார். இருவரும் அவ்வாறே செய்தனர்.

ஞானி இருவரையும் பார்த்து, "சரி. இனி நீங்கள் இருவரும் போய், இந்தக் கற்களை எந்த எந்த இடத்திலிருந்து எடுத்து வந்தீர்களோ, அங்கேயே கொண்டு போய்ப் போட்டுவிட்டு வாருங்கள்" என்றார்.

இருவரும் போனார்கள். முதலாமவன் தான் தூக்கி வந்த பெரிய பாறாங்கல்லை எடுத்த இடத்தில் போட்டு விட்டுத் திரும்பினான். இரண்டாமவன் கற்களைப் பொறுக்கிய இடங்களைக் கண்டுபிடிக்க இயலாமல் ஞானியிடமே திரும்பி வந்தான். வந்து தன் இயலாமையைத் தெரிவித்தான்.

ஞானி இருவரையும் பார்த்து, "மக்களே! பாவங்கள் இந்தக் கற்களைப் போன்றவையே. பெரிய பாவம் செய்தவனின் மனதை அந்தப் பாவம் இந்தப் பாறாங்கல்லைப் போலவே அழுத்தும். அவன் அதை உணர்ந்து வருந்தும் போது அந்தப் பாவத்தை மன்னித்துவிட முடியும். சிறு பாவங்களைச் செய்பவன் அவற்றை நினைத்துப் பார்க்கவும் முடியாமல், அவற்றை நினைத்து வருந்தவும் முடியாமல் இருப்பதால் அவன் எப்போதும் பாவியாகவே இருக்கிறான். அதனால் சிறு பாவங்களையும் பெரிய பாவத்தைப் போலவே கருத வேண்டும்" என்று கூறினார்.

<u>படித்துப் பாருங்கள்</u>

காரைக்குடி இந்து மதாபிமான சங்கப் பொன் விழா மலர்

'**கா**ரைக்குடி' என்னும் பேரினிலே 'கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்' என்னும் சொற்கள் ஒலிக்கின்றன எம்மனோர் காதினிலே. இனிய தமிழையும் இந்து சமயத்தையும் இரு கண்கள் போல வளர்த்து வருவதாலேயே காரைக்குடி புகழுக்குரியதாயிற்று. இத்திருப்பணியை ஐம்பது ஆண்டுகளாக இடைவிடாது ஆற்றி வருவது இந்து மதாபிமான சங்கம். பொன்னாளாகிய 9—9—67ந் தேதியன்று, சங்கத்தார் மலர் ஒன்று வெளியிட்டுள்ளார்கள்.

பொன்னாகிய நன்மலர் ஒன்று, நறுமணமும் பெற்றதன்ன, இப்பொன் விழா மலர், உவகையும் பூரிப்பும் பெறும் வண்ணம் மாட்சிமை பெற்றுக் காட்சி அளிக்கிறது.

ஆண்டவன் அருள் பெற்ற அருளாளர்கள் துதித்துப் பாடிய ஊர்களைப் பாடல் பெற்ற ஸ்தலங்கள் என்பர். இந்து மதாபிமான சங்கமும் பாடல் பெற்ற சங்கம் எனலாம். கவி பாரதியார், காந்தியக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, கவிமணி ஆகிய பதினைந்து கவிஞர்கள் சங்கத்துக்கு வாழ்த்துப் பாமாலை சூட்டியுள்ளார்கள்; உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அப்பாக்கள் இப் பொன்மலருக்கு மங்கா மணத்தைப் பரப்புகின்றன.

தமிழகத்தில் தலைசான்ற இலக்கிய வல்லுனர்கள் நாம் போற்றி வரும் இருபது தகைசான்ற தலைவர்களைப் பற்றி அரிய கட்டுரைகளை அமிழ்தென வழங்கி உள்ளனர்; அவை 'நவில்தொறும்' நூல்நயம் என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாக அமைந்துள்ளன. வள்ளுவர், காந்தி அடிகளார் போன்ற உலகப் பெரியோர்களையும், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், ஞானியார், ஈசானிய சிவாச்சாரியார் போன்ற சமயக் குரவர்களையும், கவிமணி, ரசிக மணி, பண்டிதமணி ஆகிய மும்மணிகளையும் சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய அய்யர் (வ.வே.சு.) ஆகிய மூன்று மணியர்களையும், வ. வே. சு. அய்யர், திரு. வி. க., கோவிந்தராஜய்யங்கார் என்ற மூன்று தமிழ் மேதைகளையும் பற்றிய இலக்கியச் சுவை நனி சொட்டச் சொட்டத் தீட்டப்பெற்ற சொற் சித்திரங்களை மலரில் படித்து மகிழலாம்.

நாமக்கல் கவிஞர் கம்பரையும் வான்மீகரையும் தாம் ஒப்பிட்டுப் பாடுதற்கேற்பட்ட வரலாறு சுவை மிக உடையது. இ. ஆ. பெ. அவர்களின் 'அருத சங்கிலி' நிகழ்ச்சி உள்ளத்தைத் தொடுவது.

மகாத்மா காந்தி, பாரதியார், இராஜாஜி, இன்னும் செட்டிநாட்டுப் பெரியோர்களின் நிழற்படங்கள் பலவும் இம்மலரை அலங்கரிக்கின்றன. பாரதியார் சங்கத்தைப் பற்றிப் பாடிய பாடல்களும், வேறு ஒரு கடிதமும் அவர் கையெழுத்துக்களிலேயே தரப்பட்டுள்ளன. முத்து முத்தான எழுத்துக்கள்; சக்தி வாய்ந்த எழுத்துக்கள்.

இப் பொன் மலர் தமிழர் யாவரும் படித்துத் தத்தம் புத்தக அலமாரியில் நிரந்தரமாக வைத்திருக்க வேண்டிய நன் மலராகும். எப்படி இப்படி ஒரு மலரைப் படைக்க முடிந்தது என்பது வியப்புக்குரியதே.

காந்தி பக்தர் திரு ராய. சொ. அவர்களின் ஆன்மிக சக்தியாலேதான் இத்துணைச் சிறப்புற அழகுற, பண்புற, பயனுற இம்மலர் அமைந்துள்ளது என்பது என் அனுமானம். வாழ்க ராய, சொ. அவர்கள்; வாழ்க இந்து மதாபிமான சங்கம். **—எல். கிருஷ்ணசாமி பாரதி**

இரும்புச் சங்கிலி லேசாக ஒலிக்கக் காலால் உந்தி உந்தி ஊஞ்சலாடிக்கொண்டிருந்த யசோதை எட்டிப் பார்த்தாள்.

வாசலில் ஓர் இளைஞனின் நிழல் தெரிந்தது. அவனது தேகத்தின் தோற்றம் அவளைத் திடுக்கிட வைத்தது. அவன் உள்ளே வந்தான். அசைந்து ஆடிவரும் அவனது கரங்கள் வேறு எந்தக் கரங்களையோ அவளுக்கு நினைவூட்டின. அழகிய நீண்ட விரல்கள், வேறு எந்த விரல்களையோ ஞாபகப்படுத்தின.

தன் மெய் தடவிய கைகளையும், மங்கலச் சரட்டால் முடிச்சிட்ட விரல்களையும் மனத்துள் கொண்டு வரும் இந்த மனிதன் யார்? சை! இளமை மாறத் தொடங்கிவிட்ட இந்த வயதிலுமா அந்த உணர்ச்சித் தவிப்பு?

சோகப் பெருமூச்சை வெளிப்படச் செய்து யசோதையை ஊஞ்சல் சங்கிலியில் சற்றே சாய்த்தன, அவளது அடிமனத்தில் அழுத்தி வைக்கப்பட்ட இன்பக் கனவுகள்.

ஊஞ்சலாட்டம் நின்று போய் விட்டது. உள்ளம் களைப்புற, உடல் சோர ஊஞ்சல் சங்கிலியில் சாய்ந்திருந்த யசோதையின் விழியின் இமை விளிம்பில் நீர்கோத்து நிற்க, இமை விதழ் ரோமங்கள் சரமாயின. இமை இரண்டையும் இறுக்கி மூடிக்கொண்டாலும், இதயம் திறந்து கொண்டது.

பல ஆண்டுகளுக்கு முன்னால் சிறுமியாக இருந்த யசோதை இப்படித்தான் ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக்கொண்டிருந்தாள். அப்பொழுதும் இப்படித்தான் ஒருவன் அவள் தந்தையைத் தேடி வந்தான். சட்டென்று அந்த நினைவு எழவே, விருட்டென்று எழுந்தாள் யசோதை. யாருடைய தோற்றம் அவளுடைய எண்ணத்தில் இப்போது பிரதிபலித்துக் கொண்டு அவளை அணு அணுவாகச் சித்திரவதை செய்கிறதோ, அதே தோற்றம் அல்லவா எதிரே! ஏறக் குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் அழகிளமைத் தோற்றமும் ஆண்மை தந்த ஏற்றமும் கொண்டு அவளுடைய தந்தை உடன் வர, இதே நிலைப்படியைத் தாண்டி வந்தானே, அவனா இவன்? சே! விழித்துக்கொண்டே என்ன கனவு!

''அம்மா...'' நிலைப் படியைத் தாண்டி வந்து, நல்லிளமைத் தோற்றம் கொண்ட அவன் நெடுஞ்சாண் கிடையாக யசோதையின் இரு பாதங்களுக்கும் முன்னால் விழுந்து இரண்டு கைகளையும் கூப்பியவண்ணம் கிடந்தான். அவள் அப்பால் விலகிக் கொண்டாள். ''அம்மா...'' என்று அவன் அழைத்த அந்தக் குரல் மட்டும் அவளுடைய இதயத்தில் அமுதமாய்ப் பாய்ந்தது. அந்த அன்பு மொழிச் சொல்லுக்கு வித்தான தாய்மைக் கனிவில் நிறைவு பெற்றவளல்ல அவள்.

உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக் கிடையே தன்னைச் சமாளித்துக் கொள்ள முயன்றாள் யசோதை.

அந்த இளைஞன் இரு கைகளாலும் ஒரு கடிதத்தை அவளுக்கு முன் சமர்ப்பித்தான். யசோதை அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டாள். ஏன் அவள் கையிலுள்ள கடிதம் அப்படிச் சக்கரமாகச் சுழல்கிறது! உறையின் மீதிருந்த கையெழுத்து, வீசுகின்ற பெரும் புயற் காற்றாய் அவள் உள்ளத்தை ஒரு விநாடிப் பொழுது சாடியது. வேகமாக உறையைக் கிழித்து வெளியே எடுத்தாள் கடிதத்தை.

''எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய இசை ஞான குருவே!

தங்களுடைய தந்தையும் தாங்களும் தெய்விக இசையமுத ஞானத்தை எனக்குப் பயிற்றுவித்தீர்கள். இசை யறிவை எனக்கு எந்த இலட்சிய நோக்கத்தோடு நீங்கள் இருவரும் அளித்தீர்களோ, அந்த இலட்சிய வெற்றியை எனது இசைத் திறத்தால் ஈட்டி வைக்காதது மட்டுமின்றி, என்னிடம் ஆழ்ந்த நம்பிக்கையோடு ஒப்படைக்கப்பட்ட இலட்சியத்தின் தாய்மைக்கு எதிராகவே என் இசை ஞானம் செயல்பட்டு எனக்கும் உங்களுக்கும் இடைவெளியை ஏற்படுத்தி விட்டது. நீங்கள் என்னிடம் நெஞ்சார வைத்திருந்த நன்னம்பிக்கைக்கு நேர்மாறான நடைமுறையில் ஈடுபட்டு நான் உங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டேன். அதற்குப் பரிகார மாகத் தான் இந்தக் கடிதம் கொண்டு வரும் இளைஞனை அனுப்பி வைத்திருக்கிறேன் தங்களிடம். இல்லை, இல்லை. இவனைத் தங்களுக்கே அளித்திருக்கிறேன். இவன் என் மைந்தன். இசை ஞானச் செல்வத்தை அடைவதற்குரிய அருகதை உள்ளவன். தந்தை செய்யாத் தவறிய தெய்விக இசை வாழ்க்கைத் தொண்டைத் தனயன் செய்வான். இது சத்தியம்! இவனை இசை வாணனாக உருவாக்கத் தவறிவிடாதீர்கள், என்மீது இருக்கும் இயல்பான ஆத்திரத்தால். இவன் இனி தன்னுடைய பெற்றோர்களுக்குச் சொந்தமில்லை. இவனுக்கு யாவும் தாங்களே.

தங்களன்புள்ள
சீடன்,
திருஞான
சம்பந்தம்''

நான் குருவாம், அவர் சீடராம்! இவ்வளவுதானா எங்களுக்குள்ள உறவு? 'அடிபாவி! இத்தனை

பிள்ளை தானம்

சர்வோதயன்



வயதிலுமா அவர் கட்டிக் காட்டாத உறவை எண்ணித் தவிக்கிறாய்? வெட்கமில்லே?' இலேசாகத்தான் முணு முணுத்தாள் யசோதை. அந்த உறவையும், அதன் பிறப்பையும் முறிவையும் அவள் எப்படி மறக்க இயலும்?

யசோதை இசைஞானக் குடியிலே பிறந்தவள். தெய்வ அருளைத் தேடி அலைவதற்குச் சாதனமாக இசையை எண்ணிய தியாகய்யர், தமக்கு அளவற்ற பொருளை அளித்து ஆதரிக்க ஆசைப்பட்ட தஞ்சை அரசனுடைய வேண்டுகோளை ஏற்க மறுத்து அவனைப் பாட இசையாத இசை ஞானத் தூய்மையை எண்ணி எண்ணி உருகுவார் ஈசுவரமூர்த்தி. இறைவனை இதயம்நினைக்கத் தூண்டும் கருத்துக்களைத்தான் தமது இசையினிமைக் குரலிலே குழைத்துத் தருவார். எப்போதும் இசையனுபவத்திலேயே ஆழ்ந்திருக்கும் இயல்புடையவர் அவர்.

பல ஆண்டுகள் குழந்தையே பிறக்கவில்லை ஈசுவரமூர்த்தி தம்பதிக்கு. எண்ணி வேண்டாத இறைவனில்லை. ஆடித் தூய்மையாகாத தீர்த்தமில்லை. அப்புறம்தான் ஆண்டவன் அவர்களுக்கு அருள் பாலித்தான். யசோதை பிறந்தாள். அவளுக்கு இசை ஞானம் ஊட்டினார் ஈசுவரமூர்த்தி. தந்தை தந்த இசைப் புலமையாலும், தெய்வம் தந்த இனிமைக் குரலாலும் பதினைந்து வயதுக்குள்ளேயே இசைச் செல்வியாகி விட்டாள் யசோதை.

அந்த வயதில் ஒரு நாள் ஊஞ்சல் பலகையின் ஓரமாக உட்கார்ந்து அவள் ஆடிக்கொண்டிருந்தபோது, ''அம்மா யசோதை, இப்படி வாம்மா. இந்தத் தம்பியைப் பற்றி அவசியம் நீ அறிந்து கொள்ள வேண்டும்'' என்று ஈசுவரமூர்த்தி தமது மகளை அழைத்ததும் அடிமேல் அடியெடுத்து வைத்து அவரிடம் நடந்து வந்த யசோதையை அந்த இளைஞன் இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்ததும்...

''யசோதை, இந்தத் தம்பி ஜமீன்தார் பரம்பரையைச் சேர்ந்தவர்'' என்று தந்தை சொன்னதைக் கேட்ட மகள் அந்த இளைஞனை ஏறிட்டு நோக்கியதும் ''ஆனால் இப்போது இந்தத் தம்பி, எஞ்சியிருக்கும் அந்தப் பெயரளவு ஜமீன்தார் பரம்பரை அந்தஸ்தையும் ஆனந்த சுக வாழ்வையும் இழந்துவிட்டவர் அம்மா. இவரிடம் நாம் நன்றியுணர்வோடு நடந்து கொள்ளக் கடமைப்பட்டவர்கள். இசைவாணர்களை ஆதரித்து அவர்களுக்கு அள்ளி அள்ளி அளித்த கரங்களிலே தவழ்ந்தவர் இவர். ஆம். இவருடைய தாத்தாவும் தந்தையும் இசைப் பிரியர்களாக இருந்தனர். காலவசத்தால் இந்தத் தம்பியை ஏழையாக்கிவிட்டு மறைந்து விட்டனர். அவர்களுக்கு ஒரே வாரிசான இவர், இசைக் கலைஞர் ஒருவராலேயே ஆதரிக்கப்பட்டு இப்போது நம்மிடம் அனுப்பப்பட்டுள்ளார்.

''இசைப் பயிற்சியை ஓரளவு பெற்றிருக்கும் இந்தத் தம்பி, இன்னும் அந்த ஞான ஆற்றிலே ஆழ்ந்து மூழ்கிட அனுப்பப் பட்டுள்ளார் நம்மிடம். இவரது இசைப் புலமையை இன்னும் அதிகமாக்கும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டு விட்டது. ஏன், உனக்கும் கூடத்தான்....'' என்றார் ஈசுவரமூர்த்தி.

அருமைத் தந்தையின் பேச்சைக் கேட்டு அடக்கத்தோடு அவரை ஏறிட்டுப் பார்த்தாள் யசோதை.

''ஆம், அம்மா! இசையாசிரியர் பொறுப்பேற்கும் அந்தஸ்தும் ஆற்றலும் உன்னிடம் இருக்கிறது. உருவமும் வயதும் ஒருபோதும் புலமையை வரம்பிட்டுக் காட்டும் சக்திகளாகிவிட முடியாது. ம்... சொல்ல மறந்து விட்டேனே. இந்தத் தம்பியின் பெயர் இருஞான சம்பந்தம். தம்பி, இங்கே நீ



குருகுலத்தில் வாசம் செய்வது போல் மட்டும் இருக்க வேண்டியதில்லை. குடும்ப வாசம் செய்வது போலும் இருக்கலாம்....'' என்று அன்போடு சொன்னார் சுகவரமூர்த்தி.

தித்திக்கும் தேன் குரல் பெற்ற திருஞான சம்பந்தம், ஞானாசிரியராகத் தன்னால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுகவரமூர்த்தியுடைய இசையுணர்வுகளின் இலட்சிய பிரதிபலிப்பாகவும் அதன் உள்ளீடான உயிரியக்கமாகவும் இருக்கும் யசோதைக்குச் சமமாக இசையறிவுச் செல்வந்தனாகிக் கொண்டே வந்தான். சுகவரமூர்த்தி மட்டுமன்று, யசோதையுங்கூட அவனுக்கு இசை குருவாகி நின்றாள்.

தன்னிலும் சிறியவள், ஆனால் தன்னிலும் இன்னிசைப் புலமையில் பெரியவள் என்ற உணர்வில் யசோதையிடம் அடக்கமும், பணிவும் காட்டி, மதிப்பையும் மரியாதையையும் வெளிப்படுத்தித் திருஞானசம்பந்தம் தன்னை மாணவனாக்கிக் கொண்டான். எனினும், தன்னிலும் பெரியவன், தன்னிலும் உயர்ந்த அந்தஸ்தில் இருந்து சரிந்த ஜமீன் பரம்பரையைச் சேர்ந்த ஆண் மகன் என்ற உணர்வில், இயல்பாகவே இளம் பெண்ணுக்கு இருக்கும் அச்சம் கலந்த நாணப் படபடப்போடு அவனைத் தன் முன்னே அமர்த்தவும், அவனுக்கு முன்னே தான் அவனுக்கிட்ட ஆசனத்தைக் காட்டிலும் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து இசைப் புனலைத் திறக்கவும் தடுமாறி வெட்கத் திணறலால் உடல் வியர்த்துப் போவாள் யசோதை. நிமிர்ந்த அவனது ஆணுருவக் கம்பீரத் தோற்றத்துக்கு எதிரே, நெகிழ்ந்த அவளது பெண்ணுருவ அமைதித் தோற்றம் பார்ப்பதற்குப் பரவசமாக இருக்கும். இசைவாணியும் இசை மாணவனுமாக இருவரும் தோற்றம் காட்டும் அழகையும் அருமையையும் சுகவரமூர்த்தி அனுபவித்து அனுபவித்து ஆனந்தித்தார். அதோடு, திருஞானசம்பந்தத்தைத் தகுதிமிக்க இசைக் கலைஞனாகத் திகழ வைத்துத் தமக்கு மருமகனாகவும் ஆக்கிக் கொண்டார். நிறைந்த இதயத்தோடு இவ்வுலகை விட்டு ஒரு நாள் மறைந்து விட்டார்.

இல்லற வாழ்க்கையும் இசை வாழ்க்கையும் இணைய இன்ப வாழ்க்கை நடத்தினர் யசோதையும் திருஞானசம்பந்தமும். இசைக் கலைச் செல்வனாகத் திருஞானசம்பந்தம் எங்கும் புகழ்பெற யசோதையின் ஆலோசனையும், ஆக்க வழி வகைகளும் ஆர்வமிக்க உழைப்பும் உதவின. இசையன்பர்களின் இதயங்களை அள்ளுகின்ற கலைஞனானான் அவன். எங்கும் அவனுடைய இன்னிசைக் குரல் வளம் ரீங்காரமிட்டது. இசையொலியை இனிக்க இனிக்க எழுப்பும் அவனுடைய நா இறை நாமங்களையும் இறைத் தத்துவங்களையும் பாடியது.

சம்பிரதாயக் கலைஞரான சுகவரமூர்த்தியும் யசோதையும் உருவாக்கிய கலைஞன் வேறு எப்படி இருக்க முடியும்?

திருஞான சம்பந்தத்தின் தெய்விக கான மழையில் நனையும் உள்ளங்கள் எத்தனையோ இருந்தாலும், அவற்றுள் ஓர் உள்ளம் அவனது இசை நிகழ்ச்சி எங்கு நடந்தாலும் அங்கே செல்லத் துடித்துக் கொண்டிருந்தது. அவனது இசையமுத வெள்ளத்தில் ஆழ்ந்து போன அந்த உள்ளம் கரையேற முடியாமல் அங்கே தெப்பமாகவே உருவாகி மிதக்க ஆரம்பித்துவிட்டது.

அந்த உள்ளம் இளம் பருவக் கன்னியொருத்திக்குச் சொந்தம். அவள் புகழ் மிக்க திரைப்பட முதலாளி ஒருவரின் அருமை மகள் அமுதவல்லி. அவள் தன்னுடைய இசை நிகழ்ச்சிகளின் போது எப்போதும் முன் வரிசையில் அமர்ந்திருப்பதைப் பார்த்துப் பார்த்து அனுபவப்பட்டதால் அவனுக்கு அவளுடைய நினைவு பழக்கமாகவே இருந்தது. அவன் இன்னிசை நிகழ்த்த மேடையேறி அமர்ந்ததும் அரங்கத்தைக் கம்பீரமாக நோக்குவான். அப்போது அவளுடைய நினைப்பு வரும்.

திருஞான சம்பந்தத்தின் தேவகான நிகழ்ச்சிக்குத் தன்னுடைய வீட்டு விசேஷம் ஒன்றின் போது ஏற்பாடு செய்ததன் மூலம் அமுதவல்லி மட்டுமன்று, அவளுடைய குடும்பமே அவனுடைய நட்புறவை விரும்பி வரவேற்றுச் சிறப்பித்தது. அவளுடைய தந்தைக்கு அவனிடம் அளவற்ற பற்றும் மதிப்பும் ஏற்பட்டு விட்டன. அவனைத் திரைப்படத் துறை இசையுலகுக்கு இழுக்க அவர் முயன்றார்.

அமுதவல்லியும் அவளுடைய தந்தையும் திருஞானசம்பந்தத்தைத் திரைப்பட இசையுலகில் ஈடுபடுத்த எவ்வளவோ முயன்றும், முதலில் அவன் அசைந்து கொடுக்கவில்லை. எனினும், அமுதவல்லியின் குடும்பத்தினர் அனுபவிக்கும் ஆடம்பர வாழ்வையும், அளவற்ற சுகபோகத்தையும், அவர்கள் துய்க்கும் இன்ப வாழ்வையும் கண்ட அவனது நெஞ்சில் பாரம்பரிய ஜமீன்தார் வாழ்வின் போக்கியங்கள் அலையாடின. நாளாவட்டத்தில் அந்த அலைகள் அவனைத் தம்முள்ளே இழுத்துப் புதைத்துக் கொண்டு விட்டன.

''இலட்சியங்கள் என்ன ஆவது?''—திருஞான சம்பந்தத்தின் போக்கைக் கண்ணுற்ற யசோதை கேட்டாள்.

''இலட்சியம் என்பது அனுபவிக்க வேண்டிய இன்பங்களைச் சூறையாடும் சக்தியாக இருக்கக் கூடாது, யசோதை.''

''அனுபவிக்கும் இன்பங்கள் ஆத்மாவைத் திருப்தி செய்ய வேண்டுமேயன்றி, அலையும் உள்ளத்தையோ, அழியும் உடலையோ சுகப்படுத்துவதாக மட்டும் இருக்கக் கூடாதே.''

''திரையுலக இசையிலே மட்டும் கவனம் செலுத்துவேன் என்று கூறவில்லையே நான். கர்நாடக இசையையும் கடமை உணர்வோடு காத்து வளர்ப்பேன், யசோதை.''

''ஒரு பசுமாட்டை இரண்டு முளையடித்துக் கட்டுவார்களா யாராவது? நதி நீர் நீள் கடலை நோக்கி ஓடுவதுதான் நியதியும் இயற்கையுமாக இருக்கிறது. கடல், நதியை நோக்கி வருமா? தங்கப்புதையலைத் தோண்டி எடுக்கத் தகுந்த ஆயுதங்களைத் தங்களுக்குத் தந்தால், அந்த ஆயுதங்களால் சவக் குழியைத் தோண்ட ஆசைப்படுகிறீர்களே!''

''இசை எங்கு வளர்ந்தால் என்ன ?''

''நோக்கம், இலட்சியம் என்ன ஆவது?''

''நோக்கம் இலட்சியம் எல்லாம் நமக்கு நாமே பூட்டிக் கொள்ளும் விலங்குகள்.'' ஆத்திரத்தோடு இரைந்தான் திருஞான சம்பந்தம்.

யசோதையின் இதய மாடத்து இலட்சிய தீபத்தை நோக்கி அடித்தது பெரும் புயற் காற்று. அமுதைப் புனலும் அத்தீபத்தை அணைக்கவோ என்னவோ பெருக்கெடுத்தது.

அவர்களுக்கிடையே இல்லற இணைப்பு அதோடு நைந்து இற்றுப் போயிற்று. இருவரும் தனித்தனியே வாழ்க்கை நடத்த ஆரம்பித்தனர். திருஞானசம்பந்தம் தன் ஒழுங்கற்ற போக்கைத் திருத்திக் கொள்ளா விட்டாலும், யசோதையின் இணைப்பையும் அணைப்பையும் அன்பையும் சிரிப்பையும் இழந்து துடிதுடிக்கத்தான் செய்தான்.

அடுத்துச் சில மாதங்களுக்குள் அமுதவல்லியைத் திருஞானசம்பந்தம் மணந்து கொண்ட செய்தி யசோதையின் செவிகளில் காற்றோடு காற்றாக வந்து விழுந்த போது அவளால் அமைதியாகக் கண்ணீர் சிந்தத்தான் முடிந்தது.

வழிவழி வந்த இசை பற்றி அவள் பேசினாள்; வழிவழி வந்த ஜமீன் வாழ்வு பற்றி அவன் பேசினான். அவனது வழிதொடர இதோ வந்துவிட்டது வாரிசு ! அவளது வழிக்கு வாரிசு? தனது ஜமீன் வாரிசையே இசை வாரிசாக்குவதாகத் திருஞானசம்பந்தம் அவளுக்கு எழுதியிருக்கிறான்!

''அம்மா....!'' என்றான் இளைஞன். யசோதையின் நீண்ட சிந்தனை கலைந்தது.

''உட்காரப்பா.''

யசோதையும் அவனுக்கெதிரே அமர்ந்தாள். ''உன்னுடைய பெயர் என்ன தம்பி?''

''ஈசுவர மூர்த்தி....!''

ஒரு கணம் பிரமித்து விட்டாள் யசோதை. தன் தந்தையின் பெயரல்லவா? 'அவர்' நன்றி உணர்ச்சியோடு நடந்து கொண்டிருக்கிறாரா? இதய மகிழ்ச்சியில் இருவிழிகளிலும் ஈரம் கசிந்தது. ''உன்னை உன்னுடைய தந்தை என்னிடம் ஏன் அனுப்பியிருக்கிறார் என்ற விவரத்தை அறிவாயல்லவா நீ?''

''நான் இசைஞான மேதையாகி, அந்த ஞானப் பேராற்றலையே என்னிடமிருந்து தோன்றவிருக்கும் சந்ததியின் வாழ்க்கை நோக்கத்துக்கு வித்தாக்குமாறு அவர் எனக்குச் சிறு வயது முதலே ஆணை பிறப்பித்திருக்கிறார். உங்களுடைய பிள்ளையைப் போல் உங்களுக்கு அடங்கி நடந்து, உங்கள் விருப்பங்களை உறுதி தளராமல் நிறைவேற்றும் வல்லமை பெற்று வரவேண்டுமென்று அறிவுரையும் ஆசியுரையும் சொல்லியனுப்பியுள்ளார் தந்தை.''

யசோதை ஏமாற்ற மிகுதியால் சோர்வுற்றாள். யசோதை தனது தந்தையின் முதல் மனைவி என்பது இளைஞன் ஈசுவரமூர்த்திக்குத் தெரியாது என்பதை அவள் ஒருவாறு புரிந்துகொண்டாள். அமுத இசை ஞானத்தைத் தனக்களிக்கும் குரு — அன்னைக்குச் சமமாக மதிக்கத் தக்கவர் என்ற அளவில் தான் அவனிடத்தில் அவன் ஈடுபாடு கொண்டிருந்தான். ஆனால் யசோதைக்கு அவனிடத்தில் இருந்த ஈடுபாடோ மாணவன் என்ற



இரண்டாம் உலக மகாயுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். நூல் கட்டுப்பாடு கடுமையாய் உள்ள நேரம் அது.

தமிழ் நாட்டில் ஒரு நகரில் ஜவுளிக் கட்டுப்பாடு அதிகாரி ஒருவரிடம் நெசவாளர்கள் '80 ஆம் நம்பர் நூல் கிடைக்காததால் எங்கள் தொழில் பாதிக்கப்படுகிறது. ஆகவே எங்களுக்கு 80ஆம் நெம்பர் நூல் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்று முறையிட்டுக் கொண்டார்களாம்.

''ஏன் 80 நம்பர் நூல் கிடைக்காவிட்டால் என்ன? இரண்டு 40ம் நெம்பர் நூல்களைச் சேர்த்து நெய்யுங்களேன்'' என்றாராம் உடனே அந்த அதிகாரி.

— குத்தாலம் வி. சம்பந்தன்

அளவில் அல்ல. மகன் என்ற அளவில்தான். அவனைத் தனது தாய்மைக் கவனிப்பிலேயே வைத்துச் சீராட்ட ஆரம்பித்தாள் அவள்.

ஈசுவரமூர்த்தியிடம் பற்றும் பாசமும் வைத்துத் தன்னுடைய நெஞ்சின் தவிப்புக்கும் தாகத்துக்கும் மாற்று கண்டு வரும் அனுபவச் சுவைப்பில் ஆழ்ந்துவிட்ட யசோதைக்குச் சீடனுடைய சிறு துன்பமும் பூதக்கண்ணாடிக்குப் பின்னே தெரியும் காட்சியாகியது.

அமுதவல்லியின் தந்தை அவளுக்காகச் சேர்த்து வைத்திருந்த அளவற்ற செல்வத்துக்கும் திருஞானசம்பந்தம் தனது வாழ்வில் திரட்டிச் சேர்த்த திரண்ட செல்வத்துக்கும் ஏகவாரிசாக இருப்பவன் ஈசுவரமூர்த்திதான்.

மணமிக்க மலர்த்தோட்டத்தின் மத்தியில் அமைந்த மாளிகை. அதனுள்ளே அழகிய ஓவியங்கள், அலங்காரக் கலைப் பொருள்கள். வழுவழுப்பான தரையை மறைத்த வண்ண வண்ண விரிப்புக்கள். வசீகரக் கலை வேலைப்பாடுகள் உள்ள சோபாக்கள், சிறு சிறு மேஜைகள், விதம் விதமான வடிவமைப்பு கொண்ட விளக்குகள், வண்ணப் பூக்கள் நிறைந்த படுதாக்கள். உத்தரவு வருமா என்று விழித்தபடியிருக்கும் வேலையாட்கள். உல்லாசச் சவாரிக்காக விதம் விதமான கார்கள். அறுசுவை உண்டி. வந்து வாழ்த்துவோர், வணங்கித் துதிப்போர் பலர். இந்தச் சூழலிலே வாழ்ந்த இளைஞன் ஈசுவரமூர்த்திக்கு, யசோதையின் ஓடு வேய்ந்த பழைய காலத்து வீட்டிலே எளிமையான உணவை உண்டு வாழ்வதென்பது எளிதில் சாத்தியமாகக் கூடியதா?

வாழ்வுநிலை மாறிய துன்பத்தை யசோதையிடம் மறைக்க அவன் முயற்சி செய்தாலும்



உஷ்... இருமலை நிறுத்தும் சக்திவாய்ந்த கஃப் மிக்சர் வேலை செய்கிறது

பார்முலா 44 இருமலை விரைவாக நிறுத்துகிறது... சளிக்கட்டை அகற்றுகிறது. அதன் துணைகொண்டு இரவு முழுவதும் அயர்ந்து தூங்குங்கள்.

விரைந்து செயல் புரியும் சக்தி வாய்ந்த பார்முலா 44, இருமலை அது ஆரம்பமாகும் இருமல் கட்டுப்பாடுக் கேந்திரத்திலேயே தடுத்து நிறுத்துகிறது. முதல் டோஸ்* சாப்பிட்டதும், இந்த கஃப் மிக்சர் நீடித்த இதத்தை அளிக்கவே தயாரிக்கப்பட்டதென்று நீங்கள் அறிவீர்கள். முக்கியமாக ஜலதோஷம், ஃப்ளூ மற்றும் ப்ராங்கைடிஸினால் உண்டாகும் இருமலை அடக்க பார்முலா 44 மிகச்சிறந்தது.

* விரைவிலே நிச்சயமான நிவாரணம் பெற சரியான டோஸை பின்பற்றுங்கள்



விக்ஸ்
பார்முலா 44

உலகிலே மிக அதிகமாக விற்பனையாகும் கஃப் மிக்சர்

அவளை மகனாக என்னும் அவனுக்கு அது தெரியாமல் போய்விடுமா? ஏக்கத்தையெல்லாம் அவள் உள்ளடக்கினாலும், அவை அவளை அணு அணுவாக அரிப்பதை அறிந்தான். அவளை அவனது இல்லத்திலேயே சேர்க்க முடிவுக்கு வந்தான்.

ப.Iசொன்ன சகவரமூர்த்தியோடு அவனுடைய மாளிகைக்குள் அடியெடுத்து வைத்ததும், அங்கே ஏதோ ஒரு பேரிழப்பை உணர்த்தும் அமைதி குடி கொண்டிருப்பதைக் கண்டனர். கலகலப்பும் களிப்பார்வமும் கொண்ட குதூகல மனிதர்கள் எப்போதும் கூடியிருக்கும் அந்த மாளிகைக்குள் ஆரவமே இல்லாதது சகவரமூர்த்திக்கு ஆச்சரியத்தோடு அதிர்ச்சியாகவும் இருந்தது.

''யார், சகவரமூர்த்தியா?'' என்று பாசத் துடிப்போடு படியிறங்கி வந்த திருஞானசம்பந்தம் திடுக்கிட்டார். தடுமாற்றம் தந்த நிலையைச் சமாளித்து நின்றுகொண்டார். சகவரமூர்த்திக்குப் பின்னால் யார்? யசோதை அல்லவா? சேலைத் தலைப்பால் தன் முதுகுப்புறத்தை நன்றாக மூடி நின்று அவள் தலைகுனிந்திருந்தாள். குங்குமத் திலகமும், கூந்தல் நிறைய மலரும் கொண்டு மங்கலச் செல்வியாகக் காட்சியளித்தாள் அவள்.

திருஞானசம்பந்தம் தம் மனத்தில் எழுந்த உணர்வுகளையெல்லாம் சட்டென்று மாற்றிக் கொண்டார்.

''சகவரமூர்த்தி, இவ்வளவு குறுகிய காலத்தில் இசைப் பயிற்சியை முடித்துக் கொண்டாயா? ஆச்சரியமாக இருக்கிறதே. இசை ஞானாசிரியர் என்ன சாதாரணமானவரா?'' மெதுவாக மாடிப்படியிறங்கியவாறே பேசினார் திருஞானசம்பந்தம். இடரென்று தன்னை ஏறிட்டு நோக்கிய யசோதையின் கண்களைச் சந்திக்க முடியாமல் தம் தலையைத் தாழ்த்திக் கொண்டார் அவர்.

''இசைப் பயிற்சி இன்னும் முடியவில்லை, அப்பா. இவர்தான் அதற்குள் இங்கே அழைத்து வந்து விட்டார்.''

''ஏன் அப்படி? இசைப் பயிற்சி முடிவதற்கு முன்னாலோ, என்னுடைய அழைப்பு வருவதற்கு முன்னாலோ இங்கு நீ வரக் கூடாது என்று சொல்லித்தானே அனுப்பினேன் உன்னை?''

''நான் என்ன செய்வேன்? என்னை அழைத்து வந்தது இவர்தானே அப்பா?''

''ஆம், இவனை அழைத்து வந்தது நான் தான். இவனுக்கு இசை குரு என்ற நிலையில் இங்கு நான் வரவில்லை. இவனுடைய தாய் என்ற உணர்வில்தான் இவனை இங்கு அழைத்துவரவேண்டியவளாகி விட்டேன்.''

''என்ன! இவனுக்கு நீங்கள் தாயா?''— திருஞானசம்பந்தத்தின் குரல் கரகரத்தது. கண்களில் நீர் மல்கியது. சிறிது நேரம் பேசவொண்ணாமல் நின்றார். பிறகு, ''ஆம், இவனுக்கு நீங்கள் தாய்தான். இனி இவனுக்கு நீங்களேதான் தாய்'' என உணர்ச்சி வயமாகி மொழிந்தார் திருஞானசம்பந்தம்.

அந்த வீட்டைச் சூழ்ந்திருந்த சூனியத்தின் பொருள் அப்போதுதான் சகவரமூர்த்திக்குப் புரிந்தது. தன்னைப் பெற்ற தாயை நினைந்து அப்படியே அமர்ந்து விட்டான்.

யசோதையின் கண்களும் குளமாயின. திருஞானசம்பந்தத்தைக் கேட்டாள்:

''தாய் மறைந்த செய்தியையும் தனயனுக்குத் தெரிவிக்காமல் தவறு செய்துவிட்டீர்களே! அந்தத் தாய் மனம் எவ்வளவோ துடித்திருக்குமே!''

''துடிக்கவேயில்லை, யசோதை. உன்னிடமிருந்து என்னை எடுத்துக் கொண்ட அவள், அதற்குப் பரிகாரமாக தன்னிடமிருந்து அவனை உனக்களிக்க முடிவு செய்ததன் பேரில்தான் நாங்கள் அவனை உன்னிடம் அனுப்பினோம். அந்தத் தூய முடிவு மாறக் கூடாது என்றே அவள் வாழ்வு முடிந்தது போலும்! அவனது இசைப் பயிற்சி வாழ்வை அன்னையின் பிரிவு எங்கே தடுத்துவிடுமோ என்பதால்தான் அவன் போனபின்னும் நான் விஷயத்தைத் தெரிவிக்க வில்லை. அதோடு, அமுதவல்லியை இழந்த நிலையில் சகவரமூர்த்தியை மீண்டும் பார்த்துவிட்டால் அவனை என்னுடனேயே வைத்துக் கொள்ளும் ஆவேசம் எனக்கு வந்துவிடுமோ என்று அஞ்சியும் அப்படி நடந்துகொண்டு விட்டேன். யசோதை, எனக்கு இசை வாழ்வளித்த உனது இதய வேட்கையை அவமதித்தேன். எனது மனச்சாட்சியே எனக்களித்த தண்டனையாகத்தான் அவனை உனக்கு அளிக்க முற்பட்டேன்.''

திருஞானசம்பந்தம், அமுதவல்லி இவர்களில் யாருடைய தியாகம் பெரிதென்று யசோதையால் முடிவு காண முடியவில்லை. கடைசியில் சொன்னாள்:

''நான் அநுபவித்து வந்த இன்பப் பெரு வாழ்வைத் துறந்து, என்னோடு, எனக்கிருக்கும் எளிய வாழ்வோடு அவனால் கலக்க முடியவில்லை. அது அவனுடைய தவறுமில்லை. எனவே அவன் விரும்பும் சூழ்நிலையிலிருந்தே அவனுக்கு இசைப் பயிற்சிதரலாமென்று தான் இங்கு வந்தேன்.''

''என்னால் உனக்கு ஏற்பட்ட அநுபவத்தை அதற்குள்ளாகவா மறந்துவிட்டாய், யசோதை? இன்ப வாழ்வை எண்ணி, அதற்காக இலட்சியங்களைப் பலிகொடுத்தேன். இவனை, இந்த போக வாழ்வை அநுபவித்துக் கொண்டே, இசையுலகில் நீ எண்ணுவது போல் இருப்பான் என்று எண்ணுகிறாயா?''

''எனது தாயன்புக்குள் அடைபட்டுக் கிடக்கும் அவன், இசை மரபு வாழ்க்கை நெறியைக் காப்பான். இதில் ஐயமே இல்லை.''

''உறுதி உனக்கிருந்தால், வெற்றி நிச்சயம்தான். யசோதை, ஆனாலும் புலனின் பற்றுக்காகக் கலையின்பத்தைப் பறிகொடுத்த என்முன் அவன் இசையில் வளர முடியாது. எனக்கும் ஏகாந்த வாழ்க்கையே இனி தேவை. இறைவனைத் தொழுது இசை பாடி எங்கும் அலையப் போகிறேன் நான்.''

அதற்கு மேல் பேசாமலும், அவளுடைய பேச்சைக் கேட்காமலும் அங்கிருந்து நகர்ந்தார் திருஞானசம்பந்தம்.

அவரது பாதம் பதித்த இடத்தை தன்னுடைய கரங்கள் இரண்டாலும் தொட்டுத் தடவி ஈரக் கண்களில் பக்தி உணர்வோடு ஒற்றிக் கொண்டாள் யசோதை.

வட்ட மேஜை

- ☐ மூதிய இளையவர்
- ☐ ஏன் இந்த ஏற்றத் தாழ்வு?
- ☐ பாலும் கிராம்பும்
- ☐ விவசாயிகளே, உஷார்!
- ☐ "ஸ்வாமிகள் தந்த வரம்"

ஞானசிரியர் ராஜாஜி அவர்கள் மொழி வாரிப் பிரிவினையின் அருவருப்பான விளைவுகளைக் களையத் தம்மைவிட வயதில் சிறிய ஒருவரை மக்கள் விரும்பி யிருக்கலாமென்று எழுதியுள்ளார்கள். ஆனால் பாரத மக்களோ ராஜாஜியையே முதுமையின் விவேகமும் இளமையின் வேகமும் ஒருங்கே அமையப் பெற்ற மகத்தான தலைவராகக் கருதி, அவரிடமிருந்தே பரிகாரங்களை எதிர்நோக்கி யிருக்கிறார்கள். நாட்டின் விமோசனத்துக் கான ஜீவசக்தி ராஜாஜியிடம் இன்னமும் வற்றாத ஊற்றெனச் சுரந்து கொண்டிருக்கிறது. எனவே ராஜாஜி அவர்கள் தமது முதுமையினைக் காரணம் காட்டித் தேசப் பணியிலிருந்து ஒதுங்கிக் கொண்டு விடலாகாது. இன்று அவரை விட்டால் நமக்கு வேறு நாதியில்லை.

சென்னை–4 என். கே. அரவிந்தன்

மானியக் கமிஷன் சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டு கல்லூரி ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்திய நம் அரசாங்கம், கோத்தாரிக் கல்விக் கமிஷன் சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டு பள்ளி ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தத் தயங்குவது ஏன்? ஒரு பி. ஏ. அல்லது பி. எஸ்ஸி. பட்டதாரி கல்லூரி ஒன்றில் 'ட்யூட்டர்' அல்லது 'டிமான்ஸ்ட்ரேட்'ராகப் பணியாற்றினால் அவருக்கு அடிப்படை ஊதியம் ரூபாய் இருநூறு ஆகும். அவர் ஒரு வாரத்துக்குச் சுமார் பதினைந்து மணி நேரம் உழைக்கிறார். ஆனால் மேற் கூறிய பட்டத்துடன், ஒரு பயிற்சிப் பட்டமும் பெற்று, ஒரு பள்ளியில் பணிபுரியும் பி. டி. ஆசிரியருக்கு அடிப்படை ஊதியம் ரூபாய் நூற்றி நாற்பது மட்டிலும் ஆகும். இவர் ஒரு வாரத்துக்குச் சுமார் இருபது மணி நேரம் உழைக்கிறார்.

கோத்தாரிக் கல்விக் கமிஷன் சிபாரிசுகளை அமுல்படுத்த ஆண்டுதோறும் அதிகப்படியாகப் பல கோடி ரூபாய்கள் செலவாகும் என்று கூறப்படுகிறது. கல்விக்காக இந்தக் கூடுதல் தொகை ஒன்றும் அதிகம் இல்லை. மேல் சபையில் திரு ராஜா அய்யர் எம். எல். ஸி. அவர்கள் கூறியபடி ஒவ்வொரு மாணவரிடமிருந்து 'குரு தட்சிணை' யாக ஒவ்வொரு ரூபாய் வசூலித்தாலே ரூபாய் ஒன்பது கோடிகள் கிடைக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சென்னை வெ. அரசு

முன் நிர்ணய விலையில் கூட்டுறவுக் கடைகளிலோ, அல்லது சற்றுக் கூடுதல் விலையில் பகிரங்க மார்க்கெட்டுகளிலோ தாராளமாய்க் கிடைத்து வந்த பாலுணவுகள் சர்க்காரின் சீரான விநியோகம் என்ற கெடுபிடியால் ஒரேயடியாக மார்க்கெட்டை விட்டு அந்தர்த்தானமாகி விட்டன.

கூட்டுறவுக் கடைகளில் மட்டுமே நிர்ணய விலையில் அங்கத்தினர்களுக்கு மாத்திரம் மாதத்துக்கு ஒரு டின் என்று கொடுத்து வந்தவர்கள், இப்போது ஒரு கிலோ டின்னுக்கு 100 கிராம் கிராம்பு (ரூ. 3.50) கட்டாயம் வாங்கித்தான் தீரவேண்டும் என்கிறார்கள். கிராம்பை வாங்கி என்ன செய்வது? வேறு ஏதாவது உபயோகிக்கும் பண்டமாக இருந்தாலும் பரவாயில்லை என்றால், 'என்ன செய்வது, இது மேலிடத்து உத்தரவு' என்ற பதில் கிடைக்கிறது. இது எந்த மேலிடத்து உத்தரவோ அந்தப் பரந்தாமனுக்குத்தான் வெளிச்சம். குழந்தைச் செல்வங்களிடம் மாறாத அன்பு கொண்ட நமது மாநில முதல் அமைச்சர் இவ்விஷயத்தில் ஆவன செய்வார் என்று நம்புகிறேன்.

மதுரை எம். எஸ். சபாபதி

கல்கி 22-10-67 இதழில் வெளியான தலையங்கம் தக்க சமயத்தில் எழுதப்பட்டிருப்பது தனிச் சிறப்பு. வறுமை என்ற பலவீனத்தை அரசியல்வாதிகள், குறிப்பாக இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் கருவியாக்கிக் கொள்ள விவசாயிகள் இம்மியும் இடம் அளிக்கக் கூடாது. அதனால் ஏற்படும் பாதகங்கள் விவசாயிகளைத்தான் பாதிக்கும். 'ஏமாறுகிறீர்கள், புரட்சிகள் பின்னால் திருந்துவதில்லை' என்ற ஆபிரகாம் லிங்கனின் எச்சரிக்கையைச் சம்பந்தப்பட்டவர்கள் நினைவுகொள்வாராக.

பல்லாவரம் இரா. பாலாஜி

கல்கி 29-10-67ல் வெளியாகியுள்ள திரு ரா. கணபதி அவர்களின் 'ஸ்வாமிகள் தந்த வரம்' என்ற சிறுகதை என் உள்ளத்தைக் கனியச் செய்தது. அனுதினமும் வாழ்க்கைச் சூழலில் அலைமோதப்படும் என்போன்றோருக்கு இதுபோன்ற கதைகளால் சாந்திக்கு வழி பிறக்கும்.

சென்னை–18 செல்வா ராமச்சந்திரன்

"ஸ்வாமிகளின் படத்தின் கீழ்ப் பாகத்தில் இன்னொன்று உட்பியிருந்த மல்லிகை மாலையின் குஞ்சத்தை மீண்டு தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தான்" என்று முடித்திருக்கும் ரா. கணபதி அவர்கள், வாசகர்களின் நெஞ்சத்தையும் தட்டி எழுப்பி விட்டார்.

நெய்வேலி ஏ. தேவநாதன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.

Managing Editor: T. Sadasivam.

ப்ரூக் பாண்ட்

பான்

இன்ஸ்டன்ட் காபி

எப்பொழுதும் அப்பொழுதே வறுத்த மணத்துடன் கூடியது



ஒரு டின் பான் வாங்குங்கள். அதில் அசல் காபி அருந்திய திருப்தி அடைவீர்கள். சுடு தண்ணீர் ஊற்றியவுடன் பானிலிருந்து "கம்" என்று எப்பொழுதும் அப்பொழுதே வறுத்த மணத்துடன் கூடிய அசல் காபி உருவாகிறது. ஞாபகமிருக்கட்டும் — பான் நூற்றுக்கு நூறு பரிசுத்தமான காபி.

பான் பொறுக்கி எடுத்த காப்பிக் கொட்டைகளிலிருந்து தயாரிக்கப்பட்டு, அதன் மணமும், குணமும், புதுமையும் குன்றுதிருக்க காற்றுப் புகாத ஸீல் வைக்கப்பட்ட டின்களில் உங்களுக்கு வருகிறது. மணம், குணம் திடம் நிறைந்த பான் இன்ஸ்டன்ட் காபி இன்றே வாங்கிப் பாருங்கள். அது தனிச் சிறப்பு வாய்ந்தது; ஏனென்றால் "எப்பொழுதும் அப்பொழுதே வறுத்த மணத்துடன் கூடியது."

அதை தயார் செய்வதோ மிகச் சுலபம்!
நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு தேக்கரண்டி பானுக்கு சுடு தண்ணீர் சேர்க்க வேண்டியதுதான். உடனே "கம்" என்று எப்பொழுதும் அப்பொழுதே வறுத்த மணத்துடன் கூடிய அசல் காபி உருவாகிறது. அதை உபயோகித்துப் பாருங்கள். எவ்வளவு கப் வேண்டுமானாலும் தயாரிக்கலாம்—பான் அசல் காபி.



"அற்புதமான பான்
இன்ஸ்டன்ட் காபி –
அதற்காக நான் காத்திருந்தேன்."

167ஜ 6-TAM

Registered as a Newspaper in Ceylon
REGISTERED No. M. 4392

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி